
# திருக்கோயில்

சனவரி - பிப்ரவரி 1985 விலை ரூ. 4





மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலைச் சார்ந்த தெப்பக்குளம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் இரண்டரை லட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்தை அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைக்கிறார். அறநிலையத்துறை ஆணையர் திரு. கு. ஆளுடைய பிள்ளை, ஐ.ஏ.எஸ்., மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். வரதராஜுலு ஐ.ஏ.எஸ்., அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தின் தக்கார் வி. என். சிதம்பரம் மற்றும் துணை ஆணையர் திரு. த. நாகராசன் ஆகியோர் உடன் உள்ளனர்.

முகப்பு

அருள்மிகு
வள்ளிமலை முருகன் கோயில்
முன்புறத் தோற்றம்

# திருக்கோயில்

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை : 27 | திருவள்ளுவர் ஆண்டு 2016, ரக்தாட்சி ஆண்டு, தை—மாசி ஜனவரி, பிப்ரவரி 1985 விலை ரூ. 4-00 | மணி : 1, 2 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்
உயர்திரு
**ஆணையர் அவர்கள்**
**அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை-600034**
என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம் சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா**
**உள்நாடு ரூ 24.00**
**வெளிநாடு ரூ 36.00**

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும். தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில் புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

## பொருளடக்கம்

திருச்செங்கோட்டு மலைப்பாதை அடிக்கல் நாட்டு விழாவில் அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய உரை.

திருக்குறளில் விஞ்ஞானம்
—முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம்

மகான் பசவர்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

மணிமேகலை உணர்த்தும் அருளறம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

கற்கண்டுக் கந்தப்புராணம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

அரசு கவிஞர்—குலசேகராழ்வார்
—டாக்டர் ந. சஞ்சீவி

திருமுறைகளில் திருக்குறள்
—திரு கி. பழநியப்பனார்

அருங்கலை வளர்த்த அருள்மொழி வர்மன்
—டாக்டர் இரா. கலைக்கோவன்

திருக்கோயில் ஆசிரியர் சித்தாந்தப் புலவர் மணி ந. ரா. முருகவேள் மறைவுக்கு அஞ்சலி

தமிழகத் திருத்தலங்கள்
—புலவர் ஏறு ந. ரா முருகவேள்

# திருச்செங்கோட்டு மலைப்பாதை அடிக்கல் நாட்டு விழாவில்

## அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய உரை ....

சிறப்பு மிக்க இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு சட்டம் மற்றும் தொழிற்துறை அமைச்சர், என்னுடைய அன்பிற்குரிய சகோதரர் திரு பொன்னையன் அவர்களே! வணக்கத்திற்குரிய தவத்திரு சுந்தர சுவாமிகள் அவர்களே! அன்பிற்குரிய பெரியவர் காளியண்ணன் அவர்களே! அறநிலையத்துறை ஆணையர் அவர்களே! மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே! தமிழ்நாடு அரசு கட்டுமான கழகத்தினுடைய நிர்வாக இயக்குநர் அவர்களே! இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மலைச்சாலை அமைப்புப் பணிக்கு தங்களுடைய பணிகளை ஈடுபடுத்திக்கொண்டிருக்கின்ற திருப்பணிக் குழுவைச்சார்ந்த பெரியவர்களே! தாய்மார்களே! நண்பர்களே பெரியோர்களே!

இந்தத் திருப்பணிக்குழுவிற்குத் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைவராகவும் இணைத் தலைவராகப் பெரியவர் காளியண்ணன் அவர்களும், துணைத் தலைவராக அருமைச்சகோதரர் சட்டமன்ற மேலவை உறுப்பினர் காடு வெட்டி கண்ணப்பன் அவர்களும், இதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டு பணியாற்றுகின்ற பெரியவர்கள் பலரும் ஒருங்கே இணைந்து, நீண்டகாலமாக நிறைவேற்றப்பட இருக்கின்ற அல்லது நிறைவேற்றவேண்டும் என்று விரும்பிய இந்த மலைப்பாதை அமைப்புத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுகிற இந்த விழாவில் மலைப்பாதை அமைக்க முயற்சி எடுக்கின்ற தொடங்குகின்ற இந்த விழாவில் நான் கலந்து கொள்ள வேண்டும் என்று அன்போடுஅழைத்த அருமைச் சகோதரர் மாண்புமிகு பொன்னையன் அவர்களுக்கும், இந்தக் குழுவினருக்கும் என்னுடைய நன்றியை முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன்.

### அறநிலையத்துறையின் பங்கு

இங்கே முன்னாலே பேசிய பெரியவர்கள் எல்லாம் நீண்டகாலமாக இந்தப்பகுதிமக்கள் விரும்பி எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்தத் திட்டம் இன்றைக்கு அறநிலையத்துறை பொறுப்பேற்றுக்கொண்டு அல்லது அறநிலையத்துறைக்கு அமைச்சராக இருக்கிற நான் பொறுப்பேற்றுக்கொண்டு இன்றைக்குத் தொடங்கப் பெறுகிறது என்று பாராட்டியிருக்கிறார்கள். அந்த பாராட்டு என்பது முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இன்னும் ஊக்கம் அளிக்க வேண்டும் என்கிற வகையிலே அளிக்கப்படுகிற பாராட்டே தவிர உண்மையில் இந்த மலைப்பாதை அமைக்கின்றமுயற்சியில் முன்னின்று இன்றைக்கு நடத்திக்கொண்டு இருக்கின்றவர்—நடத்தி முடிக்க இருக்கிறவர்; அருமைச்சகோதரர் - உங்களுடைய தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சட்டத்துறை தொழிற்துறை அமைச்சர் திரு பொன்னையன் அவர்கள் என்பதை நானிந்த நேரத்திலே மகிழ்ச்சியோடும் பெருமையோடும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அறநிலையத்துறையோ அல்லது பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற நானோ இதற்கு ஆணைகள் பிறப்பிக்கலாம்; அல்லதுதுணையாக இருக்கலாம்; அல்லது நிதிகளைக் கூடச்சேர்த்துத் தரலாம். ஆனால் முயற்சி எடுத்து இத்தகைய ஒரு மிகப் பெரிய காரியத்தை நிறைவேற்றுவது என்பது இன்றைக்கு இருக்கின்ற நிர்வாக நடைமுறை சிக்கலில் எவ்வளவு கடினமான காரியம் என்பதை இந்தத்துறையிலே மிகுந்த அனுபவம் பெற்ற - நிர்வாகத்துறையிலே அனுபவம் பெற்ற பெரியவர்கள் திரு காளியண்ணனைப் போன்றவர்கள் உணர்ந்து கொண்டிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு சிக்கல் மிகுந்த ஒரு காரியத்தை - எப்படி எந்தக் காரியத்திலே ஈடுபட்டாலும் - தன்னை ஒரு தொண்டனாகக் கருதிகொண்டு விரைவுபடுத்தி தானே நேரிடையாக அதிலே ஈடுபட்டு காரியங்கள் முடிப்பதிலே மிகச் சிறந்த வல்லவராக விளங்குகின்ற அருமைச்சகோதரர் திரு பொன்னையன் அவர்கள் இந்த நிகழ்ச்சியிலேயும் இந்தப் பணியிலேயும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்

கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அவர்களுடைய முயற்சியினுடைய - செயற்பாட்டினுடைய சின்னமாகத்தான் எங்களைப்போன்றவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறோம், என்பதையும் நானிங்கே தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

## தளநாயகர் டாக்டர் புரட்சித்தலைவர்

ஆனால் எவ்வளவு முயற்சி எடுத்தாலும் அதற்கென்று இருக்கின்ற துறை அனுமதித்தால் அன்றி, அல்லது அந்தத்துறைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற அமைச்சர் அக்கறை காட்டினால் அன்றி, அந்த அதிகாரிகள் அதிலே ஈடுபடமாட்டார்கள் என்பதும் அரசு அதிலே தலையிடாதென்பதையும் தெரிந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே தான் இந்தப் பாராட்டுகளை எங்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒரு பகுதி பாராட்டை தமிழக அரசுக்கு அவர்கள் வழங்குகிறார்கள் என்று எடுத்துக்கொண்டால் இந்தப் பாராட்டுக்கு உரிய நாயகர் தமிழகத்தினுடைய தளநாயகர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் என்பதை நானிந்த நேரத்திலே மிகத்தெளிவாக எடுத்துச்சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

## அந்த ஒரு வார்த்தை

தலைமையுரை நிகழ்த்துகிறபொழுது நம்முடைய அமைச்சர் ஆன்மீகப்பணியைப் பற்றியும் ஆன்மீக உணர்வைப் பற்றியும்குறிப்பிட்டு இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அரசு அந்த அடிப்படையிலே தெளிவான கொள்கையைவகுத்துக் கொண்டு திட்டங்களை நிறைவேற்றிவருகிறது என்பதை அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான்அதைத் தான் இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். அவர்கள் சொல்லுகிற பொழுதே ஒரு வார்த்தையை இணைத்துச் சொன்னார்கள். திராவிடஇயக்க பாரம்பரியத்திலே வந்திருக்கிற அறநிலையத் துறை அமைச்சர் இதிலே ஈடுபாடுகொண்டு, இந்த அரசினுடைய முயற்சியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்- காரியங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற கருத்தை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்குள்ளே ஒரு மயக்கம் இருந்து கொண்டிருக்கிறது—தமிழகத்திலே சில பேருக்கு; அந்த மயக்கத்தைத் தெளிவுபடுத்தினால் அது பலனுள்ளதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

## திராவிட இயக்கமும் தேசிய இயக்கமும்

''திராவிடர் இயக்கம்'' ''திராவிடர் இயக்கம்'' என்று சொன்னால், அவர்கள் ஆன்மீக நெறிக்கு விரோதமானவர்கள்; ஆன்மீக உணர்வை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது ஆன்மீக உணர்வை அழிக்க விரும்புகிறவர்கள் என்கிற ஒரு கருத்தும், தேசிய பாரம்பரியம் என்று சொன்னால் அவர்கள் இந்த உணர்வுகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு வளர்க்கிறவர்கள்; காப்பாற்றுகிறவர்கள் என்கிற ஒரு கருத்தையும் தெரிந்தோ தெரியாமலோ அதற்கு ஆதாரம் இருக்கிறதோ இல்லையோ கொஞ்சகாலமாக பலபேர் அந்தக் கருத்தை சமுதாயத்திலே பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன் பலபேருக்கு வரலாறே தெரியாது. வரலாற்றைத் தெரியாமலே—திராவிட இயக்கம் எப்போது தோன்றியது என்பதைக் கூட உணராமலே—அல்லது பிராமணர் அல்லாதார் இயக்கம் அல்லது ''நீதி கட்சி'' என்று அழைக்கப்படுகிற இந்த திராவிட இயக்கத்தினுடைய ஆணிவேராக இருக்கின்ற அந்த இயக்கத்தினுடைய வரலாற்றைப் புரிந்து கொள்ளாமலே அந்த இயக்கத்தை உருவாக்கிய தலைவர்களைப் புரிந்து கொள்ளாமலே கூட பல பேர் இடைக்காலத்திலே அரசியல் நிகழ்ச்சிகளின் தொடர்பாகச் சொல்லப்பட்ட கருத்துக்களை மாத்திரம் எடுத்து வைத்துக் கொண்டு இந்த இயக்கத்தினுடைய வரலாற்றையே மாற்றிச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த இயக்கத்தோடு தொடர்பற்றவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள் என்று நான் சொல்லமாட்டேன். இந்த இயக்கத்திலேயே இருக்கின்றவர்களாகத் தங்களைக் கருதிக் கொண்டிருக்கிறவர்கள் - பாரம்பரியம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்களே கூட அந்த தவறான உணர்வுகளுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதை நானிங்கே மிகத்தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

## திராவிட இயக்கத்தினர் ஆன்மிகத்தை வளர்த்தவர்களே

திராவிட இயக்கம் என்று சொல்லுகிறஇந்த இயக்கத்திற்கு விதை விதைத்தவர்கள், நீங்கள் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை என்று எடுத்துக் கொண்டால் அவர் ஆன்மீகத்திலே நம்பிக்கை உள்ளவர் தான். அதற்குப் பிறகு இதற்கென்று ஒரு வடிவம் கண்டு இயக்கத்தைக் கண்டவர்கள் சர். பி. தியாகராயச் செட்டியார் என்று எடுத்துக் கொண்டால் அவரும் ஆன்மீகத்திலே முழுமையான நம்பிக்கை கொண்டவர்தான. டி. எம். நாயர் என்று சொல்லுவீர்களானால் அவரும் நாத்திகவாதி அல்ல; அல்லது பனகல் அரசர் என்று எடுத்துக்கொண்டால் அவரும் நாத்திகத்திற்கு துணை போனவர் அல்ல. இல்லை இவர்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு, அதற்கு பின்னாலே வந்திருந்த சர் பி.டி. இராஜன், சமீபத்திலே காலஞ்சென்ற செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியார் என்று நீங்கள் தொடர்ந்து திராவிட இயக்கத்துனுடைய வரலாற்றை உருவாக்கிக் கொண்டிருந்த தலைவர்களை —தயவு செய்து அந்த பட்டியலை எடுத்துப் பார்த்தால் அந்த திராவிடர் இயக்கம் என்பது ஆன்மீக நெறிக்கு விரோதமான ஒன்றுமல்ல. அவர்கள் ஆன்மீகத்தைப் புறக்கணித்தவர்களுமல்ல, மாறாகச்

.சொல்லப் போனால், அவர்கள் எல்லாம் ஆன்
மீகத்தை வளர்த்தவர்கள். அதை நாம் நினை
விலே வைத்துக் கொள்ள வேண்டும்.

சரி, இவர்கள் எல்லாம் அரசியல்வாதிகள்,
தமிழ்ப் புலவர்கள் அப்படி இருந்திருக்கிறார்
களா? தமிழுக்காக வாழ்ந்தவர்கள் — தமிழுக்
காகப் போராடியவர்கள்— தமிழைக்காத்த
வர்கள்—அதிலே தலை சிறந்தவராக விளங்கிய
வர்கள்—மறைமலையடிகளார் ஆவார்கள்.
நம்முடைய ஆளுடையபிள்ளை—ஆணையர்
இருக்கிறார்களே ! அவர்களுடைய முன்
னோர்கள். அவர்களுக்குச் சொந்தக்காரர்கள்.
அவர் மிகச்சிறந்த தமிழறிஞர், தனித்தமிழி
யக்கம் கண்டவர், தனித்தமிழைப்படைத்த
வர். அவர்—நம் மறைமலை அடிகளார்—
அவரும் ஆன்மீகத்திலே நம்பிக்கை உள்ளவர்
தான். இந்த நாட்டிலே இந்தி திணிக்கப்படுகிற
பொழுது எதிர்த்து நின்று போராடியவர்கள்
தமிழ்ப்புலவர்கள் அத்துணை பேரும் ஆன்
மிகத்திலே நம்பிக்கை உடையவர்கள்தான்.

## தந்தைப் பெரியார் ஆன்மீகத்தை வெறுத் தாரா?

ஆகவே, எங்கே வருகிறது ஆன்மீகத்
துக்கு விரோதமென்று எங்களாலே புரிந்து
கொள்ள முடியவில்லை. இவர்கள் பலபேர்
தந்தைப் பெரியாரை நினைத்துக் கொண்டிருக்
கிறார்கள். தந்தைப் பெரியாரும் ஆன்மீகத்
தினாலே நடத்தப்படுகிற சில சம்பவங்களைக்
கண்டித்திருக்கிறார்கள். அதனாலே ஏற்
படுத்தப்பட்டிருக்கின்ற ஆளுகிற முறையை
ஆதிக்க முறையைக் கண்டித்திருக்கிறார்கள்.
அந்த உணர்வினாலே சமுதாயத்திலே ஒரு
மூட நம்பிக்கை வளர்ந்து கொண்டிருக்கிறது,
என்பதைக் கண்டித்திருக்கிறார்கள். ஒட்டு
மொத்தமாக ஆன்மீக உணர்வே இந்த சமு
தாயத்திற்கு தேவை இல்லை என்று அவர்கள்
என்றைக்கும் சொல்லவில்லை. கடவுள் இருக்
கிறாரா இல்லையா என்கிற பிரச்சினையில்
கருத்தைத் தெரிவித்திருந்தாலும், தந்தைப்
பெரியார் அவர்கள் எந்தக்கொள்கையைப்பற்றி
யும் ஒரு முடிவான கருத்தை எல்லாக் காலத்தி
லும் சொல்லவில்லை என்பதும் அவருடைய
வாழ்க்கையோடு இணைந்திருக்கிறது.

காரணம் எங்களைப் போன்றவர்கள் 12,
13 வயதிலிருந்து அவரோடு தொடர்ந்து
தொண்டர்களாக இருந்துகொண்டிருக்கிற
வர்கள். அவர்கள் இந்த சமுதாயத்திலே ஆன்
மீகத்தை அழிக்க வேண்டும் என்று எண்ணி
யிருந்தால் அவருடைய மூதாதையர்கள், பாட்ட
னார், தகப்பனார் ஏற்படுத்திய ஆலயம்
இன்றைக்கும் ஈரோட்டிலே நடந்து கொண்டி
ருக்கிறது. அதை முதலிலே மூடியிருப்பார்.
அவர்களுடைய தந்தையார் வெங்கட்ட நாயக்
கர் ஏற்படுத்திய கட்டளைகள்—ஆலயங்கள்
இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன.
அவர் தடுத்திருந்தால்-மூடியிருந்தால் யாரும்
அவரைப் போய்க் கையைப் பிடித்து நிறுத்தி
யிருக்க முடியாது; இன்னும்சொல்லப்போனால்
பிள்ளையாரை உடைக்க வேண்டும் என்று
சொன்னபோதுகூட எங்கேயும் பாதுகாப்பாற்று
அரச மரத்தடியிலே பல்லாயிரக்கணக்கான
பிள்ளையார்கள் இந்த நாட்டிலே வணங்குகிற
உருவங்களாக இருக்கிற இந்தச் சமுதாயத்தில்
ஒரு பிள்ளையாருக்கும் சேதம் விளைக்காமல்,
மண்ணாலே செய்து உடைக்கச் சொன்னாரே
தவிர இருக்கிற பிள்ளையாரை உடைக்கச்
சொல்லவில்லை.

## அஸ்திவாரம் ஆன்மீகமே

அவர்கள் சொல்லியிருந்தால் எத்தனை
பிள்ளையார் சிலைகள் இல்லாமல் போயிருக்
கும்? இன்றைக்குப் பாதுகாப்பாக நாம் பூட்டி
வைத்திருக்கின்ற ஆலயத்திற்குள்ளேயே
சென்று, களவாடிக்கொண்டு செல்கிறார்களே
கள்ளர்கள்—கயவர்கள். ஆகவே, ஒரு
உணர்வை நான் சொல்லுவதற்குக் காரணம்,
பல பேர் தவறாகப் புரிந்துகொண்டிருக்
கிறார்கள். திராவிட இயக்கம் என்றாலே ஆன்
மீகத்திற்கு விரோதம் அல்லது விரோதமாக
இருக்க வேண்டும் என்று. நான் அவர்கள் அனை
வருக்கும் சொல்லுவேன். அவர்கள் இந்த இயக்
கத்தில் இருந்தாலும் சரி, அல்லது மாற்றுக்
கட்சியிலே இருந்தாலும் சரி - இந்த இயக்கத்
தினுடைய தொடர்ந்த வரலாறுகள் இதனு
டைய அஸ்திவாரம் ஆன்மீக நெறியிலேகட்டப்
பட்டது. இன்றைக்கு இந்த உலகத்தினுடைய
சமுதாயம் ஆன்மீக உணர்விலே கட்டப்பட்டி
ருக்கிறது.

## எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் சரி

நாம் நின்று பேசிக்கொண்டிருக்கிற இந்த
மண் சாதாரண மண் அல்ல. நம்முடைய
வ ஈக்கத்திற்குரிய அடிகளார் அவர்கள் திருச்
செங்கோட்டிலே இருக்கிற செங்கோட்டு
வேலனைப் பற்றி - அவர்கள் அந்த உணர்வு
களைச் சொன்னார்கள். அவர்கள் நாமெல்
லாம் வருந்துகிற - கண்ணீர் வடிக்கின்ற அந்தச்
சூழ்நிலைக்கு ஆளான விபத்திலே சிக்கி இன்
றைக்கு மீண்டும் நம்மிடத்தில் வந்து உட்
கார்ந்திருக்கிறார்கள். இந்த அறப்பணியிலே
தம்மை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள்
என்பதற்காக அவரைக் காப்பாற்றிய அந்த
இறைவனுக்கு நம்முடைய வாழ்நாள் முழு
வதும் நம்முடைய நன்றியைச் செலுத்தக்
கடமைப்பட்டிருக்கிறோம். இறைவன் தான்
காப்பாற்றினானா என்று எங்களுடைய பகுத்
தறிவுவாதிகள் கேட்பார்கள். அதைத்தான்
அவர்களே சொல்லிவிட்டார்கள். சரிஇயற்கை
காப்பாற்றியதாக வைத்துக் கொள்ளுங்கள்
என்று.

ஏனென்றால்இறைவன்-ஆண்டவன்தன்னை
எந்தப் பெயரிட்டு அழைக்கிறார்கள் என்று
அவன் கவலைப்படுவதில்லை. ஆனால் ஏதா
வது ஒரு பெயரிட்டு அழைக்காமல் நீ வாழ
முடியாது என்பதை அவன் உருவாக்கி வைத்

திருக்கிறார். நீ இறைவன் என்றாலும் சரி, சிவனென்றாலும் சரி, முருகன் என்றாலும் சரி, வேறு எந்தப் பெயரிலே அழைத்தாலும் சரி-இல்லை இல்லை நான் அந்தப் பெயரிலே அழைக்கமாட்டேன். இயற்கை என்று தான் சொல்லுவேன் என்று சொன்னாலும் சரி, ஒன்றை நீ சுட்டிக்காட்டியாக வேண்டும். என் னாலே அவர் பிழைத்தார்; எவராலும் சொல்ல முடியாது. என் ஈாலே அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்; அவரைப் பெற்றவர்களே சொல்ல முடியாது. ஆகவே தான், நம்மை யெல்லாம் தாங்கிய ஒரு தத்துவம் இருக்கிறது. அதைத்தான் திருமூலர் மிகத் தெளிவாகச் சொன்னார். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' பேரறிஞர் அண்ணா அவர்களே இந்த நீதிக் கட்சியினுடைய சமயத்தத்துவத்தை — சமு தாயத்தத்துவத்தைச் சுருக்கிக் காட்டித் திரு மூலருடைய அந்த திருமந்திரத்தை திராவிட முன்னேற்றக்கழகத்தினுடைய சமயக்கொள்கை யாக - சமுதாயக் கொள்கையாகத் தெரிவித் தார்.

ஆகவே இன்றைக்கு அப்படிப்பட்ட இறை யருளாலே அவர்கள் நம்மிடத்திலே வந்து இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்தத் திருச்செங்கோட்டு வேலனைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். அதிலேநமக்கு ஒன்றும் அல்லது மற்றவர்களுக்கொன்றும் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

## பெயர்கள் பலவானாலும் பரம்பொருள் ஒன்றே

இறைவனைப் பலபெயரிட்டு அழைக்கிறோம். இங்கே கூட இந்தத் திருப்பணியிலே கூடியிருக் கிறவர்கள் எல்லாம் எவ்வளவு சிறப்பாகப் பொருந்தி வருகிறார்கள் என்று, அவர்கள் ஒவ்வொரு பெயராகச் சொல்லி இணைத்து அற்புதமாகச் சொன்னார்கள்.

இன்று இயற்கை என்று சொல்லுகிறவன் எப்படி சொல்ல வேண்டும்; ஆணை ஆணென்று கூப்பிடுவேன், பெண்ணை 'பெண்' என்று கூப் பிடுவேன். அது தானே சொல்ல வேண்டும். இயற்கையினுடைய படைப்பு இரண்டு. நான் ஆணையெல்லாம் ஆணென்று சொல்லுவேன்; பொன்னையன் என்கமாட்டேன்; வீரப்பன் என்கமாட்டேன்; சுந்தரசுவாமிகள் என்று சொல்லமாட்டேன்; காளியண்ணன் என்று சொல்லமாட்டேன்; வெங்கடேசுவரன் என்று சொல்லமாட்டேன்; வரதராஜன் என்று சொல்லமாட்டேன்; நான் ஆண்; சேலைக்கட்டி யவர்கள் எல்லாம் பெண்கள்; இதுதானே சொல்லவேண்டும்! எப்படி பெயர்களை எல்லாம் வைத்துக் கொண்டு அழைக்கிறோம். வெங் கடாஜலபதி என்கிறோம்; வரதராஜன் என் கிறோம்; காளியண்ணன் என்கிறோம்; வீரப்பன் என்கிறோம்; வீரப்பன் என்கிறதனாலே நான் ஆணில்லை என்று ஆகிவிடுகிறேனா?

## தலையை அடகு வைத்தாகிலும்

எங்கே பெயர்வருகிறது? எப்படிபெயரிட்டு அழைக்கிறோம். நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்று, நம்முடைய முன்னோர்கள் என்ன அவ்வளவு முட்டாள்களாகவா இருந் தார்கள்? அவ்வளவு முட்டாள்களாக இருந் திருந்தால் 2000 ஆண்டுகளுக்கு முன்னாலே அந்த குன்றின் மேலே இந்த ஆலயத்தை எழுப்பி இருக்க முடியுமா? ஒரு மதிற்சுவரை நம்மாலே கட்ட முடியவில்லை. இங்கே மிகச் சுலபமாக சொல்லி விட்டார்கள். அதிலும் நம்முடைய அடிகளார் அவர்கள், ஒரு சிக்க லான ஒரு வார்த்தையை நான் சொன்னதாக எனக்கு ஞாபகம் கூட இல்லை. தலையை அடகு வைத்தாவது இந்த மலைப்பாதையை அமைப்பேன் என்று நான் சொன்னதாக அவர்கள் சொன்னார்கள். நான் என்ன சொல்லுகிறேன் என்றால் நாங்களெல்லாம் அரசியல்வாதிகள், சொல்லுவதை சில நேரத் திலே மறப்பதற்காகவே கூடசொல்லுவதுண்டு. ஒரு வேளை முன்னாலே இருப்பவர்களுக்குக் கொஞ்சம் வேகம் வரவேண்டும் என்பதற்காகச் சொல்லுவதுண்டு, அப்படி நல்ல எண்ணத்திலே எடுத்துக் கொள்ளலாம். சேசே! என்ன! இவர் தலையை அடகு வைக்கிறேன் என் கிறாரே! இவருடைய தலை நமக்கு கொஞ்சம் வேண்டிய தலை. ஆதலினாலே நாமெல்லாம் சேர்ந்து அந்த காரியத்தை தடுத்து நிறுத்தி விடுவோம்; நிதியைத் தந்து விடுவோம் என்ற உணர்வு பலருக்கு ஏற்படட்டுமே என்பதற் காகக்கூட நான் அவ்வாறு பேசியிருக்கக்கூடும்.

## அடிக்கல் நாட்டுவது என்றால் அச்சம்

ஆகவே அப்படிப்பட்ட உணர்வோடு இன் றைக்கு இந்த மலைச்சாலை அமைக்கவேண் டும் என்பதற்காக எத்தனை ஆண்டுகள்முயன்று கொண்டிருக்கிறார்கள். அறுபத்தைந்திலே, அறுபத்தாறிலே இதே கால்கோள் விழா போட்டதாக அன்றைக்கும் சொன்னார்கள். அதனாலே தான் எனக்குப் பல இடத்திலே— அதுவும் இந்த அறநிலையத்துறை சார்பிலே- கால்கோள் போடுவதென்றால் மிகப்பெரிய அச்சம். வேறு நிர்வாகத்துறையிலே கூட அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. நான் இல்லை யென்று சொல்லவில்லை. எங் களுடைய புதுக்கோட்டை நகரத்தில் இன் றைக்கு 40 லட்சம் ரூபாய் செலவிலே ஒரு பேருந்து நிலையம் கட்டியிருக்கிறோம். அதற்கு அஸ்திவாரக்கல் எப்போது போட்டார்கள் என் றால் 63, 64 ஆம் ஆண்டிலே போட்டார்கள். நம்முடைய புரட்சித்தலைவர் ஆட்சி வந்த தற்குப் பிறகுதான் அந்த நகரத்திற்கு 2ஆண்டு களுக்கு முன்னாலே ஒரு 20 லட்சம் ரூபாய்க்குத் திட்டம் போட்டு, முதற் கட்டத்தை முடித்து, இப்பொழுது 20 லட்ச ரூபாய் திட்டத்தை—

2வது கட்டத்தையும் நிறைவேற்றி, இன்னொன்று 15 லட்ச ரூபாய்க்கு மூன்றாவது கட்டத்தைத் தொடங்கியிருக்கிறோம். ஆகவே இந்த அடிக்கல் போடுவது என்பதிலே எங்களுக்கு மிகப்பெரிய அச்சம். நான் அடுத்த 17 ஆம் தேதியன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலே 'என்கண்' என்று சொல்லப்படுகிற அற்புதமான முருகனுடைய தலம். அங்கே ஒரு கல்யாண மண்டபத்தைத் தொடங்க இருக்கிறேன். அந்தக் கல்யாண மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டி 15 ஆண்டுகள். இன்றைக்கு 3 ஆண்டுகளுக்கு முன்னாலே நான் அதைப் போய்ப்பார்த்து, முடிப்பதற்காக 'பகீரதப் பிரயத்தனம்' என்பார்களே! அப்படி பிரயத்தனமெல்லாம் பட்டு இன்றைக்கு அதை முடித்துத் திறக்க இருக்கிறோம். இப்படி பல இடங்களில் நான் போகிற இடமெல்லாம் இந்த அடிக்கல்லைப் பார்த்துப் பார்த்து ஒரு அச்சம் வந்துவிட்டது.

## எவ்வளவு பெரிய திட்டம்

சாதாரண திட்டங்களுக்கு அப்படி ஒரு அச்சம் வருகிற நிலைமை என்றால் இந்த மலைப்பாதைக்கு - எவ்வளவு பெரிய் திட்டம்! அது சாதாரணமாகச் சொல்லி விடலாம். அதைத்தான் நம்முடைய வெங்கடாஜலபதி அவர்கள் சொன்னார்கள்; கட்டுமான கழகத்தினுடைய நிர்வாக இயக்குநர், சாதாரணமாக மலைப்பாதை அமைப்பதற்கும் சில வசதிகள் அதிலே இருந்திருக்க வேண்டும்; இருக்கவேண்டும். ஆனால் இந்த மலையிலே இது பூராவும் பாறையினாலே ஆனது ஒன்று. அது செங்குத்தாக இருப்பது ஒன்று. ஆகவே ஒரு செங்குத்தான பாறையிலே சுற்றிச்சுற்றி வருகிறவாய்ப்பு அந்த அளவுக்கு உயரம் வேண்டும். அப்படி உயரம் இல்லை யானால் சுற்றிச் சுற்றி வருவதிலேயும் சிக்கல் இருக்கிறது. ஒரு பகுதியிலே- ஒரு பாறையிலேயே வழியையும் போட முடியாது. இவ்வளவு சிக்கல்களுக்கிடையேதான் இதை எல்லாம் பார்த்துப் பார்த்து விட்டுப் போய் இருக்கிறார்கள்.

## பருவமழை பொழிவிக்கும் ஒரு சக்தி

சில நேரத்தில் இறைவன் இந்த மனிதனுக்குச் சில சக்தியை மாத்திரம் கொடுத்து விட்டு அதற்குப் பிறகு ''நீ தேடு'' என்றுதான் விட்டு வைத்திருக்கிறான். மழையை வேண்டுகிறபோது தருகிறான். தென்மேற்குப் பருவ மழை வருகிறது என்று நாம் திட்டமிட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். யார் உருவாக்குகிறார்கள்? monsoon செட்டாகிவிட்டது ஆங்கிலத்தில் சொல்கிறோம். வான்வெளியைப் பார்த்துச் சொல்லுவதற்குத்தான் கருவியை வைத்துக்கொண்டிருக்கிறோமே தவிர, இந்தத் தென்மேற்குப் பருவமழையை உருவாக்குகிற கருவி நம்மிடத்திலே இல்லை. ஆகவே தென் மேற்குப் பருவமழை மே மாதத்தினுடைய இறுதியிலே ஜூன் மாதத்தினுடைய 2வது வாரத்திற்குள்ளே வந்தாக வேண்டும். அந்த மழை பெய்தால்தான் 12ஆம் தேதி காவிரியிலே நம்முடைய அணையைத் திறக்க முடியும். நாங்கள் வருகிற பொழுது நம்முடைய அருமை நண்பர் லட்சுமணன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். இதற்கு முன்னாலே எல்லாம் இங்கே—திருச்செங்கோட்டுத் தேருக்காக இந்தப் பக்கத்திலே இருந்து வருகிறவர்கள் எல்லாம் தேர் ஓட தொடங்குகிற பொழுது அந்த ஆற்றைக் கடந்து நடந்து வருவோம்; தேர் ஓடி இழுத்து நிலையைச் சேர்ந்த பிறகு வீட்டுக்குத் திரும்புகிறபோது, பரிசலிலே போவோம் என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே குறிப்பிட்ட காலத்திலே அந்த ஆற்றிலே தண்ணீர் வருவது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அந்த தென்மேற்குப் பருவமழை பெய்தால்தான் இங்கே மேட்டூரிலே நாம் அணையைத் திறக்க முடியும். மேட்டூர் அணை திறக்காத காலத்திலேயே, மேட்டூர் அணை கட்டாத காலத்திலேயே, அப்படித்தான் இருந்திருக்கிறது. ஆகவே இந்த மேட்டூர் தண்ணீரை இன்றைக்கு—12ஆம் தேதி இன்றைக்குத் திறக்கிறார்கள். நேற்று வந்தவர்கள் நடந்து வந்திருக்கலாம். இன்றைக்கு இந்தத் தேரையெல்லாம் இழுத்து நிலைக்குச் சேர்த்துவிட்டு நீங்கள் போகிறபொழுது பரிசலில்தான் போக வேண்டும்.

ஆகவே இன்று புரட்சித் தலைவரின் ஆட்சியிலே இறைவனும் சேர்ந்து அருள்புரிந்து கொண்டிருக்கிறான் என்பது தெரிகிறதே தவிர இது யாருடைய அருளினாலே நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்? ஆகவே இது என்னாலே தான் நடக்கும் என்று சொல்ல முடியாத ஒரு சூழ்நிலையில் நம்மையெல்லாம் தாண்டுகிற ஒரு சக்தி இருக்கிறது என்று நம்பியிருக்கிறார்கள். அதற்கு வழிகாட்டியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.

## தமிழ் ஞானசம்பந்தன்

1,300 ஆண்டுகளுக்கு முன்னாலேயே திருஞானசம்பந்தர் ''தமிழ் ஞான சம்பந்தன்'' என்று பெயர் வைத்துக் கொண்டார். தமிழுக்காகப் போராடுகிறோம்; வாதாடுகிறோம் என்று நாங்களெல்லாம் மார் தட்டிக்கொண்டிருக்கிறோமே! கொஞ்சம் வரலாற்றை நமக்குச் சொல்லத் தவறிவிட்டார்கள். இந்தப் பெரியவர்கள் எல்லாம், தமிழுக்காக 1300 ஆண்டுகளுக்கு முன்னே போராடியவர் அன்றைக்கே அவர் தன்னுடைய பெயரைத் 'தமிழ் ஞான சம்பந்தன்' என்று மாற்றியமைத்துக்கொண்டிருக்கிறார். அது மாத்திரமல்ல. தமிழ் என்

கிற வார்த்தைக்குப் பல அடைமொழிகள் சொல்லிப் பல அடைமொழிகளாலே அழைத்த வர் திருஞானசம்பந்தர். ஐயாவைப்போன்ற வர்கள் சொல்லித்தான் நான் சொல்கிறேன். நானாக சொல்லவில்லை.

ஆகவே தமிழுக்குப் போராட்டம் அன்றைக்கே நடந்திருக்கிறது. போராடிய தலைவர்கள் அன்றைக்கே இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களை எல்லாம் சமுதாயத்திலே நாம் எடுத்துச் சொல்லாமல், அந்தத்தமிழ் ஞான சம்பந்தனையே புதைத்துவிட்டு நாம் தமிழைக் காப்பாற்றுவோம் என்று நாங்கள் மார்தட்டிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இருக்கிற பிரச்சினை இதுதான்.

## புரட்சித் தலைவரின் ஆட்சியிலே தான்

2,000 ஆண்டுகளுக்கு முன்னாலே 1,000அடி உயரத்திலே இந்தக் குன்றின் மேல் குமரருக்கு ஆலயத்தை எழுப்பியிருக்கிறார்கள். இளங்கோ வடிகள் இதைப் பற்றிப் பாடியிருக்கிறார். அப்படியானால் 2000 ஆண்டுகளுக்கு முன்னாலே திருச்செங்கோட்டிலே வாழ்ந்தவர்கள் எவ்வளவு சிறந்த அறிவு பெற்றவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு நான் என்ன எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் தான்மிகப்பெரிய புத்திசாலி. இந்த வெள்ளைக்காரன் கொடுத்த பாடத்தை எல்லாம் படித்துக் கற்றறிந்து இரவல் வாங்கிக்கொண்டு - கடன் வாங்கிக்கொண்டு-என்னைப் பெற்ற மூதாதையர்கள் ஒன்றும் தெரியாத முட்டாள்கள் என்று சொல்லுவதற்கு நான் கற்றுவைத்திருக்கிறேன்.

தயவு செய்து நாம் இந்த உணர்வைத் தான் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இவ்வளவு பெரிய எழுச்சி சமுதாயத்திலே தோன்றியிருக்கிறது ஆன்மீகத் துறையிலே என்றால் இது தனி மனிதர்களின் பணி அல்ல. இறைவனுடைய கட்டளை; இறைவன் காலத்தின் மூலம் கட்டளையிடுகிறான். அது இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. அது யார் காலத்திலே நடந்து கொண்டிருக்க வேண்டுமோ அது புரட்சித் தலைவரின் ஆட்சியிலே-காலத்திலே நடந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால் இறைவனும் விதிக்கின்ற பொழுது யார் மூலம் எந்த காரியம் நடக்க வேண்டும் என்பதாகத் தான் விதிக்கிறான். அதைத்தான் வள்ளுவரும் சொன்னார். யார் எதற்குத் தகுதியானவர்களோ அவர்களிடத்திலே அந்த வேலையை விட வேண்டும். அது இன்றைக்கு இறைவன் புரட்சித் தலைவரின் காலத்தில் தான் இது சத்தியமாக நடக்கும் என்று எண்ணித்தான் விதித்திருக்கிறான். காளியண்ணனைப் போன்றவர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். எங்கள் காலத்திலே நடக்கக் கூடாதா என்று? நடக்கவில்லையே! அதனால் தான் சொல்லுகிறேன். அடிக்கல் போட்டது அப்படியே இருக்கிறதே! நடந்திருந்தால் நாங்களும் இந்நேரம் மேலே போய்த்தானே பார்த்திருப்போம்.

## மலைமேல் ஆலயம் எதற்காக?

அவர்கள் சொன்னார்கள்! 'ஐயா! இளைஞர்கள் எல்லாம் மேலே ஏறிப்போய் விடுவார்கள். வயதானவர்கள் போக வேண்டாமா என்று, இன்றைக்கு வந்திருக்கிற அபாயமே இளைஞர்களாலேயே ஏற முடியவில்லை. அது தான் இன்றைக்குச் சமுதாயத்திலே நாம் ஏற்படுத்தியிருக்கிற கேள்வி! எதற்காக மலைமேலே ஆலயத்தைக் கட்டினார்கள்? ஒன்றும் முட்டாள் தனமாகக் கட்டவில்லை—இன்றைக்கு 30 வயது முடியாத வாலிபர்களுக்கெல்லாம் கூட திடீரென்று ஏதோ ஒரு நோய் வருகிறது—டாக்டரிடத்திலே போய் பரிசோதிக்கிறோம். உடனே அவர் என்ன சொல்கிறார்? உனக்கு சர்க்கரை வியாதி, ரத்தத்திலே சர்க்கரை! சிறுநீரிலே சர்க்கரை! சரி என்ன செய்ய வேண்டும்? நீ உடனே உணவைக் கட்டுப்படுத்திக்கொள். உணவிலேயே நிறுத்திகொள். அதற்கு மேலே என்ன செய்ய வேண்டும்? தினசரி நடந்து கொண்டே இரு. காலையிலே நடந்து பார். சாயந்திரத்திலே நட.

எதிரே நம்முடைய திருமதி பொன்னையன் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். மருத்துவத் துறையிலே நிபுணர். என்ன சொல்லுகிறார்கள்? காலையிலே நட, சாயந்திரம் நட, 2 மைல் நட, 3 மைல் நட, என்னையும் ஒரு 15 வருஷகாலமாக டாக்டர் சொல்கிறார் நட நட என்று, என்னாலே நடக்க முடியலே, அதற்காகவே தான் ஆண்டவனாப் பார்த்து இப்ப நடக்க வைச்சிருக்கிறார் என்னை, எத்தனைக் கோயில்! எத்தனை மலை! நான் இந்த மலையிலேயும் ஒருநாள் வந்து ஏறியாகணும்! அப்படி ஒரு வரம் எனக்கு இருக்கு! ஏன்னா போன வருஷம் நான் வந்தபோது ஏறாம விட்டுட்டேன். இந்த மலையிலே நான் ஏறியாகணும். அதைத்தான் சொன்னேன். இந்த ரோடு போடுறதுக்குள்ளே நான் படியிலே ஒரு தரம் ஏறியாகணும்! ஒரு நாளைக்கு இப்படி வரணும்னு வேறே சொல்லியிருக்கிறேன்.

## மூட நம்பிக்கைகள் அல்ல

என்ன நிலைமை? இன்றைக்கு 30 வயது, 35 வயது, 25 வயது பையன்களை ஏறச் சொல்லுங்கள்! இந்த சேஷசாயி கம்பெனியினுடைய நிர்வாகத்தலைவர் சித்ரா நாராயணசாமி. 75 வயது நிரம்பியவர். சென்ற ஆண்டு நாங்கள் இங்கே வந்தபோது அவர் இந்த மலையின் மீது ஏறி இறங்கி வருகிறார். காலையில் நடக்கிற பழக்கம் உள்ளவர். அவர் வந்து குமாரபாளை

அதைத்தான் நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இளைஞர்களை இன்றைக்குக் கட்டுப்படுத்த முடியவில்லை. நான் அதைத்தான் சொன்னேன். ஏதோ இளைஞர்கள் எல்லாம் நினைத்தாலே இதிலே ஏறிவிடுவது போலவும், நீங்களாவது கொஞ்சம் முயற்சி எடுத்தால்... சிலநேரத்திலே டாக்டர்கள் உங்களைத் தடுத்து வைத்திருப்பார்கள்! அங்கேஎல்லாம் ஏறாதீர்கள் என்று; ஏனென்றால் இப்பொழுது நம்முடைய ஆண்டவன் சுவாமிகள் இருக்கிறார்! அவரையும் அப்படித்தான் நடக்கக்கூடாதென்று தடுத்திருக்கிறார்கள்.

உண்மையிலேயே இரண்டுபேர் தான் இன்றைக்கு இந்தியாவிலேயே கால்நடையாகவே இந்த சமயப்பணியை தொடர்ந்து கொண்டிருக்கிறவர்கள். ஒருவர் நம்முடைய காஞ்சியிலே இருக்கிற பெரியவர். இன்னொருவர் வைணவ மதத்தைச் சார்ந்த ஆண்டவன் சுவாமிகள்; இவர்கள் இருவரும் தான் இன்றைக்கும் கால் நடையாகவே நடந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஆண்டவன்சுவாமிகள் சென்னைக்கு வந்திருக்கிறார். அவருக்கு திடீரென்று இதய நோய் என்று குறிப்பிட்டார்கள். டாக்டர்கள் எல்லாம் வந்தார்கள். Experts எல்லாம் Spealists எல்லாம், வந்து நீங்கள் காலையிலே இந்த பச்சை தண்ணீரிலே குளிக்கக் கூடாது, நடக்கக்கூடாது. இப்படி பல விவகாரங்களை எல்லாம் செல்லி ஏதேதோ மருந்துகள் சாப்பிடவேண்டும்; ஊசி போட வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள்; அதற்கு அவர் சொன்ன பதில்; நான் காலையிலே பச்சைத்தண்ணீரிலே குளிக்காமல் இருக்க முடியாது. நான் நடக்காமல் என்னுடைய பயணத்தை நிறுத்த முடியாது. ''ஆகவே அப்படியானால் ஏதாவது அபாயம் வந்துவிடும் ஆபத்து வந்துவிடும்'' வந்தால் போகட்டும். இந்த உடலை யார் தடுத்து நிறுத்தி என்ன செய்யப் போகிறேன்; என்றவர் சொல்லி விட்டு இன்றைக்கு அவர் சென்னையிலே இருந்து தொடங்கி, நடந்து குடந்தைக்கு வந்து கடந்த மாதம் 48 ஆண்டுகள் ஓடாமல் இருந்த அந்த சாரங்கபாணி ஆலயத்தினுடைய அந்தத் திருத்தேரை ஒட்டி, 8 நாட்கள் கடந்து, சுற்றி வந்து, கொண்டு வந்து நிலைக்கு நிறுத்திவிட்டு இப்பொழுது தஞ்சாவூரைத் தாண்டி நடந்து கொண்டிருக்கிறார்கள். அடுத்தது அங்கே தஞ்சாவூர் திருவையாற்றுக்கு வழியிலே இருக்கிற ஒரு ஆலயத்திற்கு திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்திவிட்டு ஸ்ரீரங்கம் வர இருக்கிறார். இதைச் சொல்லுவதற்குக் காரணம், இன்றைக்கு அவருடைய வயது 78, நம்முடைய காஞ்சிப் பெரியவர் 91 வயதைத் தொடங்குகிறார். இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறார். துறவியாக இருக்கிறார். இன்றைக்கும் அந்த 8 நாள் தேர் நிலைக்குப் போய் சேரும் வரை ஆண்டவன் சுவாமிகள் உணவு அருந்தவில்லை. அவர் தொடங்கி வைத்ததேர் நிலைக்குப் போகவில்லையானால் சாப்பிடக் கூடாது; 8 நாட்கள் அவர் உணவருந்தாமல் இருந்தார். அந்தத்தேர்—இழுக்கத்தொடங்கிய தேர்-நிலைக்கு வந்து சேருகிறவரை அவர் உணவருந்தவில்லை.

## ஆலயத்திற்குப் போனால் ஆஸ்பத்திரி தேவையில்லை

ஆகவே வாழ்க்கையிலே சில நெறிகளை நம்முடைய ஆன்மீகம் நமக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறது! அதை நடத்த முடியாத நாம் அதைக் கேவலப்படுத்திக்கொண்டிருக்கிறோம். என்னாலே முடியாது என்று சொல்லிவிடலாம். அதைக் கேவலப்படுத்தக்கூடாது. எனக்குத் தேவையில்லை என்று சொல்லலாம்; அது அவர் அனுபவிக்க வேண்டியது. அதற்காக நடத்துகிறவர்களை இழிவுப்படுத்தாதே! ஆகவே இன்றைக்கு இளைஞர்கள் என்ன உடல் வலிமை பெற்றிருக்கிறார்கள்? அதனாலே எனக்கிருக்கிற ஒரே கவலை; நான் அதையும் சொல்லி விடுகிறேன்; மலைப்பாதை போட்டால் கூட நான் சுவாமிகளுக்கும் சொல்கிறேன். இந்த படிகளின் மீது ஏறி அங்கே இருக்கிற மலை மீதிருக்கிற அந்த முருகனை நடந்து போய் பார்க்க வேண்டும்; பார்த்தால் தான் அவர்களுக்கு ஒரு நல்ல கதி வரும் என்பதையும் நாம் சொல்லிப் பாதுகாத்தாக வேண்டும். முடிந்தவன் மாதத்திலே ஒரு நாள் நடக்கட்டும். இல்லை 6 மாதத்திற்கொரு முறை நடக்கட்டும், இல்லை வாய்ப்பிருக்கிறவன் வாரத்திற்கொருமுறை கூட நடக்கட்டும். உடல் வலிவிற்காக; நீ டாக்டரிடம் போய் வீணாக ஏன் உன்னுடைய உடலைக்கெடுத்துக்கொண்டிருக்கிறாய்? ஆகவே ''வைத்தியருக்குச்செலவு செய்வதை வாணியனுக்குச் செலவு செய்'' என்று தமிழ்நாட்டிலே ஒரு பழமொழி! முறையாக இந்த எண்ணெய்த் தேய்த்துக் குளிக்கிற அந்த பழக்கத்தை வைத்துக் கொண்டிருந்தால் நோய் வந்துவிடாது என்று. ஆகவே நம்முடைய முன்னோர்கள் ஏன் இவ்வளவு பெரிய ஆலயங்களை எழுப்பினார்கள்? அந்த ஆலயங்கள் மிக உயர்ந்ததாக நமக்குத் தோன்ற வேண்டும். அதனுடைய புனிதம் நமக்குப் புரிய வேண்டும். அதற்காகத்தான் குன்றுகளின் மேலே கட்டி வைத்தார்கள். ஏறி இறங்க வேண்டுமென்பதற்காக; இன்றைக்கு முடியாமல் அவசரத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அவர்கள் சொன்னதைப்போல ரயில்பாதை கூட வரலாம். ஒரு காலத்திலே! அது வரட்டும். ஆனால் மனிதன் நடப்பதை நிறுத்தவே முடியாது.

## மனித வாழ்க்கை மண்ணோடு இணைந்தது

90 வயது நிரம்பியவர் பிர்லா. நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்! அவர் நடக்கிற பொழுது தான் காலமானார் லண்டன் நகரத்திலே, அவர் நினைத்தால் ஹெலிகாப்டரிலே போகலாம்; விசேஷ விமானத்திலே போகலாம், தனி விமானத்தில் போகலாம், விண்ணைச்சுற்றி வருகிறானே ரஷ்ய வீரனானாலும் சரி, இந்திய வீரனானாலும் சரி, அவன் கடைசியிலே வந்து மண்ணிலே தான் கால் வைத்தாக வேண்டும். நீ விண்ணிலே பறந்தாலும் மண்ணைத்தான் பார்க்கலாம். ஆகவே மண் தான் நாம் கடைசியாக வந்து சேருகிற இடம். ஆகவே ஹெலிகாப்டரிலே போனாலும் சரி, காரிலே போனாலும் சரி, விமானத்திலே போனாலும் சரி, மண்ணை மறந்து விடக்கூடாது. ஏனென்றால் மனித வாழ்க்கை மண்ணோடு இணைந்தது; மண்ணிலே தான் பிறக்கிறோம்; மண்ணிலே தான் மறைகிறோம். இந்த மண் சேர்ந்தது தான் மனித அமைப்பே. மலை, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம். இவை இன்றைக்கு விஞ்ஞானிகள் சொல்லித் தருகிறார்கள் நமக்கு. இளைஞர்களுக்கெல்லாம் ஏதோ விஞ்ஞானி கண்டுபிடித்துச் சொல்லித் தந்தான் என்று வெள்ளைக்காரன் சொன்ன பாடத்தை ஒப்பித்துக் கொண்டிருக்கிறோம்.

## நம் முன்னோர்களின் விஞ்ஞான அறிவு

நம்முடைய முன்னோர்கள் 5,000ஆண்டுகளுக்கு முன்னாலே சொல்லியிருக்கிறார்கள். பஞ்ச பூதங்களாலே ஆனதுதான் இந்த உலகம். இதைத் தொல்காப்பியம் சொல்கிறது! இதற்கு சிவாலயங்கள்-சைவத்திலே கண்டிருக்கிறோம். காஞ்சியிலே இருக்கிற ஏகாம்பரநாதர் ஆலயம் தான்மண்ணுக்கு உரிய ஆலயம். திருவண்ணாமலையிலே இருக்கிற அருணாசலேச்வரர் ஆலயம்நெருப்புக்கு உரிய ஆலயம். திருவானைக்காவிலே இருக்கிற ஆலயம் நீருக்கு உரிய ஆலயம். திருக்காளத்தியிலே இருக்கிற ஆலயம் காற்றுக்கு உரிய ஆலயம். சிதம்பரம் நடராஜர் ஆலயம், விண்—ஆகாயத்திற்குரிய ஆலயம். எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டது? ஐயாவைத் திருவாசகம் சொல்லச் சொன்னால் மாணிக்கவாசகர் இந்த அண்டத்தை கோளைப் பற்றிப் பாடியிருக்கிறாரே! இந்த உலகத்தைச் சுற்ற முடியும். உலகம் உருண்டை தான். விண் வெளியிலே பயணம் செய்ய முடியும் என்கிற தத்துவம் இல்லாமலா பாடினார்கள்? ''சந்திர மண்டிலத்தியல் கண்டு தெளிவோம்'' இப்பொழுது 65 ஆண்டுகளுக்கு முன்னாலே பாரதி பாடினானே! சந்திரமண்டலத்திற்கு என்றைக்குப் போனான் அமெரிக்கன்?எத்தனை ஆண்டுகள்? அவர் பாடுகிற காலத்திலே போக முடியும் என்று எவனாவது எண்ணினானா? அவருக்குத் தந்த உணர்வு எது—பாரதிக்கு? நம்முடைய முன்னோர்களுடைய விஞ்ஞான அறிவு.

இன்றைக்கு ஆலயத்தில் இருக்கிறதே நவகிரகம், வணங்குகிறோமே! இதை நவ கிரகம் என்று சொன்னதனாலே மூட நம்பிக்கை. இதைத்தானே ஒன்பது கிரகங்கள் என்று அவன் விஞ்ஞானி சொல்லிக் கொண்டிருக்கிறான். இந்த ஒன்பது கிரகத்தைத் தாண்டி, 10 ஆவது கிரகத்தை இப்பொழுது தான் இருக்கிறதா என்று ஆராய்ந்துகொண்டிருக்கிறான். சூரியனை மையமாக வைத்துத் தானே நவகிரக வழிபாடு இருக்கிறது! ஞாயிறிலே தொடங்கித் தானே வாரத்தையே வைத்திருக்கிறோம்! ஞாயிறு திங்கள் அதைத் தானே நம்முடைய இளங்கோ வடிகள் பாடுகிறார். ''ஞாயிறு போற்றுதும், திங்களைப் போற்றுதும்'' நம்முடைய முன்னோர்களுக்கு இந்த விஞ்ஞானக் கணக்கு தெரியாமல் எப்படி எழுதினார்கள்? எப்படி இன்றைக்கும்அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்களே சந்திர கிரகணம் சூரிய கிரகணம்; அன்றைக்கு அந்த நேரத்தில் தானே நடக்கிறது? வானத்தை ஆராயாமல் எப்படி கண்டுபிடித்திருக்க முடியும்?

## பெரியாரைப் புரிந்து கொள்ளவில்லை

இவ்வளவு ஆற்றலும் அறிவும் விஞ்ஞானமும் நம்முடைய ஆன்மீகத்திலே இருக்கிறது. ஒரு அறிவாளி - விஞ்ஞானியே சொல்லி இருக்கிறான். ''விஞ்ஞானி எங்கே தோற்கிறானோ அங்கே மெய்ஞ்ஞானம் பிறக்கிறது. இது விஞ்ஞானி சொன்னது. வெளிநாட்டுக்காரன் சொன்னது. நம்நாட்டுக்காரன் சொன்னால் இவர்கள் எல்லாம் பழைய பஞ்சாங்கம். ஆகவே தான் சொல்கிறேன்; இன்றைக்கு இந்த உணர்வுகள் காலத்தின் கட்டாயம்; இந்த வீரர்கள் வேண்டுமானால், சொல்லட்டுமே ஆலயத்தை எல்லாம் நான் இடித்துவிடுவேன், சொல் பார்ப்போம்; சொல்லிவிட்டு மக்களிடத்திலே வந்துநில் பார்ப்போம். என்ன இரட்டை வேடம் போடுவது?

புரட்சித் தலைவர் ஆட்சியிலே இது நடந்தால் இவர் பிற்போக்கு வாதியாகிவிட்டார், இவர் சனாதனிகளுக்கு வால் பிடிக்கிறார், பழமைக்குப் பின்னாலே போகிறார்; பகுத்தறிவுத் தந்தைப் பெரியாருடைய பெயரைச் சொல்லிக் கொண்டு ஏமாற்றுகிறார்; பெரியாரையும் புரிந்து கொள்ளாதவன், பெரியாருடைய சொத்தைக் கொள்ளையடிக்கத் தெரிந்திருக்கிறவன். இன்றைக்குப் புரட்சித் தலைவர் பெரியார் பெயரிலே ஒரு மாவட்டத்தை ஏற்படுத்தி மாவட்டத் தலைநகரங்களிலே பெரியாருக்கு நினைவுத்தூண் ஏற்படுத்தி அவர் பெயராலே இன்றைக்கு லட்சியங்களை வளர்த்துக்கொண்டிருக்கிறார் என்றால் நாங்கள் பெரியாரையும் தெரிந்தவர்கள், பெரியாருடைய லட்சியத்திற்கு உருவகம் தந்

பேரறிஞர் அண்ணாவையும் உணர்ந்தவர்கள். நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் இதிலே குழப்பம் இருக்கிறது. ஒரு மயக்கமிருக்கிறது. அதனாலே தான் சொல்லுகிறேன்.

## கோயில் கட்டியவன் முன்னோன் இல்லையா?

ஏதோ நாங்களெல்லாம் மூட நம்பிக்கைக்குப் பின்னாலே போய்க் கொண்டிருப்பதைப் போல, எது மூட நம்பிக்கை? சொல் ! நம்முடைய வாழ்க்கையிலேயே மூட நம்பிக்கை இருக்கிறது. நீ கோயிலுக்குள்ளே போய் வணங்கக் கூடாது என்கிறாய். சிலை இல்லை என்கிறாய்! நீ தெருவெல்லாம் சிலை வைக்கிறாயே? என்ன பொருள் இதற்கு? கடவுள் இல்லை என்று சொன்ன பெரியாருக்கே சிலை வைத்து அதற்கு மாலை போடுகிறோம். அதை வணங்குகிறோமே! என்ன பொருள்? எங்கே இருந்து வந்தது? ஒவ்வொரு ஆலயத்திற்குள்ளே நுழைகிறபோது, அந்த மன்னர்களுடைய பெயராலே கருவறை இருக்கிறது. நான் கடந்த மாதம் நெல்லைக்குப் போனால் அங்கே வரகுண பாண்டியன் ஈசுவரர். கடந்த வாரம் நான் திருச்சிக்குப் பக்கத்திலே ஒரு நகரத்திற்கு போகிறேன். சோழன் காலத்தில் கட்டப்பட்ட கோயில்; அந்தச் சோழனை வைத்து ஈசுவரர்.

ஆகவே எந்த காரணங்களாலே வந்திருக்கிறது என்பதல்ல, இவர்களெல்லாம் அறிவார்ந்த அடிப்படையிலே கட்டியிருக்கிறார்களா? எழுப்பியிருக்கிறார்களா? ஆன்மீகம் என்பது அறிவின் அடிப்படையிலே இருக்கிறதா இல்லையா? இதைத்தான் இன்றைக்கு நாம் தெளிவுபடுத்திக்கொண்டிருக்கிறோம்; நம்முடைய முன்னோர்கள் மிகச்சிறந்த அறிஞர்கள்; தயவு செய்து நினைவிலே வைத்துக்கொள்ளுங்கள். இல்லையானால், அவர்களுக்குப் பிறந்தவர்கள் நாம் இந்த அளவுக்காவது வந்திருக்கிறோம். அவர்களுடைய அறிவோடு போட்டியிட்டுப் பார்த்தால், நாம் அவர்களுடைய ஆயிரத்திலே ஒரு பங்கு. கல்லணையைக் கட்டியவன் நம்முடைய முன்னோன் என்கிறோம். கடல் கடந்து படையெடுத்தவன் ராஜ ராஜ சோழன், நம்முடைய முன்னோன் என்கிறோம். படையெடுத்தவன் முன்னோன்; கோயில் கட்டியவன் முன்னோன் இல்லையா? அவர் படையெடுத்து வென்றதற்கு அடையாளம் எங்கே? இராஜராஜ சோழனுக்கு அடையாளம் இன்று எங்கே இருக்கிறது. பெரிய கோயிலை விட்டால்? 1000 ஆண்டுகளுக்கு முன்னாலே எழுப்பிய ஆலயம் இன்றைக்கு இல்லையானால் நீ இராஜராஜ சோழனை எங்கே சொல்லுவாய்?

## அந்த உரிமை எவருக்கும் இல்லை

எவனாவது சொல்லலாம். காடுகளிலே இருந்து இன்றைக்கு வளர்ந்தவன்-நகரமாக்கியவன் ஆலயத்தினுடைய பெருமை தெரியாமல் இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளலாம். பாலைவனத்திலே இருந்து தோன்றி நாட்டை உண்டாக்கிக் கொண்டிருக்கிறவன்—400 ஆண்டுகள் 200 ஆண்டுகள் எனக் குறுகிய வரலாறு படைத்தவன் சொன்னால் நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் 5000 ஆண்டு 10,000 ஆண்டு விரிந்த பெரும் வரலாறு இருக்கிற தமிழகத்தில் இந்த ஆன்மீகத்தை, ஆலய வழிபாடுகளை - இந்தச் சிறப்புகளைக் குறைத்து யாரும் மதிப்பிடக் கூடாது. எனக்கு வேண்டுமா வேண்டாமா என்று சொல்லுகிற உரிமை எனக்கு உண்டு. ஆனால் வேண்டும் என்று சொல்லுகிறவனை மடையன், முட்டாள் என்று சொல்லுகிற உரிமை எவருக்கும் இல்லை. அதைத்தான் இன்றைக்கு அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது? ஆகவே அப்படிப்பட்ட உணர்வோ இன்றைக்குக் காலத்தினுடைய கட்டாயம்

## வேலைவாய்ப்புகளை வளர்ப்பதற்காகத் தான்

இந்த ஆன்மீகப் புரட்சி - இது இன்றைக்கு சமயப் புரட்சி - சமுதாயப் புரட்சி அதனாலே தான் இத்தனை ஆண்டுக்காலம் கழித்து 68 லட்சம் ரூபாயிலே இதைக் கட்டுகிறோம். இதையே ஒரு 15, 20 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டியிருந்தால், இதிலே 15 லட்ச ரூபாய்க்குள்ளே கூட முடித்திருக்கலாம். இன்றைக்கு நமக்கு Penalty தண்டனை. நீ காலத்திலே இதைச் செய்யத் தவறினாய்! அதற்கு வட்டி போட்டு கட்டு. அதை அவர்கள் சொன்னார்கள். இதைக் கேட்பார்கள் சில பேர். என்ன மலைச்சாலை போடுவதிலே என்ன தவறு? அவர்கள் சொன்னார்கள் இந்த நகரமே வளர்ச்சியடையுமென்று. நான் அதற்கு முன்னாலேயே சொல்கிறேன். இந்த 68 லட்ச ரூபாயிலே ஏறத்தாழ பாதித் தொகை இந்தப் பகுதியிலே இருக்கின்ற உழைக்கின்ற வர்க்கத்திற்குப் போகப் போகிறது; சம்பளம்.

''வேலைகொடு வேலை கொடு'' என்கிறாயே ஜனத்தொகையைப் பெருக்கி வைத்துக் கொண்டு; எங்கே போய் வேலை கொடுப்பது? சமுத்திரம் தாண்டிப் போனால்கூட வேலை கிடைக்காதே. இவ்வளவு பேருக்கும்! ஆகவே வேலை எப்படி கொடுப்பது? நம்முடைய முன்னோர்கள்- மன்னர்கள் எப்படி வேலையை ஆரம்பித்திருக்கிறார்கள் என்று கருதுகிறீர்கள். வேலை கொடுப்பதற்குத்தான் இவ்வளவு பெரிய ஆலயங்கள். இன்றைக்குச்

சக்கரம் மீண்டும் சுழன்று வருகிறது. இராஜ ராஜ சோழன் சும்மா கட்டவில்லை. சும்மா இருக்கிறவனுக்கு வேலை கொடுத்தாக வேண்டுமே! ஒரு ஆலயத்தைக் கட்டு. என்ன 10 கோடி ரூபாயைப் போட்டு 50 பேருக்கு வேலை கொடுத்து விட்டால் வேலை வந்து விடுமா? ஒரு பணக்காரன் வருவான். நீங்கள் நாட்டினுடைய பொருளாதாரத்தையும் தெரிந்து கொண்டாக வேண்டும். மக்கள் தொகை இல்லாத நாட்டிலே நீ மக்களுடைய சக்தியைக் குறைத்துச் செலவிடுகிற தொழிலை நீ நம்பலாம். இங்கே மக்கள் அல்லவா பெருகிக் கிடக்கிறார்கள்.

இங்கே - திருச்செங்கோட்டிலே பனி விழுந்ததாகச் சொல்லுகிறார்களே பாடலிலே! இப்பொழுது ஏன் பனி விழவில்லை? என்ன காரணம்? அன்றைக்குப் பனி விழுகிற வகையிலே இது காடு சூழ்ந்து சோலையாக இருந்திருக்கிறது. மேகம் கவிழ்ந்திருக்கிறது. பனி கவிழ்ந்திருக்கிறது. இன்றைக்கு இந்த மக்கள் பெருகி இந்த வெப்பத்திலே எல்லாம் ஓடி விட்டது. உருகிவிட்டது. இதுதானே உண்மை! காலத்தினுடைய மாற்றம். ஆகவே இன்றைக்கு பெருகிக்கொண்டிருக்கிற மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டும். இன்றைக்கு 1 கோடி ரூபாய், ஒன்றேகால் கோடி ரூபாயிலே ஸ்ரீரங்கத்திலே கோபுரம் எழுப்பப்படுகிறது என்றால் எத்தனை ஆயிரம் பேர் 5 வருடங்களாக வேலை பார்க்கிறார்கள். இங்கேயும் இந்த மலைப்பாதை தொடங்கினால் இந்த பகுதியிலே இருக்கிற தொழிலாளர்கள் எவ்வளவு பேர் வேலை வாய்ப்பைப் பெறபோகிறார்கள். நான் அதற்குப் பிறகு வருகிறேன். நான் கனவு கண்டு கொண்டிருக்கிறேன். இந்த மலைப் பாதை முடிந்தால் இன்னும் ஒரு 10 அல்லது 15 ஆண்டுக்காலத்திலே திருச்செந்தூர் நம்முடைய திருத்தணியை விட இந்த ஆலயம் மிகப்பெரிய ஆலயமாக வளர இருக்கிறது. ஏனென்றால் இந்த வரலாற்றைச் சொன்னால் இதைப் பார்த்தாக வேண்டும் என்று மக்கள் வரப்போகிறார்கள். இவ்வளவு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு ஆலயம் இல்லை.

இன்றைக்குத் திருத்தணியினுடைய ஆண்டு வருமானம் 65, 70 இலட்சம் ரூபாய். நான் அதனாலே நான் கொஞ்சம் தைரியமாகவே இந்த மலைச்சாலைக்குக் கடன் கொடுக்கலாம் என்றே சொல்லியிருக்கிறேன். மற்ற ஆலயங்களிலே இருந்து, ஏனென்றால், இது திவாலாகி விட்டால் கொடுத்த கடனே வராது. கடைசியில் ரோடு தானே இருக்கும். ஜல்லியைப் பெயர்த்துக் கொண்டுபோக முடியாது. அப்படியெல்லாம் இல்லாமல், இந்த ஆலயம் மிகச் சிறந்த ஆலயமாக வளர இருக்கிறது. வருமானம் வர இருக்கிறது.

அன்றைக்கு இந்த 68 லட்சம் இந்த ஆலயமே இன்னொரு ஆலயத்திற்குக் கடன் தருகிற நிலைமைக்கு ஒரு 15 ஆண்டுகளில் வரப் போகிறது. இதைத் தடுத்து நிறுத்த எந்த சக்தியும் இல்லை, தயவு செய்து தெரிந்து கொள்ளுங்கள். எவனாவது வெறுங்கையை முழம்போட்டுக்கொண்டிருக்கலாம். வாய் நீளம் காட்டலாம். நீ மக்கள் மத்தியிலே வந்து சொல்லி விட்டுப்போ பார்க்கலாம்.

## கடவுள் வேண்டுமா வேண்டாமா?

''இன்றைக்குக் கடவுள் இருக்கிறாரா இல்லையா என்று கேட்காதே. கடவுள் வேண்டுமா வேண்டாமா என்று கேள்'' என்று சொன்னான் ஒரு அறிஞன்; வேண்டுமா வேண்டாமா என்று கேட்டு அதற்குப் பதிலைக் கண்டுபிடி, இருக்கிறாரா இல்லையா என்று ஆய்ந்து கண்டு பிடிப்பதற்கு உனக்கு வயதும் போதாது. காலமும் போதாது. உனக்குச் சக்தியும் போதாது. தண்ணீர் எங்கே இருக்கிறது என்று தேடுமகனே என்று தானே இயற்கை நம்மை சோதிக்கிறது. இறைவன் சோதிக்கிறான். அந்தத் தண்ணீர் இருக்கிற இடத்தைக் கண்டு பிடிப்பதற்குள்ளேயே நாம் மயக்கம் போட்டு விழுந்து விடுகிறோமே! ஆகவே இறைவன் இருக்கிறானா? என்று ஆயும் அந்த வேலை - வெட்டி வேலை நமக்கெதற்கு? இறைவன் இருக்கிறான்; நம்புகிறோம்! இல்லை இல்லை, நான் நம்பமாட்டேன். 'இயற்கை' நம்பித் தொலை, எதையாவது ஒன்றைச் சொல்.

## பெரியவர்கள் தவறிவிட்டார்கள்

நீ அம்மா, என்று சொல் என்று சொன்னால் இல்லை இல்லை நான் 'தள்ளி' என்று தான் சொல்லுவேன். இல்லை ஏதாவது இந்தியிலே தெரிந்தவன் அவன் ஒரு வார்த்தையிலே சொல்லுகிறான். தெரிந்த மொழியிலே சொல். எதை வேண்டுமானாலும் சொல், அம்மாவை இல்லை என்று சொல்லாதே: எனக்கு அப்பாவும் அம்மாவும் இல்லை. அதனாலே நான் ஆகாயத்திலே இருந்து குதித்தேன்; எவனாவது சொல்ல முடியுமா? எனக்குத் தெரியாது; நான் பார்க்கவில்லை, என், கண்ணாலே தாயை; அதனாலே எனக்குத் தாயே கிடையாது! சொல்ல முடியுமா? இந்த வாதத்துக்குச் சொல்கிறேன் இவைகளை எல்லாம்! நீ வேண்டுமானால் வாதத்துக்கு வந்து பார். நாங்களெல்லாம் 40 ஆண்டுக்காலம் படித்து படித்து, இப்போது தான் புதிதாகப் படிக்க ஆரம்பித்திருக்கிறோம். இந்தப் பெரியவர்களெல்லாம் கொஞ்சம் ஒழுங்காகக் கற்றுக் கொடுத்திருந்தால், இந்தப் பிரச்சினைகளே வந்திருக்காது. அதனாலே தான் சொல்கிறேன்.

## வேண்டாம் வீண்வாதம்

ஆகவே இன்றைக்கு இவ்வளவு பெரிய தத்துவங்கள் சமுதாயத்திலே ஒரு புரட்சியாக ஆன்மீகப் புரட்சியாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அது ஆலயத்திருப்பணிகளாக நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு இந்தச் சான்றோர்கள் எல்லாம் துணை நின்று கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டுமானால்-மனிதனை மனிதனாக மாற்ற வேண்டுமானால் அறிவு மாத்திரம் போதாது. அவனுக்கு ஆன்மீக உணர்வும் வேண்டும். அந்த ஆன்மீக உணர்வு தான் மனிதனைப் பண்புள்ளவனாக மாற்றும். அதைத்தான் விவேகாநந்தரிலேயிருந்து நம்முடைய அத்தனைப் பெரியவர்களும் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அதைத்தான் நாம் முன்னாலே மறந்துவிட்டோம்; இப்பொழுது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்; ஆகவே மலைச்சாலை போடுவதைப் பற்றி யாராவது விதண்டாவாதம் செய்து கொண்டிருந்தால், அவர்கள் காற்றிலே அடித்துப் பறந்துகொண்டிருக்கிற தூசுக்குச் சமமாகத்தான் இருக்கிறார்கள். தயவு செய்து தெரிந்து கொள்ளுங்கள். அடிக்கிற புயலிலே - ஆடிக்காற்றிலே அம்மியும் குழவியுமே பறக்கிறது. சாதாரண துரும்பு எம்மாத்திரம் என்பதைப் போல அவர்கள் வாதங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்; காரணம் அவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிற கோடிக்கணக்கான சொத்துக்கள் அவர்களுக்கு அந்த தைரியத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

## பாராட்டுக்கள் புரட்சித் தலைவருக்கே

சமுதாயத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிற உணர்வுகளை இனிமேல் வளர்க்க வேண்டாம். நீங்கள் தயவு செய்து மூடநம்பிக்கையைக் கண்டியுங்கள். மூடத்தனத்தைத் திருத்துங்கள். நம்பிக்கையை அழித்து விடாதீர்கள். நம்பிக்கை இல்லையானால் உலகமே இல்லை. வாழ்க்கையே இல்லை. ஆகவே அப்படிப்பட்ட ஒரு மிகச் சிறந்த அறப்பணியில் இன்றைக்குச் சமுதாயம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு அரசாங்கம் வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. அதற்குத் தலைமையேற்றிருக்கிற முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மிகத் தெளிவாக இந்தக் கொள்கையை அறிவித்து விட்டுத் தான் இன்றைக்கு நாட்டிலே இந்தப் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அரசு இருக்கிற காரணத்தினாலே தான் இங்கே 68 லட்ச ரூபாயைத் துணிந்து ஒரு திருச்செங்கோட்டு மலைக்கு மலைப்பாதை போட முடியும் என்ற தைரியத்தோடு இன்றைக்குத் தொடங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே இவ்வளவு பாராட்டுக்களும் எங்கேயோ மூலவராக சென்னையிலே உட்கார்ந்து கொண்டிருக்கிற அந்தப் புரட்சித் தலைவருக்கு நான் காணிக்கையாக்கி, நாம் இந்தத் திட்டத்தை மிக விரைவிலே நிறைவேற்ற இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு உரிய தக்க ஒருவரைத்தான் நாம் இன்றைக்கு தேர்ந்தெடுத்து வழங்கியிருக்கிறோம். இதற்கே பல சிக்கல்கள் அரசு ஆணையிலே! நியாயமாக இப்படிப்பட்ட செலவுகளைச் செய்யவேண்டுமானால் அது Highways அல்லது PWD இவர்களிடத்திலே ஒப்படைக்க வேண்டும் என்பது தான் அரசினுடைய ஆணை. அதையெல்லாம் தாண்டி இதற்கு விசேட உத்திரவுகளைப் பிறப்பித்துக் கட்டுமானக் கழகத்தினிடத்திலே ஒப்படைத்திருக்கிறோம். அவர் இங்கே இந்த வேலையைச் செய்ய இருக்கிறார். இதே நேரத்திலே மதுரையிலும் ஒரு மிக்பெரிய வேலையை அவரிடத்திலே ஒப்படைக்க இருக்கிறோம். அதையும் அவர் உடனடியாகசெய்து தர வேண்டும்.

## இளங்கோ அடிகளுக்குக்கோட்டம்

இந்த நேரத்திலே நம்முடைய காளியண்ணன் அவர்கள் ''கண்ணகி கோட்டம் கண்ணகி கோட்டம்'' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்திலே வள்ளுவருக்குக் கோட்டம் இருக்கிறது. கம்பருக்குக் கோட்டத்தை அவர் பிறந்த திருவழுந்தூரிலே கடந்த சில மாதங்களுக்கு முன்னாலே அடிக்கல் நாட்டி நடந்து கொண்டிருக்கிறது. 20 லட்ச ரூபாய் செலவிலே. ஆனால் இளங்கோ வடிகளுக்கு ''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவன் போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'' என்று மகாகவி பாரதி பாடினானே! அப்படிப்பட்ட அந்த மூன்று பெரும் புலவர்களிலே ஒரு புலவனுக்கு ஒருகோட்டம் இல்லை. அதை நம்முடைய முதல்வர் அவர்கள் முதலாண்டு நிதி நிலை அறிக்கையிலேயே அவர்கள் அறிவித்தார்கள்.

## கண்ணகிக்கும் சிறப்பே

ஆகவே அப்படிப்பட்ட ஒரு கோட்டம் இன்றைக்குத் தமிழகத்திலே அமைய வேண்டுமானால், அதற்கு ஏதாவது வரலாற்றுச் சான்றுகள், தொடர்புகள் இருக்குமேயானால் இன்றைக்கு நம்முடைய காளியண்ணன் அவர்கள் கண்டுபிடித்திருக்கிற வரலாற்றையெல்லாம் சொன்னார்கள்; நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் சட்ட அமைச்சர் அவர்களும் அந்த வரலாற்றையே மீண்டும் சொன்னார்கள். அதை நம்முடைய தவத்திரு அடிகளார் அவர்களிடைத்திலேயும் கேட்டேன். அப்படி ஒரு வரலாறு இருக்கிறது என்கிறார்கள். சரி ஒரு வரலாறு—தொடர்பு இருக்கிறது. ஆகவே இளங்கோவடிகளுக்கு ஒரு கோட்டம் கட்ட வேண்டும்; அது திருச்செங்கோடாக

அமைந்தால் அது மிகச்சிறப்பாக அமையும்; சிறு திருத்தத்தைத் தான் சொல்லியிருக்கிறேன் அது கண்ணகிக் கோட்டமாக இருக்க வேண்டும் என்கிறார்கள். இளங்கோவடிகளுக்குக் கோட்டம் வந்தாலே அது கண்ணகிக் கோட்டமாகத் தான் அமையும்.

ஏனென்றால் பூம்புகார் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுவிட்டது: அங்கே மாதவி சிறப்பாக இருக்கிறார். கண்ணகி இருக்கிறார். மற்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அது அந்த வரலாறு நடந்த இடம். ஆனால் கண்ணகி என்கிற நம் தமிழ்ப் பத்தினிக்கு-இன்றைக்கு நாம் வணங்குகிற சக்தியின் வடிவமாகத் திகழ்ந்த அந்தப் பத்தினிக்கு-ஒரு இடத்தில் கோட்டம் வேண்டும் என்று சொல்லுகிறபோது வேறு சில சிக்கல்கள் இருக்கிறது. ஆகவே அதற்குள்ளே தயவு செய்து அதிகமாக எங்களை நுழைய விட்டு விடாதீர்கள். இங்கே அமைகிற கோட்டம் இளங்கோ அடிகளுக்கு ஒரு கோட்டம். அந்தக் கோட்டம்தமிழகத்தினுடைய மூன்று பெரும் புலவர்களுக்கு அமைகிற கோட்டத்திலே ஒன்றாக இருக்கும். அதை அறநிலையத்துறை மேற்கொண்டு செய்யுமா? அல்லது அரசின் ஆணையைப் பெற்று செய்யுமா? என்பதை விரைவிலே முடிவெடுத்துத் தமிழகத்திலே இளங்கோவடிகளுக்குக் கோட்டம் -அது இந்தத் திருச்செங்கோட்டிலே அமையும். ஏனென்றால் சிலப்பதிகாரத்திலே அவர் வடவேங்கடத்தைப் பாடியிருப்பதைப் போல இந்த முருகனைப் பற்றிப் பாடியிருக்கிற இந்தக் குன்று, மலை இந்தத் திருச்செங்கோடு தான்.

ஆகவே இளங்கோவடிகளுக்கும், திருச்செங்கோட்டிற்கும் சம்பந்தமிருக்கிறது. முருகனோடு தொடர்பு இருக்கிறது. அது கண்ணகிக் கோட்டம் தான் என்று நாம் குறிப்பிடவில்லையானாலும் இளங்கோ அடிகளுக்குக் கோட்டம் அமைத்தாலே கண்ணகிதான் வந்து நிற்பார். அதற்குள்ளே நாம் எப்படி வேண்டுமானாலும் அமைத்துக் கொள்ளலாம். ஆகவே அமைகிற கோட்டம் இளங்கோ கோட்டம் - அதை மாத்திரம் கொள்கையாக நான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த ஆணையை - அது எந்த இடம் என்று தேர்ந்தெடுக்கிற நேரத்திலே - அது திருச்செங்கோடாகத் தான் இருக்க முடியும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## திருச்செங்கோட்டுக்காரரே வந்த விந்தை

மிக விரைவிலே இந்த மலைப்பாதை அமையும். அதிலே வசதியுள்ளவர்கள், முடியாதவர்கள், இயலாதவர்கள், ஆண்டவனைக் காரிலே போய்ப் பார்த்து விட்டு அதற்குப் பிறகு தண்டனையாக வைத்தியரிடத்திலே போக விரும்புகிறவர்கள் - ஏனென்றால் ஒரு தண்டனை இருக்கும். நமக்குத் தெரியாது. அவர்கள் நள்ளிரவிலே அடிபட்டு கிடக்கிறார்கள். அங்கே வருகிறவர் அங்கே பக்கத்திலே இருக்கிற அந்த ஊரிலே இருந்துவந்திருக்கலாம். கோவையிலே இருந்து வந்திருக்கலாம். அவர் என்ன திருச்செங்கோட்டுக்காரராகவே இருக்கிறாரே என்றால் இதற்கு எங்கேயாவது ஒரு தொடர்பு இருக்கிறதா என்றால் உலகத்திலேயே அப்படித்தான் தொடர்பிருக்கிறது. இல்லையானால் தரையிலே உட்கார்ந்து கொண்டு விண்ணிலே சுற்றுகிறவனை இயக்குகிறோமே எப்படி? உனக்குத் தெரியுமா? தெரியாதல்லவா. அவன் இயக்குகிறேன் என்று சொல்லுகிறான். நாம் நம்புகிறோம் அல்லவா! அதுதான் எங்கே எப்பொழுது எந்தத் தொடர்பிலே நடக்கிறது? நமக்கும் தெரியாது. சில நேரத்திலே இதை நாம் ஆய்ந்து பார்ப்பதற்கு நமக்கு சக்தியும் இல்லை. இருந்தால் நேரமில்லை; நேரமிருந்தால் அதற்கான நினைப்பும் இல்லை.

## காலத்தின் கட்டளையை நிறைவேற்றுகிறோம்

ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இன்று உலகத்திலே நடந்துகொண்டிருக்கிறது. சிலவற்றை நம்புகின்றவற்றை நம்பியாக வேண்டும். நம்புகிறவருக்கு நடராஜன், நம்பாதவர்களுக்கு எமராஜன். ஆகவே நம்பிக்கைஎன்பது உலகத்தை வாழ வைக்கிற ஒரு சக்தி; அந்தச் சக்தியைத் தகர்த்துவிடக் கூடாது. அந்த நம்பிக்கை நல்ல நம்பிக்கை. அந்த நல்ல நம்பிக்கையை இன்றைக்கு ஆன்மீகத்துறையிலே உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். இளைஞர்களை இந்த மலைப்படியிலே நாம் ஏற வைக்க வேண்டும். இன்றைக்குப் பெண்கள் எந்த வயதானாலும் ஏறிப்போகிறார்கள். ஏன் நம்மாலே முடியவில்லை? அந்த உணர்வுகளை நாம் கேவலப்படுத்தி விட்டோம். அதனாலே ஏற முடியவில்லை. வீட்டிலே இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவும் நடக்க முடியவில்லை. இன்றைக்கு அந்த அளவுக்கு ஆற்றல் குறைந்தவர்களாக - வலிமை இழந்தவர்களாக இருக்கிறார்கள். சமுதாயத்தை நலிந்த சமுதாயமாக மாற்றிக் கொண்டிருக்கிறோம். நம்மையும் அறியாமல் மாற்றி இருக்கிறோம்.

அதற்கு யார் குற்றவாளி என்பதல்ல; நாம் அனைவருமே குற்றவாளிகள். இன்றைக்கு அதைத் திருத்துவதற்குத் தான் காலம் நம்முடைய கண்ணைத் திறந்திருக்கிறது. காலத்தினுடைய கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்; அந்தக் கட்டளைகளிலே ஒன்றுதான் இந்தத் திருச்செங்கோட்டு வேலனுக்கு மலைப்பாதை அமைப்பது. அதை நிறைவேற்ற முன் வந்திருக்கிற பெரியவர்கள் அனைவருக்கும் என்னுடைய இருகரம் கூப்பி, வணங்கி, நன்றிகூறி, அமைகிறேன். வணக்கம்.

— — — —

# திருக்குறளில் விஞ்ஞானம்

"முத்தமிழ்க் காவலர்"

டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழகத்தில் தோன்றியுள்ள புரட்சியாளர்களில் முதல் புரட்சிவீரர் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய திருவள்ளுவரென கூறியிருக்கிறேன். அதற்குரிய சான்றுகள் சில:

1. மக்கள் மட்டுமல்ல, தேவரும் விரும்பி அருந்தி வந்த (சுராபானத்தை) மதுவை ஒறுத்து விலக்கியது.

2. தமிழகத்தில் நடைபெற்று வந்த உயிர்வதை யாகத்தைத் தடுத்து ஒழித்தது.

3. சங்க காலத்திலிருந்த 'பரத்தையர் பிரிதல்' என்ற பழக்கவழக்கத்தையே வெறுத்து ஒதுக்கியது முதலியன.

இப்போது பார்த்தால் அவர் ஒரு புரட்சி வீரர் மட்டுமல்ல. ஒரு சிறந்த விஞ்ஞானி என்றும் கூற வேண்டியிருக்கிறது.

மழை பெய்யாவிட்டால் என்னவாகும்? இது ஒரு கேள்வி. இதற்கு விடை நமக்கு நன்கு தெரியும். 'நீர் கிடைக்காது, கிணறு, குளம், குட்டை காய்ந்து கிடக்கும். ஆறும் ஏரியும் வரண்டு கிடக்கும். புல் முளைக்காது. பயிர் விளையாது, பஞ்சம் தலைவிரித்து ஆடும். உயிர்கள் துன்புற்று வாடும் என்பன. ஆனால் வள்ளுவர் கூறுகிறார் மழை பெய்யாவிட்டால் கடல் வளம் குன்றும்; தன்நிலை குலையும்என்று

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்
தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்" (17)

இதை நாம் எப்படி நம்புவது? கடல் என்ன? காடா, மலையா? நஞ்சையா, புஞ்சையா? பாலைவனமா? அல்லவே அல்ல. அது அகன்று ஆழ்ந்து. நீண்டு விரிந்து கிடக்கும் ஒரு பெரிய நீர்நிலையம். அது கிணறு, குளம், ஏரியல்ல; 'கடல்'. அதிலும் வளைகுடா. சிறு கடல் அல்ல. நெடுங்கடல் (மகாசமுத்திரம்). அதற்கு எதற்கு மழை?

தமிழ் இலக்கணத்தில் 'உயர்வு நவிற்சி' என்று ஒன்றுண்டு. அது ஒன்றை மிகைப்படுத்தி கூறுவதாகும்.

'வானுற ஓங்கி வளர்ந்தது செந்நெல்' என ஒரு புலவர் கூறியிருக்கிறார். இது உண்மையா? அப்படியானால் கதிர் முற்றிவிட்டதா என்பதை வான ஊர்தியில் சென்றல்லவா பார்த்து வர வேண்டியிருக்கும். நெல் வயலில் நீர் நிரம்பியிருந்தது. அதில் வாழ்ந்து வந்த ஒரு வாளை மீன் துள்ளித் தாக்கியதால் வரப்பிலிருந்த தென்னை மரத்துக் காய்கள் சிதறி விழுந்தன. என்று மற்றொரு புலவர் கூறியிருக்கிறார்.

'நெல் வயலிற் கிடந்த வாளை
திமிரியடித்த அடியால்-கிளியே!
தென்னங்கனி யுதிரும்''

என இவையனைத்தும் 'உயர்வு நவிற்சி' என்றாகுமே தவிர, உண்மை என்று ஆகி விடாது. திருவள்ளுவரும் அத்தகைய புலவர் தாமா? அவர் கருத்தும் உயர்வு நவிற்சி போன்றதா? இந்த ஐயம் எனக்கு ஏற்பட்டுச் சில ஆண்டுகள் என்னை உலுக்கி வந்தது.

சிங்கப்பூருக்குக் கப்பலில் சரக்குகளை ஏற்றியனுப்பி விட்டு நாகை கடற்கரையில் சில மணிநேரம் தங்கியிருந்தேன். ஒரு மீனவர் படகுடன் கரைக்கு வந்தார். ஒரு இராவுத்தர் அவரிடம் ஓடிச்சென்று 'உளாம் இருக்கா பிளா' என்றார். 'அவர் போம் பிளா' என்று வெறுப்போடு கூறிப்போய்விட்டார்.

படகிலிருந்த மீன் கூடையைத் தூக்கி வந்த அவருடைய மனைவியிடம் இராவுத்தர் என்ன கேட்டார்? உன் கணவர் என்ன கூறி

னார்? என மெதுவாகக் கேட்டேன். அந்த அம்மையார் கூறினார்கள்:

''உள்ளான் என்பது ஒருவகை மீன், அது மழைபெய்கிறபோது ஆற்றிலிருந்து நீரோடு கடலுக்கு வந்துசேரும். நல்ல தண்ணீரில் வாழ்ந்து வந்த அது உப்புத் தண்ணீரையும் குடித்து வள்ர்வதால் அதில் ஒரு புதுச்சுவை யிருக்கும். என் கணவர் பிடித்த மீன்களில் அது இருக்கிறதா? என்று இராவுத்தர் கேட்டார். அவர் வருத்தத்துடன், போம் பிள்ளாய் என்று கூறிப்போய் விட்டார்'' என்றார்.

நான் ஏன் ஏன்? என்றேன். ''ஆறுமாத மாய் மழையில்லை. எப்படிசாமி உள்ளான் கடலுக்கு வந்து சேரும்?'' என்று என்னையே கேட்டார் அந்த அம்மையார். மழைபெய்யா விட்டால் கடல் தன் வளங்குன்றும் என்ற செய்தி என் அறிவுப் பசிக்கு ஒரு சிற்றுண்டி போன்றிருந்தது.

தூத்துக்குடியில் ஒரு கூட்டம், இரவு விருந்து. இலையில் 18 வகைக் காய்கறிகள்! பரிமாறிக் கொண்டிருந்த ஆளைக்கேட்டேன். ஏன் இப்படி வீண்செலவு என்று. அந்த ஆள் கூறினார்.''முதலாளிக்கு இந்த ஆண்டு இழப்பு; இல்லாவிட்டால் விருந்து இன்னும் பெரிதாக இருந்திருக்கும். சென்ற ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் முத்துக்குளியலைக் குத்தகைக்கு எடுத்திருந்தார். மேகம் கருக்கூடினால் கடலி லுள்ள சிப்பிகள் ஒரு துளியை வாங்கி மூடிக் கொண்டு கரு உயிர்த்து முத்தாகும். இந்த ஆண்டு பருவமழை தவறிவிட்டதால் எல்லா சிப்பிகளும் முத்துக்களை உதிர்க்காமல் கிழிஞ்ச லாகவே போய்விட்டன. அவருக்கு பெரிய இழப்பு'' என்றார்.

பரிமாறியவர் சொல்லிய இந்த செய்தி என்னை வந்தடைந்து என் அறிவுப்பசிக்கு அரை உணவை அளித்தது.

''கலைக்கதிர்'' என்ற திங்கள் இதழ் ஒன்று கோவையிலிருந்து வருகிறது. மிகப் பெரிய விஞ்ஞானக் கருத்துக்களைக்கூட அது எளிய இனிய தனித்த தமிழில் கூறுவதுண்டு. அதில் ஒரு தடவை வந்த செய்தி:

''கடலில் நீரின் உப்புக்கும் ஒரு அளவு உண்டு. கடலில் நீரின் தடிப்புக்கும் ஒரு அளவு உண்டு. இது மாறாமலிருக்க வேண்டுமானால் மேகம் கருக்கூடி கடல்நீரை அள்ளிக்கொண்டு போய் மலைகளில் பொழிந்து உப்பையும் தடிப் பையும் ஆற்றின் மூலம் ஆற்றி மறுபடியும் கடலிற் கொண்டு வந்து சேர்த்தாக வேண்டும். இன்றேல் கடல் நீரின் உப்பு அதிகமாகும். உயிரினங்கள் மடியும்''.

இது என் அறிவுப் பசிக்கு முழு உணவையே அளித்து விட்டது. இந்த உயர்ந்த விஞ்ஞானக் கருத்தை எப்படி திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்தார்?என்பது இப்போது நம்மை வியப்படையச் செய்கிறது. எப்படி வள்ளுவர்? எப்படி திருக்குறள் எடுங்கள் குறளை, படியுங்கள் ஆழ்ந்து! ***

---

## இராமர் சொன்ன கதை

இராமபிரானிடம் அடைக்கலம் கோரி வீடணன் சரணடைந்தான். இராவணனின் தம்பியாகிய வீடணன் வஞ்ச எண்ணத்தில் வந்திருக்கக்கூடும் எனத் தெரிவித்து அடைக்கலம் தரலாகாது என்று சுக்கிரீவனும் அவனைச்சார்ந்த சிலரும் கருத்தினைத் தெரிவித்தனர். சொல்லின் செல்வர் அனுமரும் வீடணனின் நற்குணங்களைத்தாம் அறிந்தவாறு எடுத்துக்காட்டி, வீடணனுக்கு அடைக்கலம் தர வேண்டுமென்ற தம் கருத்தைத் தெரிவித்தார்.

அதன் பிறகு இராமபிரான் தம் முடிவினைத் தெரிவிப்பதற்கு முன், கதையொன்றைக் கூறினார். காட்டில் இரண்டுகிளிகள் ஆணும் பெண்ணுமாய் வாழ்ந்து கொண்டிருந்தன. இரைதேடிப் பறந்த கிளிகளில் ஆண்கிளி முன்னதாகக் கூட்டிற்கு திரும்பி வந்து பெண் கிளிக்காய் காத்துக்கொண்டிருந்தது. வேடன் ஒருவன் கண்ணி வைத்துப் பெண்கிளியைப் பிடித்துக்கொண்டு, ஆண்கிளி வாழ்ந்திருந்த அதே மரத்தினடியில் வந்து சேர்ந்தான். தான் வாழும் மரத்தினடியில் வந்து நிற்பவன் தன் இனத்திற்கு பகைவனான வேடன் என்ற போதும், அவன் தன் துணையான பெண்கிளியையும் சிறைபிடித்து வந்திருக்கிறான், என்பது நன்றாக தெரிந்திருந்தபோதும் அடைக்கலமாய் தன் மரத்தினடியால் வந்து நின்று அவனுக்குக் குளிர்காயும் பொருட்டுச் சுள்ளிகளைப் பொறுக்கிப் போட்ட ஆண்கிளி, அவ்வேடன் தீமூட்டி அதில் குளிர்காயும்போது அவன் பசியைத் தணிக்கவேண்டிய தன்னுடைய கடமை நோக்கித் தானே தீயில் விழுந்து அவனுக்கு உணவும் ஆகியதாம்.

''பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந்தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்து விறகிடைவெந்தீ மூட்டி
பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த காதை வேதத்தின் விழுமி தன்றோ''

(வீடணன் அடைக்கலப்படலம் 11...)

இக்கதையைக் கூறிய இராமபிரான், கிளியும் கூட அடைக்கலமென வந்து நின்ற வேடனுக்கு அடைக்கலம் தந்திருக்கும்போது, தாம் தராமல் இருக்கலாகாது என்பதை அனைவர்க்கும் எடுத்துக்கூறி வீடணனுக்கு அடைக்கலம் தந்தருளினார்.

---

# மணிமேகலை உணர்த்தும்

# அருளறம்

[ டாக்டர் த. அமிர்தலிங்கம் ]

## முன்னுரை

பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுதல் வேண்டும். உறுபசி உழப்போர் ஒருவரும் இருத்தல் கூடாது. இதுவே மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் கொண்ட விழைவு. கண்ட கனவு. பசிநோய் ஒழிக்கும் அருளறத்தை வலியுறுத்தி அவர் கூறியுள்ள கருத்துக்களை அவர் நூலின்வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பசிப்பிணி என்னும் பாவி:

பசித்துன்பத்தில் வருந்தியவர்களே பசித் துன்பத்தை உள்ளபடி உணர்த்தவும் முடியும். பசியை ஒழிக்க உறுதி கொள்ளவும் முடியும். சாத்தனாரும் பசித் துன்பத்தில் வாடியிருக்க வேண்டும். அதனால்தான் தம்நூலில் பசித்துன்பத்தைக் குறிப்பிடும்போதெல்லாம் ''பசிப்பிணி என்னும்பாவி'' ''மடுத்த தீக்கொளீய மன்னுயிர் பசி'' ''கட்டழற் கடும்பசி'' ''வயிறு காய் பெரும்பசி'' ''தீப்பசி'' ''அரும்பசி'' ''உறுபசி'' ''வீவில் வெம்பசி'' எனப்பலவாறு பசியின் கொடுமையைப் புலப்படுத்துகிறார். அப்பசி நோய் தம்மை உடையாரை நாளும் வருத்தி உருக்குலைத்து அழித்துவிடும் என்கிறார் சாத்தனார்.

அப்பசியால் விளையும் தீய விளைவுகளை
''குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங்கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில்சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி''
(பாத்திரம் பெற்றகாதை 76-81)

என்று அடுக்கியுள்ளார். தாம் கூறிய இக் கருத்துக்களுக்குச் சான்றாக விசுவாமித்திரரின் வாழ்க்கை நிகழ்ச்சியையும் விவரித்திருக்கிறார்.

விசுவாமித்திரர் அருமறைகளைக் கற்றுத் தெளிந்த மாமுனிவர். முன்னர் அரசராய் ஆண்டிருந்து, அரசைத்துறந்து துறவியானவர். மழைவளம் கரந்து, பஞ்சம் ஏற்பட்ட போது, உணவைத்தேடி உலகம்முழுவதும் அலைந்தார். எங்குத் தேடியும் உணவு கிடைக்கப்பெறாத அம்முனிவர், பசி தம்மைக் கொன்றதால் தாம் பிறந்த அரசப் பிறப்பை மறந்து மேற்கொண்ட துறவு நெறியும் துறந்து, கற்ற கல்விக் கொவ்வாத காரியத்தை மேற்கொள்ள முயன்றார். யாரும் உண்ணுதற்கு வெட்கப்படுகின்ற சிறிதும் பொருந்தாத இறந்த நாயின் இறைச்சியை உண்ண முற்பட்டார்.

''அரசுதலை நீங்கிய அருமறை அந்தணன்
இருநில மருங்கின் யாங்கணும் திரிவோன்
அரும்பசி களைய ஆற்றுவது காணான்
திருந்தா நாயூன் தின்னுதல் உறுவோன்''
(பாத்திரம் பெற்ற காதை 84-87)

என இந்நிகழ்ச்சியைப் பசியின் கொடுமைக்குச் சான்றாகச் சாத்தனார் பாடியிருக்கிறார்.

## மழைவளம் கரத்தலும் பஞ்சமும்

சாத்தனார் மணிமேகலையில் மக்களின் பசிநோய்க்குக் கூறும் தலையாய காரணம் மழைவளம் கரத்தலே ஆகும். ஆபுத்திரன் வாழ்ந்திருந்த காலத்தில் பாண்டிய, சாவக நாடுகளும், மணிமேகலையின் காலத்தில் காஞ்சிப்பதியும் மழையின்றிப் பஞ்சத்தால் வாடினமையைச்சாத்தனார் கூறியிருக்கின்றார்.

''மாரிவறங்கூரின் மன்னுயிர் இல்லை'' என்கிறார் சாத்தனார். கதிரவனின் கொடிய வெப்பத்தால் மரங்களில் உள்ள தழைகள், கிளைகள் எல்லாம் கருகின. காய்கனிகிழங்குகளைக் கண்ணால் காணவும் முடியவில்லை. ஊனுயிர் நீங்கும் உருப்பொரு தோன்றி, வயிறுகாய் பெரும்பசி உயிர்களை வாட்டியது. உண்ண எதுவுமே கிடைக்கவில்லை. ஏதேனும் உண்ணக் கிடைத்தாலும் குழந்தைக்கு ஊட்டி, மிஞ்சியதை உண்ணும் குணம் படைத்த தாயும்

தன் பசி தீர்க்கத் தானே தனித்துண்டாளே தவிர, குழந்தைகளுக்கு ஊட்டவில்லை. ஈன்றாள் குழவிக்கு இரங்காளாகித் தான் தனித்துண்ணும் கொடிய பஞ்சம் மழையின்மையால் நேர்ந்ததைச் சாத்தனார் விவரித்துள்ளார்.

பஞ்சத்திற்குக் காரணம் மழையின்மையே என்று கூறிய சாத்தனார் அம்மழையின்மைக்கும் காரணம் என்னவென்பதை ஆராய்ந்துள்ளார். வேதம் ஓதும் அந்தணர்க்கு ஒருமழை, நீதிநெறி தவறாத மன்னவர் நேர்மைக்கு ஒரு மழை; கற்பிற் சிறந்த மாதர்க்கொருமழை என மாதம் மும்மழை பெய்யும் என்பது மக்கள் நம்பிக்கை. அந்தணர், அரசர், பத்தினிப் பெண்டிர் தம் தூயநெறி தவறுவார்களேயானால் மழை பொழியாது.

''செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
கொங்கவிழ் குழலார் கற்புக்குறை பட்டோ?''

(கச்சிமாநகர் புக்ககாதை 217-218)

நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது என்றே சாத்தனாரும் வினவியிருக்கிறார்.

நாட்டில் நல்லநெறிகள் தவறி, தீயநெறிகளின் ஆட்சி ஓங்குமானால், வானத்துக் கோள்களும் நிலைமாறிப் பருவத்தில் பெய்யவேண்டிய மழை பெய்யாமல் பொய்த்து விடுகிறது.

''கோல்நிலை திரிந்திடில் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூறும்

(துயிலெழுப்பிய காதை 8-9)

என்பது சாத்தனார் கருத்து.

அறத்தின் ஆட்சி நிலவும்போது, ஒரு வேளை கோள்களே நிலை மாறினாலும் கூட, அந்நிலை மாற்றத்தால் செங்கோல் மன்னவன் ஆளும் நாட்டில் ஓடும் ஆறுகள் வற்றாமல் பஞ்சமும் விளையாதென்பதும் சாத்தனார் கருத்தேயாகும்.

''கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலைத் திரியாத் தண்டமிழ்பாவை''

(பதிகம்24-25)

என்று காவிரியைச் சிறப்பிப்பார் சாத்தனார்.



''பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுத வேண்டும்'' என்றதம் விழைவைக் காட்டு வகையில் சாத்தனார் மணிமேகலைக் காவிய தில் படைத்திருக்கும் மூன்று விந்தைகளே ப தீர்க்கும் மந்திரம் ,பசிதீர்க்கும் கனி, அமு சுரபி ஆகியனவாகும்.

மணிமேகலாத் தெய்வம், மணிமேகலை குப் பசியறுக்கும் மந்திரத்தைக் கற்றுத் தரு தாகக் கூறியிருக்கிறார் சாத்தனார்.

''சிறந்த கொள்கைச் சேயிழை கேளாய்
மக்கள் யாக்கை உணவின் பிண்டம்
இப்பெரு மந்திரம் இரும்பசி யறுக்கும்''

(மந்திரம் கொடுத்த காதை89-9

என்று கூறி, மணிமேகலைத் தெய்வம் மந் ரத்தை மணிமேகலைக்குக் கற்றுத் தருகின்றது

மந்திரத்தால் பசி தீர்வதாகக் கூறிய சா தனார், பழம்தின்றால் பசி அறவே தீர்வதா வும் கூறியிருக்கிறார். அக்கனியும் பன்னிர டாண்டுகளுக்கு ஒருமுறையே பழுக்கக்கூடியது அக்கனியை உண்டவர் பன்னிரண்டாண்டு காலம் பசி நீங்கப் பெறுவர்.

''சீர்திகழ் நாவலில் திப்பிய மானது
ஈரா றாண்டில் ஒருகனி தருவது
அக்கனி உண்போர் ஆறீ ராண்டு
மக்கள் யாக்கையின் அரும்பசி நீங்குவர்

(உலகஅறவிபுக்க காதை37-4

என்பர் சாத்தனார்.

மந்திரம் ஓதிப் பசியை மறத்தலும், க அருந்தி பசியை ஒழித்தலும், துறவிகளுக்கு ஓ வும் நெறியே அல்லாமல் உண்டு உடுத்து வா விரும்பும் உலகோர்க்கு ஒவ்வா நெறியாகும்.

''பெண்டிரும் உண்டியும் இன்றெனின் மக்கட்
உண்டோ ஞாலத் துறுபயன்?''

(ஆதிரைபிச்சையிட்ட காதை80-8

என வினவும் சாத்தனார் வேளாவேளைக் உண்டு வாழத்தான் மக்கள் விரும்புவரே அல் மல் பசியென்னும் உணர்வே இல்லாமல் வா அவர்கள் விரும்ப மாட்டார்கள் என்று எண் யதின் விளைவாக அமுதசுரபியைக் கண்டுபிடி திருப்பார் போலும்!

உ

# கற்கண்டுக் கந்தபுராணம்

கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம்

*விநாயகர் வணக்கம்*

ஓமென நெஞ்சில் ஓதி ஒருசெயல் செய்வார்க் கென்றும்
தாமென அருளும் வேலோன் தூயநற் சரிதம் பாட
ஆமெனத் துணிந்தேன் என்றால் அறிவினை நினைந்தோ? ஆனை
மாமுக அண்ணா! நின்றன் அருளினை நினைந்தே ஆகும்.

கண்ணனின் பெருமை போற்றும் காவியம் பாட மேலோன்
எண்ணுமுன் வந்துன் கொம்பை எழுதுகோல் செய்தாய் அன்று
மண்ணிலே மாந்தர் பாடி முருகனின் பெருமைப் போற்றப்
பண்ணிடும் மெய்நூல் காக்கப் பார்த்தருள் செய்வாய் இன்று

*முருகர் தோற்றம்*

பூமழை வானோர் தூவப் புண்ணிய மறைகள் ஆர்ப்பப்
பூமியில் பாவம் தீர்த்துப் போற்றரும் அறத்தைக் காக்கக்
காமனை வென்றோன் ஈசன் கருணையே வடிவம் ஆகித்
தாமரை முகங்கள் ஆறாய்த் தோன்றினை பாலா போற்றி!

தன்னிலை கெட்டே சூரர் புன்னிலை செய்வார் தம்மைத்
துன்னியே வெல்வான் மேருச் சரவணப் பொய்கை தன்னில்
முன்னிய முனிவோர் செய்த நற்றவ வடிவும் ஆகிப்
பன்னிரு கரங்க்ள் கொண்டு பிறந்தனை பாலா போற்றி!

*வானோர் மகிழ்ச்சி*

பிறந்தனை என்ற போதே மறந்தனர் வானோர் துன்பம்
சிறந்தனர் ஏனோர் எல்லாம் சிந்தினர் தம்தம் வீரம்
அறக்கடல் ஆனாய் உன்றன் அருட்கடம் சேராத் தீயர்
பிறருடல் இரையாய்ப் பேய்கள் உண்ணவே செய்வாய் போற்றி!

பார்த்திட விழிகள் கோடி வேண்டுமே என்பார் வார்த்தை
சார்த்திட செவிகள் மேலும் கோடியே வேண்டும் என்பார்
பாரெலாம் காக்கும் உன்றன் சீரெல்லாம் காணப் பெற்றார்
கார்த்திகை மகளிர் செய்த பாக்கியம் தொழுவோம் போற்றி!

### ஆறுமுகன் விளையாட்டு

பண்டமும் சிதைத்து ஆடும் பாமரர் சேய்கள் நீயோ
கிண்கிணித் தண்டைக் காலில் முழங்கவே ஓடி ஓடிப்
பண்பிலா அவுணர் அஞ்சப் பால்நிலா வெய்யோன் சேர்த்து
அண்டமும் உதைத்துப் பந்தை ஆடுவாய் ஐயா போற்றி!

ஏழ்கடல் ஒருங்கு சேர்த்தும் தாரகைப் பிடித்துக் கோத்தும்
கீழுறு நாக லோகப் பாம்புகள் கயிறாய்க் கொண்டு
நீள்மலை மேருத் தேராய் உருட்டியும் செய்வாய் விந்தை
பாழுடல் எடுத்த பேர்க்குப் பரகதிப் பேறே போற்றி!

ஒருவனே அறுவ னாகி ஓடியே ஒளிவாய் பின்னும்
விரும்பிய ஆட்ட மெல்லாம் ஆடுவாய் துணையும் வேண்டாய்
அருத்திவாழ் உயிர்கள் எல்லாம் புரக்குநீ தாயர் ஊட்ட
அருந்தினை அமுதும் விந்தை அருந்தமிழ் தேவே போற்றி!

### உமையார் அணைக்க ஆறு தலைகளுடன் குமரர் ஒருவடிவம் ஆகியது

காருரு வான அன்னை ஆறுரு வான உன்னை
மாருற அணைத்துக் கிண்ணம் ஊறிடும் பாலை ஊட்ட
ஓருரு வாகி மேனி மூவிரு தலைகள் தோன்ற
சீருரு வானாய் பேரால் கந்தனும் ஆனாய் போற்றி!

### நாரதர் செய்த வேள்வித் தீயில் தோன்றிய ஆட்டினை வாகனமாய்க் கொள்ளுதல்

நாரதர் போற்றும் வேள்வித் தீயிடைத் தோன்றி ஞாலம்
தீரவே துன்பஞ் செய்யும் ஆட்டினை வீர வாகு
தீரமாய் பற்றி உன்முன் காட்டவும் கருணை காட்டி
ஏறிடும் ஊர்தி யாக ஏற்றனை குமரா போற்றி!

### பிரமனைச் சிறையிட்டதும் சிவனார்க்கு வேதம் உரைத்ததும்

தருக்கினால் தலைவ ணங்கா பிரைமனைச் சிறையில் சேர்த்து
விருப்பினால் படைக்கும் வேலை வடிவுறச் செய்தாய் ஞானப்
பரமனும் ஒதுங்கி நின்று பிரணவப் பொருளைக் கேட்ப
உரைத்தனை சுவாமி நாதா! ஏரகம் தொழுவோம் போற்றி!

விண்ணிலே முடியைத் தேடி அன்னமாய்ப் பிறந்த போதும்
கண்ணுதல் பெரியோன் என்றே கண்டனன் கலையின் நாதன்
விண்ணெனத் தலையில் குட்டி வெஞ்சிறைச் சேர்த்து பின்னும்
கந்தனும் சிவனே யென்று செப்பினை செவ்வேள் போற்றி.

### அகத்தீயர்க்கு வேதம் உரைத்தது

சீராளன் ஊனைக் கேட்கும் சிவனாரின் சீட ராகி
ஓராடு வடிவில் வந்த வாதாபி ஊனை உண்ணும்
பேராளர் வடிவில் குள்ளத் திருவாளர் விரும்பிக் கேட்ப
சீரோடும் உயர்'ஓம்' வேதம் விரிவோடும் உரைத்தாய் போற்றி!

### கணபதிக்கு ஞானக்கனி கொடுத்தது

பிரணவப் பொருளைக் கூறும் சரவண அறிவாய் ஈன்ற
இருவரும் அன்றோ ஞாலம் ஆயினும் அன்பால் முன்னோன்
அருந்தவே கனியைத் தந்து சிறந்திடும் விழைவால் நீயே
விரும்பிமூ வுலகும் சுற்றி வந்தனை உயிரே போற்றி!

### பழநிக் கோயில் கொண்டது

அன்பினால் ஆண்டி யாகிச் சினமென நடிப்புக் காட்டி
மன்பதை வாழும் மாந்தர் கண்டுமே நாளும் போற்றப்
பொன்மனம் கொண்ட வேலோய் இன்புற வந்திங் கேறும்
தென்திருப் பழநிக் குன்றம் தெண்டனும் செய்வோம் போற்றி!

### ஔவையிடம் விளையாட்டு

கனிமொழி ஔவைப் பாட்டி கருத்திலும் விந்தை யூட்டிக்
கனிகளில் குளிரும் காயும் கனியிரு வகையாம் என்றாய்
கனிவுடன் சங்கம் ஏறிக் கனிதமிழ் காத்தோய் வாழும்
கனிமுதிர்ச் சோலைக் கோயில் கண்களால் காண்போம் போற்றி!

### தேவர்கள் வேலனை வணங்குதல்

ஆலமே அமுதாய் உண்டு ஞாலமுன் காத்தோன் மைந்த!
வேலையுள் அரவாம் மெத்தை கண்வளர் மாயோன் நேச!
கோலமே யானைத் தோற்றம் கொண்டவன் கணேசன் தம்பி!
காலமே காக்க என்னும் தேவரைக் காண்பாய் போற்றி!

### சிவனார் வேலனுக்கு ஆசி கூறுதல்

நீறணி நெற்றி ஈசர் சீறியே அவுணர் சேனை
நீறென வாக்க ஆணை இட்டுமுன் தோளைச் சேர்ந்து
வீறுடை வேலும் தந்து வாழ்த்துகள் சொல்ல நீயும்
பேறெனச் சொல்லிப் போரை நாடுவாய் குமரா போற்றி!

### முருகர் போருக்குப் புறப்படுதல்

ஈசரின் அருளால் தோன்றும் இலட்சமாம் வீர ரோடும்
நேசராம் வீர வாகு விக்கிரம தேவர் ஆன்றோர்
பாசமாய் உன்னைச் சூழ்ந்து துணையென வருவா ரோடும்
கூசவே வீணர் வாழ்வு குரைகடல் செல்வாய் போற்றி!

### அமுதவல்லி, சுந்தரவல்லியரைத் தெய்வயானையாகவும், வள்ளியாகவும் பிறக்கும்படி அருளுதல்

மாயவன் விழியில் தோன்றி மன்றலை விழையும் மாதர்
தூயவர் அமுத வல்லி சுந்தர வல்லி மாரை
ஆயபின் அமரும் உம்மை அன்பினால் கொள்வோம் சென்று
சேயராய்ப் பிறந்து வாழச் செப்பிடும் செவ்வேள் போற்றி!

### சூரர்கள் வரலாறு

காசிப முனிவ ரோடு கூடியே மாயை என்னும்
மாசினாள் ஈன்றெ டுத்த கோடியாம் சூரர் வென்று
காசினி உயிர்கள் வாழக் கருணையே காட்ட வந்த
தேசுடை சுத்த ஞான நல்லருள் தேவே போற்றி!

தம்முடற் சதையும் கொண்ட தலையனல் இட்டு யாகம்
செம்மையாய்ச் செய்வார் சூரர் தம்மையே மெச்சி ஈசன்
மும்மையும் ஆள்க வென்று தந்தமுன் வரங்கள் சிந்த
வெம்மையாம் போரை நாடும் வெற்றிவேல் குமரா போற்றி!

காலமோ யுகங்கள் நூறும் அண்டமோ ஆயி ரம்நீர்
ஆளுவீர் நம்மை யல்லால் வெல்லுமோர் சக்தி இல்லை
நீலநல் கண்டர் தந்த வரங்களில் மாற்ற மின்றிக்
கோலமே குமர னாகிச் சமர்விழை சிவனே போற்றி!

### சூரன் இந்திரலோகம் வென்றது

கோடியாம் பரிகள் பூட்டும் இந்திர் ஞாலத் தேரில்
நாடியே படைகள் சூழ இந்திர நாடும் சென்று
ஆடுவான் அரக்கன் அஞ்சிப் பாடுமாம் குயிலாய் மாறி
ஓடுவான் இமையோர் வேந்தன் காத்திடும் கந்தா போற்றி!

### சூரன் இந்திராணி மேல் காமம் கொண்டது

பொன்பதி இழந்த பின்னும் புன்மதி கொண்ட சூரன்
தன்சதி விழையும் காமக் குறிப்பினைத் தெரிந்து நோக்கி
நன்பதி காழி சேர்ந்து தண்மதி சிவனார் பாதம்
இன்சுதி பாடிப் போற்றும் இந்திரன் காப்பாய் போற்றி!

### தேவர்களுக்கு ஏற்பட்ட துயரின் காரணம்

தருக்கினால் சிவனார் நீக்கித் தக்கனும் முன்செய் யாகம்
விருப்பினால் விழைந்த கேடாய் அரக்கரால் தோல்விகண்டு
இருப்பிடம் இழந்தும் இன்னல் பொருப்பினில் படுவோர் தம்மைச்
சுரந்தருள் செய்து காப்பான் சுரம்பல நடந்தாய் போற்றி!

### முருகர் தேவர்களின் துயர்நீக்கத் திருவுளம் கொண்டது

வெம்புலி சிங்கம் யானை ஒத்திடும் மூவர் சூழத்
தம்முயிர் அஞ்சும் ஆக்கள் போல்துயர் காணும் தேவர்
முத்தொழில் முக்கண் ஈசன் முதல்வனைப் பாடிப் போற்ற
வெந்தொழில் வேட்டை யாட வந்தனை வேலா போற்றி!

### குமரர் தாருகனை வெல்லக் கருதியது

தாருகன் பதுமன் தம்பி மாயாமா புரியின் மன்னன்
மார்பினில் திருமால் வென்று பதக்கமாய் ஆரம் பூண்டோன்
கார்நிறக் குன்றை ஒக்கும் களிறென வடிவம் கொண்டோன்
போர்முதல் பலியாய் கொள்ளக் குறித்தனை குமரா போற்றி!

### அகத்தியர் சாபத்தால் கிரௌஞ்சன் என்ற அரக்கன் மலையானது

முன்குட முனிவோன் தந்த வெஞ்சினச் சாபஞ் சூழக்
கன்மலைக் குன்ற மாகிக் கலைவளர் துறவோர் தம்மைப்
புன்மதி மாயஞ் செய்து மயக்குவான் கிரௌஞ்சன் வீழ
அன்பினால் காலம் எண்ணி வந்தனை வீரா போற்றி!

### கிரௌஞ்ச மலையில் சிக்கிய தோழரைக் காத்தது

மாயமாம் குன்றில் சிக்கி மயங்குவார் வழியும் காணார்
நேயராம் வீர வாகு மற்றுள வீரர் காக்க
வாயுவாம் தேரில் ஏறித் தாருகன் கையும் கோடும்
மாயவே குன்றும் கீறித் தோழரைக் காத்தாய் போற்றி!

### தாருகனை வதைத்தது

நாரணர் பிரமர் தந்த படைக்கலம் யாவு மெய்து
தாருகன் சிவனார் தந்த அத்திரம் விடவும் கையால்
தாரென வாங்கி வேலால் சூரனின் உரம்கி ழிப்பாய்
காரெனப் பொழிந்து தொண்டர் காத்திடும் குமரா போற்றி!

மூவருள் பிரமன் தன்னை வெஞ்சிறை செய்தாய் வீணர்
மூவருள் இளையோன் கொண்ட வெஞ்சிரம் கொய்தாய் வாட்டும்
மூவிரு குரோதம் வென்று பக்தரைக் காப்பாய் வெல்லும்
மூவிரு முகங்கள் கொண்ட வித்தகா வேலா போற்றி!

### திருச்செந்தூரில் கோயில் கொண்டது

வெற்றியும் திருவும் மேன்மேல் பெற்றிட விழைந்தே வேலோர்
சுற்றமாம் படைகள் சூழச் சமர்அடச் செல்லும் பாதை
கற்றவர் வியாழர் வந்து வணங்கிடக் கோயில் கொண்ட
நற்றலம் செந்தில் நாளும் பாடுவோம் நாவால் போற்றி!

### வீரவாகைத் தூது அனுப்பியது

வெம்முனைப் போருக் கேகு முன்னமும் கருணை காட்டித்
தம்முளம் மாற்றிச் சூரர் காக்கவே வீர வாகு
தம்பியைத் தூது போக்கிச் சயந்தனைச் சிறையில் தேற்றி
நம்பிய அடியார் காக்கும் நல்லருள் முருகா போற்றி!

மாசினம் சூழ்ந்த சூரர் அவைதனில் தூதன் தம்பி
ஆசனம் ஒன்று வேண்ட அக்கணம் கண்டோர் போற்றும்
தேசுடைச் செம்பொற் சிங்கா தனமுடன் அனுப்பி வைப்பாய்
பேசுமுன் வேலால் நேசம் பேசிடும் தேவே போற்றி!

குக்கலின் வாலை ஒக்கும் குணத்தவன் தம்பி கூறும்
சர்க்கரைப் பாகை வெல்லும் சமரச வார்த்தை கேளான்
தக்கனைப் போன்றே கீழாம் வசைமொழி பலவும் சொல்வான்
அக்கணம் வெகுளாய் அன்பால் குறுநகை புரிவாய் போற்றி!

மாதவ முனிவோர் செய்யும் வேள்வியும் ஊறு செய்வார்
பாதகர் அவுணர் என்று அறியினும் அறத்தை உன்னிச்
சாதகம் செய்வான் சென்ற தூதுவன் வீர் வாகைக்
காதகர் கொல்வான் சூழக் காத்திடும் கந்தா போற்றி!

### சூரபதுமனின் மகன் பானுகோபனை வதைத்தது

தொட்டிலில் உறங்கும் பிள்ளை வயதினாய் இருந்த போதும்
கட்டினான் கதிரால் தன்னைச் சுட்டனன் என்றே வெய்யோன்
மட்டிலா அவுணர் சூழ வந்தவன் பானு கோபன்
கொட்டமும் அடக்கித் தேவர் குலந்தனைக் காத்தாய் போற்றி!

### சிங்கமுகனை வதைத்தது

ஆயிரம் தலைகள் கொண்டோன் ஆசுரப் பதியாள் சிங்கன்
ஆய்ந்தறம் உரைக்குஞ் சொல்லை அறிவிலன் கேளா தேச
மாய்தலே நலமென் றெண்ணி முன்அட வந்தான் வீரன்
மாய்த்துடைம ஏறும் சிங்க வாகனம் செய்தாய் போற்றி!

### சேவலும் மயிலுமாகிய சூரனை அடக்கி ஆண்டது

நீர்நிறை கடலின் மீதில் மாயையால் மரமாய் நின்ற
சூரனை வேலால் எய்ய சேவலும் மயிலு மென்னும்
ஈருரு வாகிப் பின்னும் ஆர்ப்புடன் வருவான் சூரன்
பார்வையில் அடக்கி மேலாம் பரகதி தந்தாய் போற்றி!

### சேவலைக் கொடியாய் கொண்டது

மூவரும் காண்டற் கரிதாம் மூர்த்தியாம் உருவம் தீய
பாவியும் காணப் போரில் காட்டினை என்றால் ஐயா!
தாவருள் பாடும் தூய அடியவர் பெறுதல் உண்மை
சேவலைக் கொடியாய்க் கொண்டு குற்றமும் பொறுத்தோய் போற்றி!

### மயிலை வாகனமாய் கொண்டது

சீறிடும் அவுணன் மேனாள் மால்முதல் மேலோர் எல்லாம்
கூறிடும் பணிசெய் ஏவல் தொண்டராய் மதித்தான் நீயோ
நீறிடும் அடியார் எல்லாம் போற்றியே மயிலை வாழ்த்த
ஏறிடும் ஊர்தி என்றே ஏற்றனை வேந்தே போற்றி!

பாலனும் சமரில் நிற்கும் வலியனும் தானோ வென்று
கேலிகள் செய்தார் சூரர் கோலமா மகளிர் பூண்ட
தாலிகள் அறுந்து குன்றாய் வளர்ந்துநின் வீரம் சாற்ற
வேலினால் வென்றாய் வெற்றித் தோளினாய் போற்றி! போற்றி!

### தெய்வானைத் திருமணம்

பெய்துநீர் வார்த்தும் உன்சீர் போற்றிடும் விண்ணோர் வேந்தன்
தெய்வநல் யானை என்னும் தாழ்குழல் பொன்கை சேர்ப்பச்
செய்தவத் தூயோர் பெற்ற கண்ணிணைப் பயனாய்க் காணச்
செய்தனை மணமும் போற்றும் தென்பரங்குன்றம் போற்றி!

### ஸ்ரீவள்ளித் திருமணம்

விரும்பிமுன் அருளால் தந்த வரத்தினால் பிள்ளை யாகி
அருந்தவம் செய்த நம்பி இராசனின் மனையில் வாழும்
கருங்குழல் வள்ளிக் கான மயிலினை மணமும் செய்வான்
விருத்தனும் வேட னும்ஆய் வந்தனை வேலா போற்றி!

வானவர் வணங்கி வேண்ட அவுணரை வென்ற வீரா!
கானவர் மகளின் மீதில் கொண்டதாம் அன்பில் வேண்டி
ஆனைநல் முகத்தின் அண்ணல் வந்தருள் புரிந்து வாழ்த்த
ஆனதுன் மன்றல் போற்றும் திருத்தணிக் குன்றம் போற்றி!

காதலால் ஞாலம் வாழும் மாந்தருள் பேதம் இல்லை
சாதியைச் சொல்வார் நெஞ்சில் நீதியாம் நேர்மை இல்லை
வேதமாம் நெறியைக் காட்ட வள்ளியை மணமும் செய்தாய்!
ஓதிடும் சமய பேத வெறியெலாம் கடிவாய் போற்றி!

### முருகரை வாழ்த்துதல்

கந்தனே கடம்பா போற்றி! கார்த்திகைக் குமரா போற்றி!
சுந்தர முருகா போற்றி! சுப்பிர மணியா போற்றி!
இந்திரர்க் கருள்வாய் போற்றி! ஈனரை அடுவாய் போற்றி!
வந்தனை செய்வார் போற்றி! வந்தெனை ஆண்டாய் போற்றி!

ஓராறு முகங்கள் போற்றி! ஈராறு கரங்கள் போற்றி!
தார்சூடும் தோள்கள் போற்றி! தோள்சேர்ந்த தாயர் போற்றி!
கார்கண்டு ஆடும் தோகை சூர்கண்டு வெல்லும் கூர்வேல்
பாராளும் சீர்மை போற்றி! நீவாழும் கோயில் போற்றி!

### நூற்பயன்

கற்கண்டுக் கந்தன் காதை கருத்தோடு நாளும் ஓதி
நற்றொண்டு செய்வார் ஞாலம் விருந்துண்டு வளமாய் வாழ்வர்
வெற்பீண்டி வாழும் வேலோன் விருப்போடு மயிலை ஏவிப்
பொற்பாதம் வைப்பான் அன்ன அடியாரும் போற்றி போற்றி!

# அரச கவிஞர்—குலசேகராழ்வார்

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி

தலைவர், தமிழ் இலக்கியத்துறை,

சென்னைப் பல்கலைக்கழகம்.

ண்ட மன்னர் பலரைக் கவியாண்ட யும் கண்ட பெருமை தமிழிலக்கிய வர தனிச் சிறப்பாகும். தமிழன்னை அரி ர்ந்து செங்கோலோச்சிச் செம்மாந்தி காலத்தில் முப்பத்தொருவருக்கு மேற் ரசர் கவியரசராயும் விளங்கிய வாய்மை மிழ் வரலாறு எடுத்து இயம்புகிறது. நாடாளும் மன்னரும் ஏடாளும் வேந்த ழ்ந்த பெருமை சான்ற பரம்பரையில் யும் தமிழ்க் குலமும் வாழ்வு பெறத் பெருமானே குலசேகராழ்வார். சங்க ப் பின்பு தமிழிலக்கிய வரலாற்றில் ளையாடிய சமய காலத்தின் பெருமை ாய்த் திகழும் பேறு பெற்றவர்களுள் ரச கவிஞர் குலசேகரர்.

நாட்டில் கோழிக்கூடு என்னும் மாநிலப் பண்டு திடவிரதர் என்பார் ஆண்டு எல்லாச் செல்வமும் சேரப்பெற்றிருந்த ழ்நாட்டு வேந்தருக்கு மக்கட்பேறாகிய ட்டும் இல்லாத குறை பெருங்குறை தது. அக்குறை நீங்கத் திடவிரதர் வர ற்ற செல்வமே குலசேகரர். சில குறிப் திருவஞ்சைக்களமென்ற ஊரிலே குல வதரித்தார் என்பது தெரியவருகிறது. குமரராய் மாநிலத்தில் தோன்றிய குல ளொரு மேனியும் பொழுதொரு வண்ண லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று நல்லாசிரியர் துணைகொண்டு நான்கு யும் ஆறு சாஸ்திரங்களையும் நீதி ம் போர்க் கலைகளையும் ஐயந்திரிபறக் வராயினார்; நாளடைவில் திடவிரத ல் அரசுரிமை முழுவதையும் ஏற்குமாறு ப் பெற்றார்; தம் செங்கோல் சிறப் ராஜ்யம் சேர நாட்டில் நடைபெறச் இந்நிலையில் குலசேகரர் இல்லற செழித்தோங்கிச் சிறப்புற்றிருந்தது. நாட்டிலும் நல்லறம் ஓம்பி கொண் சேகரர் உள்ளத்தில் ஒரு சமயம் மாமலர் பால மறைந்திருந்த ஞான விசாரம் மணம் கமழ்வதாயிற்று. ஞான பயனாகக் குலசேகரர் கருணைக் திருமாலே தம்மை உய்விக்க வல்ல பரம் ன்பதைத் தெளியலானார்; அது முதல் அருட்பண்புகளாகிய பெருங்கடலில் இன்புறலானார்; திருமாலின் பல் ாரங்களைப் பற்றிய வரலாறுகளையும் *ஆம் கேட்பதில் சலியாத ஆர்வம்* ார்; பாற்கடலில் துயின்ற பரம கேள் அனைத்தையும் சென்று வணங் கப் பெருங் காதல் கொண்டார். சிறப்பாகக் குல சேகரர் திருமாலின் அடியார்களை இறைவன் அமிச மென்றே போற்றி வழிபாடாற்றுவதிலும் அவர்கள் திருவாயால் இராமபிரான் வாழ்க்கைச் சரிதத்தை காது குளிர நெஞ்சுருகக் கேட்பதிலும் தம்காலத்தை எல்லாம் கழித்து வந்தார்.

திருமாலின் அவதாரங்களுள் எல்லாம் குல சேகரர் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அவ தாரம் ராமாவதாரமே என்பது அவர் வாக்காலும் வரலாற்றாலும் தெள்ளிதின் புலனாகின்றது. கோசலை நாடுடை வள்ளலின் திவ்விய சரிதத்தை கேட்கும் காலத்தில் குலசேகரர் தம்மை மறந்து கேட்கும் தகைமை உடையவராய் விளங்கிய சிறப் பினைக் குறித்துச் செவிவழிச் செய்திகளாம் கதைகள் சில சுவை நிறைந்தனவாயுள்ளன. உண்மை யான பத்தனின் ஆழ்ந்த பத்தியை அளவிட்டுக் காட்டும் தன்மையனவாய் அவை திகழ்கின்றன.

ஒரு நாள் பாகவதர் ராமாயண காலட் சேபம் செய்துகொண்டு இருந்தாராம். அப்போது ஆரணிய காண்டத்தில் இராவணன் தங்கையான சூர்ப்பணகை மூக்கு அறுப்புண்டு கரதூஷணாதி யர்களிடத்தில் போய் முறையிட்டதை அறிந்து அவர்கள் அதி உக்கிரமாய் எண்ணிறந்த சேனை களைத் திரட்டிக் கொண்டு படை எடுத்து வந்த சமயத்தில் பெருமாள் பிராட்டிக்குக் காவலாய் இருக்கும்படி இளையபெருமாளைப் பன்ன சாலையிலே நிறுத்திவிட்டுத் தமக்கு ஒருவரும் துணை இன்றித் தாம் தனியே அவ்வரக்கர் அனைவரோடும் போருக்குச் சென்று நின்றார் என்று பௌராணிகர் சொல்லக் கேட்டார் குல சேகரர். ராமபிரான்பால் தமக்குள்ள ஈடுபாட்டு மிகுதியினால் பல்லாயிரம் ஆண்டுகட்குமுன் நிகழ்ந்த அந்நிகழ்ச்சியை இன்றுதான் நடப்பதாக நினைத்து 'இப்படி எம்பெருமான் சங்கடத்தில் சிக்கிய வேளையில் எம்மாலியன்ற உதவியைச் செய்யாது விடுவது அறமன்று!'' என்று துணிந்து, தம் படைகளை எல்லாம் போருக்குப் புறப்படும்படி ஆணை பிறப்பித்துத் தாமும் போர்க்கோலம் பூண்டு சீதை கேள்வரைக் காக்க முந்தினாராம் குலசேகரர். அச்சமயத்தில் யாவரும் செய்வதறி யாது திகைத்து நின்றனர். குலசேகரரின் மன இயலை நன்குணர்ந்த பாகவதர் உடனே, 'இராம பிரான் தாம் ஒருவராகவே நிர்ப்பயமாகப் பிரபல யுத்தம் செய்து சத்துருக்கள் அத்தனை பேரையும் *சயித்துத் தமது ஆசிரமத்திற்கு மீண்டு வர அவரைச்* சீதாதேவி களிப்புடன் அணைத்து அவரது இளைப்பைத் தணித்தாள்' என்ற செய்தியைக்

கூறினாராம். அது கேட்ட குலசேகரர் எல்லை
யில்லா மகிழ்ச்சி கொண்டு தம் போர்ச்செலவை
நிறுத்தினாராம்.

பிறிதொரு சமயம் வழக்கமாகக் காலட்சேபம்
செய்யும் பாகவதர் தாம் வரமுடியாத நிலையில்
தம் மைந்தரைக் கதை சொல்லுமாறு அனுப்பி
வைத்தார். பாகவதரின் மைந்தர் குலசேகரரின்
இயற்கையை நன்குணராதவர். எனவே, அவர்
கதை சொல்லும் காலத்தில் ஒரு சமயம் இராவ
ண்ன் சீதையை எடுத்துப் போனகொடியசெய்தியை
விளக்கமாகக் கூற, அது கேட்ட குலசேகரர் மனங்
கொதித்து எழுந்து 'இக்கணமே யான் இலங்கைமீது
படை எடுப்பேன்! இராவணனை—அரக்கர் குலத்
தைப்—பூண்டோடு அழிப்பேன்; சிறை வைக்கப்
பட்ட என் தாயை மீட்டுக் கொண்டு வருவேன்!'
என்று ஆயுதங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு
படைகளை எல்லாம் தம் பின் வருமாறு பணித்து
ஆவேசத்துடன் புறப்பட்டாராம். முன்போலப்
பாகவதர் சாதுரியத்தால் தடை செய்யாப்படாத
குலசேகரர், இலங்கையைச் சூழ்ந்திருக்கும் கடலுக்
குள்ளும் விரைந்து சென்று கழுத்தளவு தண்ணீரி
லும் நிற்க முனைந்து விட்டாராம். அந்நிலையில்
இராமபிரான் தம் பத்தரின் மாசற்ற காதலை
நினைந்து மனமுருகிச் சீதா பிராட்டியுடன் காட்சி
யளித்து, 'குலசேகர, சீதா பிராட்டியை யானே
மீட்டுவிட்டேன். நீ மேற்செல்ல வேண்டா. இப்
பெருங்கடலினின்றும்— பிறவிக் கடலினின்றும்—
கரையேறுக!' என்று திருவாய் மலர்ந்தருளினா
ராம்.

இவ்வாறு தசரத குமாரரின் வாழ்க்கைச் சரி
தங்களைக் கேட்டு மகிழ்வதிலேயே பொழுதை
யெல்லாம் போக்கிக் கொண்டிருந்த குலசேகரர்க்கு
திருமால் கோயில் கொண்டுள்ள திருவரங்கம்
முதலிய திருப்பதிகட்குச் செல்ல வேண்டும் என்ற
பேராவல் கிளர்ந்து எழுந்தது. அது கண்ட அமைச்
சர்கள் குலசேகரரைத் திருவரங்கத்திற்குச் செல்ல
விட்டால் அவர் அண்மையில் மீளுதல் அரிது
என்று கருதினர்; எனவே, எவ்வாறேனும் அரசரின்
செலவைச் சிறிது காலமேனும் தடுத்து வைத்திருத்
தல் நாட்டின் நன்மைக்குத் துணை புரிவதாகும்
என்று கருதி, ஓர் உபாயத்தை மேற்கொள்ளலா
யினர். 'அறுபதினாயிரம் ஆண்டு விஷ்ணுவை
ஆராதனம் செய்த பயனும் ஒருகால் வைணவர்
களைப் பூசித்த பேற்றுக்கு ஈடாகாது' என்ற
சாஸ்திர முறை அறிந்தவர் குலசேகரர் ஆதலால்,
திருவரங்கத்திற்குத் தலயாத்திரை புறப்பட்ட
திருவுடைமன்னர் முன்பு எண்ணற்ற வைணவ
பத்தர்களை அழைப்பித்து வந்து நிறுத்தினர்.
அடியார் திரளைக் கண்ட அரசர் பெருமான், தம்
செலவை நிறுத்தி, அன்னாரை உபசரிப்பதில்
கண்ணும் கருத்துமாய் இருக்கலானார். அமைச்
சர்கள் கருதியது கைகூடியது. ஆனால், அமைச்
சர்கள் நாளடைவில் தங்கள் பொறாமை உள்ளத்
தால் தாங்கள் செய்த செயலையே நினைந்து
வருந்தத் தலைப்பட்டனர். தங்களால் அறிமுகப்
படுத்தப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் அரசர்பால்
அதிக உரிமை பாராட்டல் கண்டு அவர்கள் அழுக்
காறு கொண்டார்கள். அதன் விளைவாக அடாத
செயல் ஒன்றையும் அவர்கள் செய்யத் துணிந்தார்
கள். ஒருநாள் கோயில் அர்ச்சகர் திருவுருவா
யுள்ள அடியார்க்குத் திருமுழுக்காட்டல் வேண்டித்
திரு ஆபரணங்களை எல்லாம் களைந்து ஓரிடத்து
வைத்திருந்தனர். அவ்வமயம் அமைச்சருள் திட்ட
மிட்டவாறு அவ்வாபரணத்திரளுள் ஒன்றைப்
பக்குவமாய்க் கவர்ந்து ஒளித்தனர். சிறிது நேரத்
தில் ஆபரணமொன்று காணாதது கண்டு கலங்கிய
அர்ச்சகர் அரசர்பால் சென்று முறையிட்டார்.
செய்தி அறிந்த குலசேகரர், 'கள்வனை விரைவில்
கண்டு பிடியுங்கள்!' என்று கட்டளையிட்டார்.
அதுதான் தக்க சமயம் என்று கருதிய அமைச்
சர்கள், 'கள்வரை வெளியிலெங்கும் தேடவேண்டா.
இங்கு எங்கும் திரியும் வைணவர்களே ஆபர
ணத்தைக் களவாடியவர்கள்' என்று பகர்ந்தனர்.
அது கேட்டு அரசர் உள்ளம் துடித்தது. 'திருமால்
அடியார்கள் ஒரு போதும் இத்தகைய கடுந்
தொழிலைக் கனவிலும் நினையார். இதை உங்
கட்கு உறுதிப்படுத்த யானே பிரமாணம் காட்டு
வேன்!' என்று சொல்லிப் பாம்பை உள்ளிட்ட
தொரு குடத்தைச் சபை முன்னே தருவித்துத்
'திருமாலடியார் மனம், மெய், மொழி மூன்றாலும்
தூயராயின், இப்பாம்பு என்னைத் தீண்டாது
அடங்குக!' என்று சபதம் செய்து, அக்குடத்தி
னுள்ளே கையிட்டனர். அப்பொழுது சத்தியத்
திற்குக் கட்டுப்பட்ட சர்ப்பம் சிறிதும் கொடுமை
புரியாது ஒடுங்கிக் கிடந்தது. அது கண்ட அமைச்
சர் அஞ்சி நடுங்கித் தாம் செய்த தவற்றை மறை
யாது கூறி அரசர்பால் மன்னிப்பும் வேண்டினர்.
அருள் நெஞ்சினரான குலசேகரரோ, 'இனி நீவிர்
பாகதர்க்கு எப்போதும் பணிவிடை செய்வதே
நுமது குற்றம் தீரும் வகை' என்று பணித்தருளி
னார். இவ்வாறு ராமசரித்திரத்திலும் திருமாலடி
யார்களிடமும் ஆராக்காதல் கொண்டிருந்த குல
சேகரரைப் பத்தர் உலகம் 'ஆழ்வார்' என்றும்
'பெருமாள்' என்றும் போற்றியதில் வியப்பில்லை
அன்றோ?

குலசேகரர் நாள் செல்லச் செல்ல அரசாளும்
பெருவாழ்வில் வெறுப்புக் கொண்டார். அண
அரங்கன் திருக்கோயில் முற்றத்தில் தொண்டரடிப்
பொடியாய் வாழ்வதே வாழ்வு என்றுகருதலானார்.
எனவே, தம் திருமகனை அரியணையில் அமரச்
செய்து விட்டு, மன்னுகாவிரிசூழ் திருவரங்கத்
திற்குப் பயணமானார். அங்கு எழுந்தருளியுள்ள
நம்பெருமாளைச் சேவித்து அவ்வழகிய மண
வாளனையே தனக்குரிய காதலனாகக் கருதி
தம் திருமகளை அப்பெருமானுக்கே உரிய பொரு
ளாகக் கொடுத்து மணம் செய்வித்து, இறைபணி
களை விதிமுறை வழுவாது ஆற்றியிருக்கலானார்.
மற்றும் திருவேங்கடம், திரு அயோத்தி, தில்லைத்
திருச்சித்திரக்கூடம், திருக்கண்ணபுரம், திருமால்
ருஞ்சோலை, திருவிற்றுவக்கோடு முதலிய திருப்ப
கட்கும் சென்று ஆங்காங்கு எழுந்தருளியுள்ள
பெருமாளைக் கண்மணி குளிரக் கண்டு வணங்கி
அப்பால் நம்மாழ்வார் பிறந்தருளிய திருக்கு
கூரை அடுத்துள்ள பிரமதேசத்திற்கும் சென்
திருத்தொண்டு செய்து கொண்டிருந்த நிலையில்
தமது அறுபத்து ஏழாம் ஆண்டில் பரமபதமடை
தார் குலசேகரப்பெருமாள் என்பர் கற்றறிந்தோர்

குலசேகராழ்வார் வடமொழியிலும் தமி
மொழியிலும் கவிபாடும் ஆற்றலில் சிறந்து விளங்
னார் என்பர். வடமொழியில் 'முகுந்த மாலை
என்றதொரு நூலை அவர் இயற்றியதாகக் கூறுவ
இது பற்றிக் கருத்து வேறுபாடும் நிலவுகிறது
ஆயினும், அரசகவிஞராகிய குலசேகரரின் கவி
திறனுக்கும் பத்தி உணர்ச்சிக்கும் கடவுள் அடியா
பால் கொண்டிருந்த மதிப்பிற்கும் சான்று பகர்
தாய் விளங்குவது அவர் இயற்றிய பெருமா
திருமொழி என்னும் நூலாகும். குலசேகராழ்வா
செப்பிய இச்செஞ்சொல்மொழி நூற்றைந்தை
கூறுவார் உள்ளம் பத்தி வெள்ளத்தில் மூழ்குவ
திண்ணம். பெருமாள் திருமொழியைப் பத்

பிரிவுகளாகப் பாகுபாடு செய்துள்ளனர். திருவரங்கப் பெருமாளைக் காணும் காட்சியில் ஆழ்வார் கொண்ட காதலை அறிவிப்பது முதல் திருமொழியாகிய 'இருளிரியச் சுடர் மணிகள்' என்றுதொடங்கும் பதினொரு பாடல்கள். அரங்கன் அடியாரது அடிமைத் திறத்தில் குலசேகரர் கொண்ட ஈடுபாட்டைக் குறிப்பது 'தேட்டருந்திறல்' என்று தொடங்கும் இரண்டாம் திருமொழி. உலகியலை விரும்பாது அரங்கன் அடியே கதியென ஆழ்வார் கருதிய கருத்தை வெளிப்படுத்துவது 'மெய்யில் வாழ்க்கையே' என்று தொடங்கும் மூன்றாம் திருமொழி. எம்பெருமானை இமைப்பொழுதும் மறவாது கண்டு களிக்கத் திருவேங்கட மலையில் பிறத்தலை ஆழ்வார் விரும்பிய விருப்பத்தினை வெளிப்படுத்துவது 'ஊனேறு' என்று தொடங்கும் நான்காம் திருமொழி. வித்துவக்கோட்டம்மானின் விழுப்புகழை ஓதுவது 'தருதுயரம் தடாயேல்' என்று தொடங்கும் ஐந்தாம் திருமொழி. ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்கி உரைத்த அழகினைச் செப்புவது 'ஏர்மலர்ப் பூங்குழல்' என்று தொடங்கும் ஆறாம் திருமொழி. கண்ணனது பிள்ளை விளையாட்டுக்களைக் காணப் பெறாத தேவகியின் புலம்பலைக் கூறுவது 'ஆலைநீள் கரும்பு' என்று தொடங்கும் ஏழாம் திருமொழி. சக்கரவர்த்தி திருமகனாகிய ராகவனைக் கௌசலையார் தாலாட்டும் பாசுரம் 'மன்னு புகழ்' என்றுதொடங்கும் எட்டாம் திருமொழி. தனயன் கானகம்புகத் தசரதன் புலம்பிய துயரினைத் தெரிவிப்பது 'வன்தாளிணை' என்று தொடங்கும் ஒன்பதாம் திருமொழி. ராமாயணக் கதைச்சுருக்கத்தை இரத்தினச் சுருக்கமாய்க் கூறுவது 'அங்கண் நெடுமதில்' என்று தொடங்கும் பத்தாம் திருமொழி. இவ்வாறு 105 பாசுரங்களாய்ப் பத்துத் திருமொழிகளாய் இராமாயண சாரமாய் விளங்கும் பெருமாள் திருமொழியைப் போற்றிப் புகல்வார் நண்ணார் நரகமென்பது திண்ணமன்றோ?

பத்திக்கனியின் தீஞ்சாறாய் விளங்கும் தமிழ் மாலையாகிய பெருமாள் திருமொழியில் உள்ள சிற்சில மலர்களின் அழகையும் மணத்தையும் அவை பிலிற்றும் பத்தித் தேனின் தெய்வச் சுவையை மட்டும் ஈண்டு நுகர்வோம்:

மாவினைவாய் பிளந்துகந்த மாலை வேலை

வண்ணனைஎன் கண்ணனைவன் குன்றமேந்தி

ஆவினையன் றுயக்கொண்ட ஆய ரேற்றை

அமரர்கள்தந் தலைவனையந் தமிழி னின்பப்

பாவினைஅவ் வடமொழியைப் பற்றற் றார்கள்

பயிலரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்

கோவினைநா வுறவழுத்தி என்றன் கைகள்

கொய்ம்மலர்தூ யென்றுகொலோ கூப்பும்
நாளே?

இது பெருமாள் திருமொழியில் நான்காவதாய் அமைந்த பாடல். இப்பாடலில் குலசேகராழ்வார் தம் கண்கண்ட தெய்வமாகிய கண்ணனை மணிவண்ணனைத் தமிழ்க் கவிதையாய்—வடமொழிச் சுவையாய்ப்போற்றும் திறத்தினை எண்ணி வியந்து மகிழ்ந்து போற்றாதிருத்தல் இயலுமோ?

'ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ

வானாளும் செல்வமும் மண்ணரசும்

யான்வேண்டேன்!

தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே.'

(பெருமாள் திருமொழி4:2)

இப்பாட்டால் ஆழ்வார் தாம் அனுபவித்து இன்புற்ற அரசபோகத்தையும் வெறுத்து வேங்கடவன் தண்ணருளையே விரும்பிய பான்மை விளங்கும்.

'ஒண்பவள வேலை யுலவுதண் பாற்கடலுள்
கண்துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து
செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே.'

(பெருமாள் திருமொழி 4:4)

இப்பாடல் குலசேகரரின் கவியுள்ளத்திற்கும் மலரினும் மெல்லிய கலையுள்ளத்திற்கும் சிறந்ததொரு சான்று.

'செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!

நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்

அடியாரும் வானவரும் அரம்பையரும்
கிடந்தியங்கும்

படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே!'

(பெருமாள் திருமொழி4:9)

இப்பாடலால் குலசேகரரின் பத்தி உள்ளத்தின் எல்லை புலனாகும்.

வேங்கடத்தில் கோயில் கொண்ட பெருமானின் பவளவாயைக் காண அவன் திருக்கோயில் படியாயேனும் கிடக்க ஆழ்வார் கொண்ட அவா அடியவர் உள்ளத்தையெல்லாம் உருக்கியது. அதனாலன்றோ. இன்றுங்கூடத் திருமால் கோயிலிலுள்ள வாயிற்படி 'குலசேகரன் படி' என்று போற்றப்படுகின்றது.

'மீன்நோக்கும் நீள்வயல்சூழ் விற்றுவக்கோட்
டம்மா!என்

பால்நோக்கா யாகிலும்உன் பற்றல்லால்பற்றில்லேன்
தான்நோக்காது எத்துயரம் செய்திடினும்
தார்வேந்தன்

கோல்நோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே!'

(பெருமாள் திருமொழி 5:3)

இப்பாடலால் அரசகவிஞராகிய குலசேகரர் கரவறியாக் குடிமக்களின் அன்புள்ளத்தின் ஆழத்தை அறிந்திருந்த அறிவு புலனாகும்.

'மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு
வாய்த்தவனே!

தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்!
செம்பொன்சேர்

கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென்
கருமணியே!

என்னுடைய வின்னமுதே! இராகவனே! தாலேலோ

(பெருமாள் திருமொழி 8:1)

அருமை சான்ற இக்கவிதையால் ஆழ்வாரின் கவியுள்ளம் - குழந்தைகளைப் போற்றும் தெய்விகத் திருவுள்ளம்—தெள்ளிதிற்புலனாகும்.

பெருமாள் திருமொழியில் ஈடுபட்ட பெரியா பலர். அவர்களுள் தலை சிறந்த ஒருவர் அர கவிஞராகிய குலசேகரரின் திருமொழிகளை ஓ யோதி உள்ளம் குளிர்ந்து காதலாகிப் பாடி கவிதை ஒன்று குலசேகரரைப் பற்றிய நம் சிந்தனை களின் மணிமுடியாய்த் திகழத்தக்க மாண்பு மிக் தாகும்.

'இன்னமுத மூட்டுகேன் இங்கேவா பைங்கிளியே
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமான்—
பொன்ன

சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன் எங்க
குலசே கரனென்றே கூறு.'

இதுவே பத்தரைப் போற்றிய பத்தரின் பாட

—o—

# ஆன்றோர்கள் வாழ்க்கையிலே

இராமலிங்க சுவாமிகளின் அண்ணார் சபாபதி பிள்ளை புராணச் சொற்பொழிவுகள் செய் அதனால் வரும் வருவாயைக்கொண்டு தம்முடைய குடும்பத்தை நடத்தி வந்தார். சென்னை இலிங்கி செட்டித் தெருவில் உள்ள சோமு செட்டியார் இல்லத்தில் (தற்போது மறைமலையடிகளார் நூ நிலையம் நிகழும் இடம்) சபாபதி பிள்ளை, பெரிய புராணச் சொற்பொழிவைத் தொடங்கி நடத் கொண்டிருந்தார். ஒரு நாள் அவருக்கு உடல் நலம் இல்லை. உடல் நலம் இல்லாத காரணத்தினா சொற்பொழிவாற்றப் போகாமல் இருந்து விட்டால் வருமானம் இன்றிக் குடும்பம் வாடநேரும். இ கட்டான இச்சூழ்நிலையில் அவருடைய மனைவி பாப்பாத்தி அம்மாள் ''தம்பி இராமலிங்கத்தை இ றொருநாள் மட்டும் சொற்பொழிவாற்ற அனுப்பலாமே'' என்றார்.

அப்போது இராமலிங்கத்திற்கு வயது பன்னிரெண்டு தான். பள்ளிக்குப் போய் பாடம் படிக்க மல் கோயில்களுக்குப் போய் பக்திப் பாடல்களை இறைவன் திருவருளால் தாமாகவே புனைந் பாடிக்கொண்டிருந்தார் அந்த இளம் வயதிலேயே. அவரை அண்ணியார் வற்புறுத்த, அண்ண சபாபதி பிள்ளையும் அரைகுறையாகச் சம்மதிக்க சோமு செட்டியாரின் இல்லம் வந்தடைந்த அடிக தம் அண்ணாருடைய உடல்நலமின்மையைத் தெரிவித்துத் தாமே அன்றைய சொற்பொழிவை நிகழ்த் இருப்பதைத் தெரிவித்தார். ''சபாபதி பிள்ளையின் அகவை என்ன? அறிவாற்றல் என்ன? அவருக்கு பதில் பன்னிரெண்டு வயதும் நிறையாத பாலகனா சொற்பொழிவு நிகழ்த்தப் போகிறான்?'' என் ஐயம் சோமு செட்டியாருக்கு இருந்தாலும்கூட, மக்கள் சொற்பொழிவைக் கேட்கத் திரளாகக் கூ விட்டிருந்தபடியாலும், அப்போதைக்கு வேறு ஒரு சொற்பொழிவாளரைத் தேட நேரமில்லாத ப யாலும், அவரும் அரைகுறை மனதோடு இராமலிங்கம் சொற்பொழிவாற்ற இசைவு தெரிவித்தா

இராமலிங்கனாரின் முதல் சொற்பொழிவே வெகு அற்புதமாக அமைந்து அவையோர் அ வரையும் மெய் மறக்க வைத்துவிட்டது. முதலில் இசைவைத் தெரிவிக்க தயங்கிய சோமு செட்டியா இராமலிங்கனாரின் சொற்பொழிவிலே சொக்கிப் போய் சபாபதி பிள்ளைக்குப் பதிலாக இராமலி னாரையே தொடர்ந்து சொற்பொழிவாற்றக் கேட்டுக் கொண்டார் என்றால் சிறிய வயதிலே சிறந்து விளங்கிய அடிகளாரின் அறிவாற்றலை என்னவென்று வியப்பது!

# திருமுறைகளில் திருக்குறள்

அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்
மதுரை.

திருக்குறள் பன்னிரு திருமுறைகளில் ஒன்று அல்லவாயினும், அதன் எதிரொலி திருமுறைகளில் பல இடங்களில் ஒலிப்பதைக் காணலாம். அவற்றுள் குறட் கருத்துக்களைக் கூறும் இடங்களும், அதன் சொற்றொடர்களை அப்படியே கையாண்ட இடங்களும் உள்ளன.

சமய வாழ்விற்கு ஒழுக்கம் இன்றியமையாமை யாகும். உலகில் எங்கும் ஒழுக்கத்தைப் புறக்கணித்த சமயங்கள் கிடையா. மனித இனத்திற்கே ஒழுக்க நெறியை வகுத்துக் கொடுத்த நூல் திருக்குறள் என்பது உலக அறிஞர்கள் ஏற்றுக் கொண்ட கருத்தாகும். திருவள்ளுவர் திருக்குறளைத் தமிழ்மொழியில் இயற்றியதால், தமிழ் மொழியும் தமிழ் இனமும் உலகப் புகழ் பெற்றன. அத்தகைய சீரிய தலைசிறந்த ஓர் ஒழுக்கநூலைத் தமிழகத்தில் தோன்றிய சித்தாந்தச் சைவம் புறக்கணித்திருக்க இயலாது. எனவே சித்தாந்தத் தோத்திர சாத்திரங்களில் திருக்குறட் கருத்துக்கள் எவ்வாறு விளக்கம் பெற்றுள்ளன என்பதை ஒரு சில எடுத்துக்காட்டுக்களால் விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

தென்முகக் கடவுளாகிய தட்சிணாமூர்த்தி, கல்லாலின்கீழ் அமர்ந்து, அருந்தவத்தோர் நால்வர்க்கு அருளியது யாது என்பதனை மாணிக்க வாசகப் பெருமான் கூறுகிறார். அவர்களுக்கு இறைவன் அருளியது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களே என்கிறார். மேலும் எதற்காக அவற்றை அருளினார் என்பதையும் வினா விடையாக அமைத்துத் திருவாசகம் - திருச்சாழலில் விளக்குகின்றார்.

''அருந்தவருக்கு ஆலின் கீழ்
அறமுதலா நான்கனையும்
இருந்தவருக்கு அருளுமது எனக்கு
அறிய இயம்பேடீ!
அருந்தவருக்கு அறம்முதல் நான்குஅன்று
அருளிச் செய்திலனேல்
திருந்த அவருக்கு உலகியற்கை
தெரியாகாண் சாழலோ!''

நான்மறைகளையும் அறிந்த அருந்தவத்தோர்களும் உலக இயற்கையை அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாமையாகும் என்பதை இது தெளிவுபடுத்துகிறது. இங்கு 'அறம் முதல் நான்கு' என்று மாணிக்கவாசகர் குறிப்பாகக் கூறிய தற்கு ஒரு விளக்கம் கொடுப்பதுபோல திருஞான சம்பந்தர், முதுகுன்றில் அருளிய ஒரு பதிகம் அமைந்துள்ளது.

''சுழிந்த கங்கை, தோய்ந்த திங்கள்,
தொல் அரா நல்இதழி
சழிந்த சென்னிச் சைவவேடந்
தாளிணைந்து ஐம்புலனும்
அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு
அறம்பொருள் இன்பம்வீடு
மொழிந்த வாயான் மூக்கண் ஆதி
மேயது முதுகுன்றே''

ஐம்புலன்களையும் அவித்த சிந்தையுடைய அந்த ணாளர்களுக்கு, அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கினையும் மொழிந்த திருவாயை யுடையவன் முக்கண் ஆதியாகிய சிவபெருமான் என்பதைத் தெளிவாகக் கூறுகிறார்.

மேற்கூறிய நான்கு உறுதிப் பொருள்களைக் கூறுவதே திருவள்ளுவர் அருளிய திருக்குறள். அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்று பால்களாகத் திருக்குறள் வகுக்கப் பெற்றிருப்பினும், நான்காவ தாகிய வீடும் அதனுள் அடங்கியுள்ளது என்பது அறிஞர் துணிபு.

கீரந்தையார் என்ற சங்கப் புலவர் ''தப்பா முதற் பாவால் தாமாண்ட பாடலினான் முப் பாலின் நாற்பால் மொழிந்தவர் - தெய்வத் திருவள்ளுவர்'' என்றும், மாமூலனார் என்றபுலவர் ''அறம் பொருள் இன்பம் வீடென்னும் அந்நான் கின் திறம் தெரிந்து செப்பிய தேனே'' என்றும் கூறுவதன் மூலம் நான்கு உறுதிப் பொருள்களும் திருக்குறளில் உள்ளன என்பதைத் தெளிவாக

உணரலாம். வீடு எவ்வாறு திருக்குறளில் அமைந்துள்ளது என்பதைத் திருக்குறள் உரைப்பாயிரத்தில் பரிமேலழகர் விளக்குகிறார்:

''இறையவர் பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடும், நெறியறிந்து எய்துதற்கு உரிய மாந்தர்க்கு, உறுதி என உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம் பொருள் இன்பம் வீடு என்பன. அவற்றுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாதலின், துறவறமாகிய காரண வகையால் கூறப்படுவது அல்லது, இலக்கண வகையாற் கூறப் படா'' என்று கூறுகிறார். அதனால் திருக்குறளில் வீட்டை உணர்த்துவது துறவறவியல் என்பதாம்.

அருந்தவத்தோர்களும் உலக இயற்கையை அறிந்து கொள்ளவேண்டுமென்று மாணிக்கவாசகர் திருச்சாழலில் கூறியதை அப்பர்பெருமானும் வலியுறுத்துகின்றார். ஞாலத்தை அறிந்து நல்வாழ்வு வாழவிருப்பமுடையோர் சிலநெறிகளைப் பின்பற்ற வேண்டுமென்றும், அந்நெறி நிற்பதே இறைவனை நோக்கிச் செய்யும் நோன்பாகும் என்றும் கூறுகிறார்.

''ஞாலம் அறிய வேண்டு நன்றுஎன
வாழல் உற்றீர்;

காலமுங் கழியலான கள்ளத்தை
ஒழிய கில்லீர்!

கோலமும் வேண்டா, ஆர்வச்செற்றங்கள்
குரோதம் நீக்கில்

சீலமும் நோன்பும் ஆவார்
திருச்செம்பொன் பள்ளியாரே''

—அப்பர்

கள்ளத்தை ஒழியாது இருக்கின்றீரே! என்கிறார் அப்பர். 'பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம்' என்று உள்ளத்தால் உள்ளுவதும் தீதே' என்று திருவள்ளுவர் கூறுகின்றார். திருக்குறளில் கள்ளாமை என ஓர் அதிகாரமே வைத்துள்ளார்.

'கோலமும் வேண்டா' எனும் அப்பர் கருத்தைக் கூடா நட்பு எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் விளக்குகின்றார். உலகம் பழிக்கும் செயல்களை ஒழித்துவிடின், மழித்தலும் நீட்டலுமாகிய கோலங்கள் வேண்டாம் என்கிறார். (குறள் 280)

'ஆர்வச் செற்றங்களை நீக்குக என்றார் அப்பர். யார்மாட்டும் வெகுளியை மறந்துவிடு இல்லையாயின் அதனால் தீமையே விளையும் என்கிறார் திருவள்ளுவர், வெகுளாமை என்று ஓர் அதிகாரமே அமைத்து.

குரோதத்தை நீக்கு என்கிறார் அப்பர். திருவள்ளுவர் இகல் எனும் அதிகாரத்தில் துன்பத்தைக் கொடுக்கும் குரோதத்தை நீக்கின் அழிவில்லாத புகழைப் பெறலாம் என்கிறார் (குறள் 853).

இதுபோன்றே திருஞானசம்பந்தரும் அரு... கின்றார். கள்ளம் ஒழித்து, கடுஞ் சொற்களை தவிர்த்து, வாய்மை தவறாது, பிறர் பொரு... கள் விரும்பாது, நல்லவாறு இறைவன் நாம... தைக்கூறி வழிபட என்னை வல்லவனாக்கி அரு... வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறார். இ... வேண்டுகோள் தமக்காக அன்றி, மக்கள் உய்வத... காகச் சம்பந்தர் விடுத்ததாகும் என்பதை நினை... கொள்க.

ஒல்லையாறி உள்ளம் ஒன்றி, கள்ளம்
ஒழித்து, வெய்ய

சொல்லையாறி தூய்மை செய்து
காமவினை அகற்றி

நல்லவாறே உன்தன் நாமம்
நவின்று நவின்று ஏத்த

வல்லவாறே வந்து நல்காய்
வலிவலம் மேயவனே.

—சம்ப...

இப்பாடலில், கள்ளாமை, இனியவைகூ... வாய்மை, வெஃகாமை என்னும் திருக்குறள்... காரங்கள் நான்கின் கருத்துக்கள் பொதிந்துள்ள... இனி, சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பாட்டுக்க... திருக்குறட் சொற்றொடர்களை அப்படியே அ... துள்ளதைக் காணலாம். திருநெல்வா... அரத்துறைப்பதிகத்தில் காண்பன:

1. ''பொறிவாயில் ஐந்தினையும் அவியப்பெ...
உன்னடியே புகும் சூழல் சொல்லே''

2. ''அற்றார் பிறவிக்கடல் நீந்தியேறி அ...
னு...
போவதோர் சூழல் சொல்லே''

3. ''உறங்கி விழித்தால் ஒக்கும் இப்பிறவி...
வாடியிருந்து வருத்தல் செய்யாது
அடியேன் உய்யப் போவதோர் சூழல்...
சொ...

**உண்டியல் வருமானம் அதிகம்**

கடந்த 9 மாதங்களில் கோ... உண்டியல்களில் 40 சதவீதம் காணிக்... வருமானம் பெருகி இருக்கிற... எம்.ஜி.ஆரின் உடல் நலனுக்காக அ... மானோர் வேண்டுதல் செய்து காணிக்... தந்ததால்தான் இந்தத்தொகை உயர்ந்...

—மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர்...
சிகிச்சை நிதியை அரசுக்கு அளி...
விழாவில் அமைச்சர் ஆர்.எம்.வீ...

ச. ''அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய் அடியேன்

உய்யப் போவதோர் சூழல் சொல்லே!''

இவற்றின் முறையே கீழ்க்கண்ட திருக்குறள் சொற்றொடர்கள் அமைந்துள்ளது வெளிப்படை.

க. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க

நெறிநின்றார் நீடுவாழ் வார் (6)

உ. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்

இறைவன் அடிசேரா தார் (10)

ங. உறங்குவது போலும் சாக்காடு உறங்கி

விழிப்பது போலும் பிறப்பு (339)

ச. அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு (1)

திருஞானசம்பந்தப் பெருமான் திருக்கடைக்காப்பிலும் பல பாடல்களில் திருக்குறட் சொற்றொடர்கள் அமைந்துள்ளன.

''இடுக்கட்படினும் இளிவந்த செய்யார் நடுக்கற்ற காட்சியவர்' என்ற குறளின் சொற்றொடர் கீழ்க்கண்ட பாடலில் காண்க:

''இடுக்கட் பட்டிருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற்பீர் யாரென்று வினவுவோமல்லோம்
அடுக்கற் கீழ்க்கிடக்கினும் அருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே'

—சம்பந்தர்

''சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்

கலத்துள் நீர்பெய்திரீஇ யற்று'' என்பதில் வரும் சொற்றொடரை ஆளும் சம்பந்தர், திருஎருக்கத்தம்புலியூர் நன்மக்களைக் குறிப்பிடும் பொழுது ''சலத்தினாற் பொருள்கள் வேண்டுதல் செய்யாத் தன்மையர்'' என்று குறிப்பிடுகிறார்.

சேரமான் பெருமான் நாயனார் அருளிய 'திருக்கைலாய ஞானவுலா' திருக்கைலாயத்தில் சிவபெருமான் திருமுன் அரங்கேற்றப்பெற்றது. இவ்வுலாவில் நாயனார் திருக்குறளைப் பல இடங்களில் அமைத்ததுடன் அவை பண்டையோர் கட்டுரை என்றும் பெருமிதம் அடைகிறார்.

''இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை

எல்லாரும் செய்வர் சிறப்பு என்னும்-

சொல்லாலே''

''கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்

ஒண்டொடி கண்ணே உள என்ற பண்டை

யோர் கட்டுரையும்..''

எனவரும் திருக்கைலாய ஞானஉலா பாடற்பகுதிகளில் குறள் கருத்துக்கள் இடம் பெற்றிருப்பதைத் தெளியலாம்.

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் திருமூலநாயனார், திருக்குறளிலுள்ள பன்னிரண்டு அதிகாரத் தலைப்புக்களையே, தாமும் தலைப்புக்களாகக் கொண்டு முதல் தந்திரத்தில் 12 பிரிவுகளாக விளக்கியுள்ளார்.

அத்தலைப்புக்கள் கீழ்க்கண்டவையாகும். (1) நிலையாமை (2) கொல்லாமை, (3) புலால்மறுத்தல் (4) பிறர்மனை நயவாமை (5) வான்சிறப்பு (6) அறன்வலியுறுத்தல், (7) அன்புடைமை, (8) கல்வி (9) கேள்வி (10) கல்லாமை (11) நடுவு நிலைமை (12) கள்ளுண்ணாமை.

சேக்கிழார் அருளிய திருத்தொண்டர்புராணத்தில் நாயன்மார்கள் ஆற்றிய அருஞ்செயல்கள் திருவள்ளுவர் வகுத்த நெறிகளில் அமைந்ததாக இருக்கும். குறிப்பாக நீத்தார் பெருமை எனும் அதிகாரத்தில் கூறப்பட்ட ஒழுக்கத்தை நாயான்மார்கள் மேற்கொண்டு ஒழுகியமையைச் சேக்கிழார் ஆங்காங்கு சுட்டிக்காட்டி உணர்த்துவார்.

மானக்கஞ்சாற நாயனார் புராணத்தில், நாயனாரின் வாழ்க்கைத் துணைவியாரைக் குறிப்பிடும் பொழுது ''மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக் கிழத்தியார்'' என்று புகழ்கின்றார். இங்கு ''தெய்வந்தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்பெய்

## கோயில்களுக்குச் செல்ல சிறிய விமானங்கள்

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய கோயில்களுக்கும், சுற்றுலா மையங்களுக்கும் சிறிய விமானங்களை விடலாம் என்று முடிவு செய்து இருக்கிறோம். இதுபற்றி மத்திய அரசுடன் பேசுவதற்காக டெல்லி செல்ல இருக்கிறேன். இந்த போக்குவரத்துமூலம் சிதம்பரம், தஞ்சாவூர், மதுரை, திருச்செந்தூர், பழநி ஆகிய முக்கிய நகரங்கள் இணைக்கப்படும்.

—பழநியில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் ஆர் எம்.வீ.

யெனப் பெய்யும் மழை'' என்ற குறட்பாவின் கருத்தை அழகாகப் பொருத்தியுள்ளார். இது போன்ற பல இடங்கள் திருத்தொண்டர்புராணத்தில் காணலாம்.

இனி சித்தாந்தச் சாத்திர நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள குறட்பாக்களைப் பார்ப்போம்.

பதினான்கு சாத்திர நூல்களில் எட்டினை அருளிய உமாபதிசிவாச்சாரியார் 'நெஞ்சுவிடுதூது' எனும் சாத்திரத்தில்,

''தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர்'' என்று-நிலைத் தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்''..

அமையாதே என்று தம் நெஞ்சுக்கு வலியுறுத்துகிறார். திருக்குறளை 'மெய்வைத்த சொல்' என்றும் திருவள்ளுவரை 'நிலைத்தமிழின் தெய்வப் புலவர்' என்றும் போற்றிப் புகழ்கின்றார்.

மேலும் உமாபதியார் அருளிய 'சங்கற்பநிராகரணம்' எனும் சாத்திரத்தில் சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லியவண்ணம் செயல்'' என்னும் திருக்குறளை நயம்பட அமைத்து

''சொல்லுதல் எளிது அரிது அத்தொழில் புரிவ எனப்
பல்லிய பழமொழி புதுக்கினை'' என்கிறார்.

திருக்கடவூர் உய்யவந்த தேவர் அருளிய 'திருக்களிற்றுப்படியார்' என்ற சாத்திர நூலில்,

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டினஃது ஒன்றுமே வேண்டுவது- வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமைய வேண்டிடு
வேண்டாமை வேண்டுபவன் பால்''

எனவரும் பாடல், 'வேண்டுங்கால் வேண்டும்
வாமைமற்றது வேண்டாமை வேண்டவரும்'' என
குறளுக்கு விளக்க உரையாக அமைந்துள்ளது.
எடுத்துக் கூறுவதை சாதிப்பதற்குப் பொய்
மொழியாகிய திருக்குறளை மேற்கொள் கா
கிறார்.

மற்றுமோர் இடத்தில், ''சார்புணர்
சார்புகெடவொழுகி'' என்றமையாற்சார்புண
தானே தியானமுமாம்'' என்று சாதிக்கின்றார்

அருணந்தி சிவாச்சாரியார் அருளிய சிவஞ
சித்தியார் சுபக்கத்தில் திருக்குறள் கடவுள்வாழ்
முதற்பாவாகிய ''அகர முதல எழுத்தெல்
ஆதி பகவன் முதற்றே உலகு'' என்பதற்கு வி
கம் தருகின்றார்.

''அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம்
போல நின்றனன் சிவனும் சேர்ந்தே''
என்கிற

இவ்வாறு திருமுறைகளிலும் சித்தாந்த சா
ரங்களிலும் ஆங்காங்கு பல இடங்களில் திருக்கு
மணம் வீசுவதைக் காணலாம். சிவசின்னமா
அக்கமணிகள் எவ்வாறு ஒரு நூலினால் பிணை
பெற்று அக்கமாலையாகக் காட்சி தருகின்ற
அதுபோல திருமுறைகளும் சாத்திரங்களும்
குறளால் பிணைக்கப்பெற்று மெய்கண்ட மா
யாக விளங்குகின்றது. ஆகவே திருக்குறளை
சித்தாந்தச் சைவநூலாகக் கொள்வதில்
இல்லை. அது இன்று பொதுமறை என்று போ
படுவது, சைவத்திற்கு ஒரு சிறப்பேயாகும். சை
தின் பொதுத் தன்மையும் பரந்த நோக்
அதன்மூலம் வெளிப்படுகின்றனவே ஒழிய, வே
என்று மகிழ்வோமாக!

---

## பெரியதை விளக்கும் குறள்கள்

- உலகத்தை விட பெரியது எது?

  காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
  ஞாலத்தின் மாணப் பெரிது (102)
  (உரியகாலத்தில்செய்யப்பட்ட உதவியே உலகத்தைவிட பெரியதாகும்)

- கடலை விட பெரியது எது?

  பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
  நன்மை கடலிற் பெரிது (103)
  (பயன்நோக்காமல் செய்யப்பட்ட உதவியே கடலைவிட பெரியதாகும்)

- மலையை விட பெரியது எது?

  நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
  மலையினும் மாணப் பெரிது (124)
  (அறிவில் சிறந்தவராய் இருந்தும் அடக்கமாய் இருப்பவர் உயர்வே மலையைவிட பெரியதாகும்).

# அருங்கலை வளர்த்த அருள்மொழிவர்மன்

டாக்டர் இரா. கலைக்கோவன், திருச்சி

தமிழகத்தின் தலைவிதியை மாற்றி அமைத்த பல்வேறு போர்களுள் குறிப்பிடத் தக்கது திருப்புறம்பியம் போராகும். கி.பி. [illegible]-இல் நடந்த இப்போர், தலையாலங் கானத்துப் போருக்கும் பிளாசிப் போருக்கும் இணையாக வைத்துக் கூறப்படும் அளவு வரலாற்றை வழிமாற்றியமைத்த போராகும். இப்போரின் விளைவால் தமிழகத்தில் தலை நிமிர்ந்து ஆண்டு கொண்டிருந்த பல்லவப் பாண்டியப் பேராட்சிகள் சரியத் தொடங்கின. தஞ்சையில் தந்தை விசயலாயன் ஏற்றிய விளக்கை தூண்டி விட்டுச், சோழத் தொல் குடியின் பெருமை கொள் பேரரசுக்குத் திருப்புறம்பியம் போரால் வரைபடம் போட்டவன் முதலாம் ஆதித்தன். அதனைத் தொடர்ந்து அரியணை ஏறிய சோழ மன்னர்கள் ஒவ்வொருவரும் ஆதித்தன் கனவை நனவாக்க முனைந்தனர். இந்த முனைப்பான முயற்சிகளுக்கெல்லாம் மகுடம் சூட்டவந்தவன் போல், சோழப் பெருங்குடியின் ஈடுஇணையற்ற ஒளிப் பிழம்பாய்த் தோன்றினான் இராசராசன் என்று வரலாறு வாழ்த்தும் இணையற்ற பெருமகன். அருண்மொழிவர்மன், அருள்மொழி என்று செல்லமாகவும், அரசர்க்கரசன் என்று பெருமைப்படவும், மக்களாலும் மன்னர்களாலும் அன்போடும் விருப்போடும் அழைத்துப் போற்றப்பட்ட இப்பேரரசன், பண்புகளின் உறைவிடமாய்க், கலைவளர்த்த கோமகனாய்க் கருணை வள்ளலாய்க், காவிரி மண்ணின் பெருமைகளை இந்தக் காசினிக்கு உணர்த்தி வரலாறானவன்.

மன்னர்கள் தோன்றுவதும் மறைவதும் வரலாற்றுப் பக்கங்களில் வாடிக்கை. ஆனால் [illegible] நின்று, மக்களின் இதயத்தில் நிறைந்தவர்கள் வெகு சிலரே! அவருள்ளும், காலத்தின் கரங்களாலும் அழிக்க முடியாத [illegible] ஓவியம்போல் உலகே போற்றும் [illegible] தொட்ட உத்தமப் பேரரசன் அருள்மொழிவர்மன். வழக்கப்படி நடக்கும் வழக்கத்தை மாற்றிப் பல புதுமைகளைக் கண்ட புரட்சித் தலைவன் அவன். அவனால் தமிழகம் உலக அரங்கில் உயர்ந்தோங்கி நின்றறது. அப்பெருமக்களின் கண்பட்ட இடமெல்லாம் சோழர் கொடிபறந்தது. அவன் கால் பட்ட இடமெல்லாம் புனிதமானது. கைபட்ட இடமெல்லாம் கலை மலர்ந்தது. காணக் காண வியப்பில் மூழ்கி, உலகை மறந்து, கனவுலகில், மாய்ந்து போகவைக்கும் பல கலைச்செல்வங் களைப் படைத்தளித்த இப்பண்பாளனின் திருமுடி சூட்டுவிழா நடந்து இன்றைக்கு ஆயிரமாவது ஆண்டு தொடங்குகிறது. இந்தப் பெருமைக்குரிய ஆண்டில் கலைவளர்த்தஅந்தக் கோமகனின் கலையுணர்வைக் கொஞ்சம் தொட்டுப் பார்ப்போம்.

இரண்டாம் பராந்தகனுக்கும் வானவன் மாதேவிக்கும் ஐப்பசித் திங்கள் சதயத் திருநாளில் மகனாய்த் தோன்றிய அருண்மொழி வர்மன் தனக்கு உரிமையுடைய சோழர் மணிமுடியைத் தன் சிறிய தந்தையான உத்தமச் சோழ மதுராந்தகனுக்கு விட்டுக்கொடுத்து, அவனுக்குப் பின் முடிசூடி தியாகசீலனாய்த் திகழ்ந்தான். பல போர்க்களங்களைக் கண்டு சோழராட்சியைப் பலநாடுகளுக்கும் விரித்து, வடக்கே துங்கபத்திரையையும் தெற்கே ஈழத்தையும் எல்லைகளாக்கி, கடல்கடந்த முந்நீர்ப் பழந்தீவுகளையும் கைப்பற்றி ஒரு மாபெரும் பேரரசை உருவாக்கிய இப்பேராளன் வீரத்தில் சிறந்திருந்தாற் போலவே கலைகளிலும் தேர்ந்திருந்தான்.

இராசராசனின் ஆட்சிக்காலத்தை நுண் கலைகளின் பொற்காலமெனலாம். ஏறத்தாழ இருபத்தொன்பது ஆண்டுகள் சோழப் பேரரசின் மறக்க முடியாத மாமன்னனாய்த் திகழ்ந்தஇந்தஅருள்மொழிவர்மனின் போற்றத் தக்க கலைச் சாதனைகளை இவனுடைய

தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டுகள் பட்டியல் போட்டுக் காட்டுகின்றன.

கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை ஆடற்கலை, இசைக்கலை, வார்ப்புக் கலை, எழுத்துக்கலை ஆகிய அனைத்து நுண்கலைகளும் அருண்மொழிவர்மனின் அன்பான அரவணைப்பில் செழித்து வளர்ந்தன. அகண்ட பெருவெளியில் வானத்தைத் தழுவுவதுபோல் செம்மாந்து நிற்கும் தஞ்சைப் பெரிய கோயிலின் விமானம் ஒன்றுபோதும் அருள்மொழிவர்மன் காலத்துக் கட்டடப் பெருமைக்குக் கட்டியம் கூற. பலர் இக்கோயிலைப் பார்த்திருப்பார்கள். ஆனால் இக்கோயிலின் கட்டட அமைப்பு முறைகளைக் கண்டு தெளிந்தவர் மிகச்சிலரே. தாங்குதளமும் துணைத்தளமும் பல மடங்கு உயர்த்திக் கட்டப்பட்டதால், ஒரு மாடக்கோயில் போல காட்சிதரும் இக்கோயிலின் விமானந்தான் தமிழகத்திலேயே மிக உயரமான விமானமாகும். இந்த விமானத்தைக் கட்டியிருக்கும் பொறியியல் அமைப்பு முறைகளைக் கண்டு மேல்நாட்டவரே வியந்து போகின்றனர். அறிவியல் எல்லைமீறிவளர்ந்து பெருகியிருக்கும் இந்த நாளில் கட்டும் கட்டடங்கள் கூட, கட்டிய சில ஆண்டுகளில் விரிசல் விடுவதும், அடித்துவரும் வெள்ளத்தில் சில அணைகள் கரைந்து நொறுங்குவதும் கண்கூடாயிருக்கும்போது, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அருள்மொழி கட்டிய இந்த இறைக்கோயில் மட்டும் சின்னத் துன்பமும் இன்றிச் சிங்காரப் பேரெழிலாய் நிற்பது எப்படி? காலம் காலமாய நிற்கவேண்டும் என்ற பேரவாவின் விளைவாய், நிறைந்த கவனத்துடன், முன்கூட்டிய திட்டங்களின் தெளிவான அடிப்படையில் அறிவும் உண்மையும் அறவழி நெஞ்சும் கொண்ட பொறியியல் வல்லுநர்களின் பொறுப்பான மேற்பார்வையில் கட்டப்பட்ட இறைக்கோயில்களுள் எதுதான் விழுந்தது? மக்களின் கவனிப்பின்மையும் சமயக் காழ்ப்புகளும்தான் சில கோயில்கள் சுவடழிந்து போனமைக்குக் காரணமே தவிர, கட்டப்பட்ட முறையோ கலவைப் பொருட்களின் குறையோ அல்ல.

அருண்மொழிவர்மனின் செல்லப்பிள்ளையான பெருங்கோயிலின் விமான அமைப்பைப் பார்ப்போம். வெளியில் இருந்து பார்க்கும் போது ஒரே சுவராகக் காட்சியளிக்கும் இவ் விமானம், கருவறையின் உள்ளே சென்றவுடன் தான் இரண்டு சுவர்களைக் கொண்டுள்ளதாகக் கட்டப்பட்டுள்ள அதிசயம் விளங்கும். வெளிச் சுவர் உட்சுவர் இவ்விரண்டுக்கும் நடுவிலுள்ள இடைவழி இரண்டு மீட்டர் அகலமுள்ளது. இவ்வாறு இருசுவர்கள் இரண்டு தளங்கள் வரை செல்கின்றன. பின்னர் இச்சுவர்களைச்சிறிது சிறிதாகக் குறுக்கி, இரண்டு சுவர்களையும் ஒரே சுவராக்கியுள்ளனர். இதன்மேல்தான் அருண்மொழியின் எழில் கொஞ்சும் விமானம்
ஏகாந்தமாய் எழும்புகிறது. கருவறையின்
புறத்திலிருந்து பார்த்தால்தான் அ
மாபெரும் விமானக் கட்டுக்கோப்பை எப்
200 அடி உயரத்திற்குக் கொண்டு சென்
ளார்கள் என்ற பேருண்மை விளங்கும்;
மைகள் புரியும். கலைநுணுக்கம், பொறிய
வல்லமை, கட்டடக் கலைத்திறன், அ
ணர்ச்சி என்று அத்தனைத் திறனும் மொ
மாய்ச் சேர்த்து உருவாக்கிய உலகு ப
விமானம் அது!

தஞ்சைப் பெருங்கோயிலின் கருவ
சுவர்களின் நடுவில் உள்ள இடைவெளி,
வறையின் இருதளங்களிலும் உண்டு. இ
இடைவெளிகளின் உட்சுவர்களில்தான்
தளத்தில் ஓவியங்களும், மேல்தளத்தில் த
டவச் சிற்பங்களும் உள்ளன. அருண்மொ
வர்மனின் கலையார்வத்துக்கும், அவன் கா
தில் கலைகள் பெற்றிருந்த இமாலய வளர்ச்
கும் இந்த இரண்டுதளக் காட்சிகளே சா
பகர வல்லமை.

பல்லவர்களின் ஓவியக் கலையாற்றல
கைலாசநாதர் கோயிலிலும், பனை
யிலும் பார்க்கிறோம். முற்காலப் பாண்டி
களின் கைவண்ணத்தைச் சித்தன்னவா
சிறப்பாகக் காட்டுகிறது. என்றாலும்இவற்
யெல்லாம் தூக்கிச் சாப்பிடுவதுபோல், தஞ்
பெருங்கோயில் ஓவியங்கள் அழகுடன் தி
கின்றன. தென்புற உட்சுவரில் ஆலின்
அமர்ந்த அண்ணலாய்ச் சிவபெருமான்
டப்பட்டுள்ளார். மேற்புறச் சுவரில் சுந்தர
இறைவன முதியவர் வேடத்தில் வந்து
தாட்கொண்ட வரலாறு வரையப்பட்டுள்
மூன்று பகுதிகளாகக் கீழிலிருந்து மேலே
மணத்திற்கு அமுது சமைக்கும் காட்சி,
மேடைக் காட்சி முதலியன முதலாவதாக
சுந்தரர்தில்லையில் ஆடவல்லானைக் க
வணங்குவது இரண்டாவதாகவும் சுந்தர
சேரமான் பெருமாளும் கயிலை செல்
காட்சி மூன்றாவதாகவும் அமைந்துள்
இந்த ஓவியங்களுடன், இராசராசனும்
ஊர்த்தேவரும் நிற்கும் காட்சி, மூன்று
லர்கள் நிற்கும் காட்சி, ஆடல் மகளிரின்
புதத் தோற்றங்கள் எனப் பலப்பல அழ
வியங்கள் இங்குள்ளன. ஓவியக்கலையில் அ
மொழிக்கு எத்தனை ஆர்வம் இருந்திருந்
தான் படைத்த பெருங்கோயிலின் கரு
உட்சுவரை அதற்குப் பயன்படுத்தியிருப்
கலைகளைத் தெய்வமாய் அப்பெரு
மதித்ததால்தான் இறையிருக்கும் இ
லேயே, விழிகளுக்கு இதமூட்டும் வண்
கலவைகளில் இந்த ஓவியக் காட்சிக
படைத்து வைத்தான்.

ஆடற்கலைக்கு அருண்மொழி
இடம் இன்னும் பாராட்டற்குரியதாகும்.

கருவறையின் இரண்டாம் தளத்து உட்சுவரில் பரதரின் ஆடற்கலை நூலில் காணப்படும் நூற்றெட்டுக் கரண வகைகளுக்கும் சிற்பங்கள் வடிக்க இம்மன்னன் எண்ணம் கொண்டான். ஆனால் எண்பத்தோரு கரணவகைகளின் இலக்கணங்களுக்கே இலக்கிய வடிவம் தர முடிந்தது. முழுவதும் முடிவதற்குள் இவன் ஆயுள் முடிவுற்றதோ என்று எண்ணவேண்டியுள்ளது. பரதரின் ஆடற்கலை நூலுக்கு இப்படியொரு அற்புதமான விளக்கத்தை இதற்கு முன்னும் சரி, பின்னும் சரி எந்த அரசனும் படைக்கவில்லை. தில்லையில் காணப்படும் கரணச் சிற்பங்களில் பல இலக்கணக் கோட்பாடுகளை ஏமாற்றி நிற்பவை. ஆனால் தஞ்சைச் சிற்பங்களோ இலக்கண வரிகளில் இழைந்து நிற்பவை. தலபுஷ்பபுடத்தில் தொடங்கி சர்பித கரணத்தில் முடியும் எண்பத்தோரு கரணவிளக்கச் சிற்பங்களும் அருண்மொழி காலத்தில் ஆடற்கலைக்கு இருந்த மதிப்பையும், ஆடற்கலை பெற்றிருந்த அபரிதமான வளர்ச்சியையும் காட்டுகிறது.

சிற்பங்களை வடித்து பரதரின் ஆடற்கலை நூலுக்கு அழியாத வடிவம் கொடுத்ததுடன் அருண்மொழி நின்றுவிடவில்லை. தமிழகமெங்கிலும் உள்ள திருக்கோயில்களில் இருந்து ஆடல் சிறந்த மகளிரை வரவழைத்துத் தன் பெருங்கோயிலில் பணிக்கமர்த்தினான். தளிச்சேரிப் பெண்டுகள் என்றழைக்கப்படும் இந்தப் பாவையர் கூட்டத்தைக் குடியேற்ற தனிக் குடியிருப்புகளை அமைத்து; ஒவ்வொருவருக்கும் ஒரு வீடளித்து அவரவர்கட்கு வேண்டிய நிலம் அளித்துக் கலைப்பணியாற்ற வைத்தான். இப்பெண்கள் நக்கன் என்னும் முதற்பெயரும், தமக்குரிய இயற்பெயரும் கொண்டு விளங்கினர். அரச குடும்பத்து மங்கையர் [illegible]ரைச் சிலர் கொண்டிருந்தனர். ஒருத்தி இராஜராஜன் மீது கொண்ட அளப்பரிய காதலால் 'ராஜராஜி' என்றே பெயர் கொண்டிருந்ததாக டாக்டர் நாகசாமி குறிப்பிடுகிறார். இவள் [illegible]ர்மாகாளத்திலிருந்து தஞ்சைக்கு வந்தவள். இவருக்குத் தெள்குத் தளிச்சேரித் தென் சிறகில் அறுபத்து மூன்றாம் எண்ணுள்ள இல்லம் அளிக்கப்பட்டதாகத் தளிச்சேரிப் பெண்டுகளின் பட்டியல் காட்டும் கல்வெட்டு உணர்த்துகிறது. பெருங்கோயில் விமானத்தில் தென்புற உட்சுவரின் இறுதியில் காணப்படும் ஓவியங்களில் இப்படியொரு ஆடல் மங்கையின் ஆடல்தோற்றம் காட்டப்பட்டுள்ளது. அழகெல்லாம் திரண்டு அவளே ஆனதுபோல் காட்சிதரும் அந்த ஒல்காப் பேரழகியின் இயல்பை மீறிய ஆடல்தோற்றம் ஆடற்கலையின் அற்புதமாகும். இடது காலை மடித்துத் தூக்கிய நிலையிலும் வலதுகாலை ஊன்றிய நிலையிலும், இடுப்பை வளைத்து வலக்கையை உயர்த்தி ரேசிதமாக வீசி இடக்கையை மடக்கி அற்புத முத்திரை காட்டி முகத்தை நமக்காய்த் திருப்பி, தலை யலங்காரமும், பார்வைப் பின்னல்களின் பேரெழில் முழுவதும் பாங்காய்த் தெரியும்படி இலேசாய்ச் சிரித்து இலேசாய்ச் சினந்தஇந்த சிங்காரத் திருக்கோலம், இது ராஜராஜியாய் இருக்குமோ என்று நம்மை எண்ணவைக்கிறது. மற்றஓவியங்களில் எல்லாம் ஆடல்மகளிர் இணையாக அல்லது துணையோடு காட்டப்பட்டிருக்கும்போது இவள்மட்டும் தனியாக ,அதுவும் புதுமையானதொரு ஆடற்கோலத்தில் பின்புற எழிலும், முன்புற அழகும் இணைந்து தெரிய, ஆடல் உலகத்தின் அதிசயப் பொருளாய்க் காட்டப்பட்டிருப்பதன் பொருள் என்ன? அருண்மொழி இந்த ஆடல் அழகிக்கு மட்டும் தன் ஓவியக்கூடத்தில் தனியிடம் தந்து சிறப்பித்ததேன்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் இராஜராஜனுக்கும் இராஜராஜிக்கும் இருந்த காதலைக் காட்டுவதாய்க் கொள்ளலாமோ?

தளிச்சேரிகளில் அமர்த்திய இந்நானூறு ஆடல் மகளிர்கட்கும் நாயகம் செய்ய, சாவூர் பரஞ்சோதி, கோவிந்தன் சோமநாதன் ஆகியோர் அமர்த்தப்பட்டனர். நட்டுவம் செய்ய மும்முடி சோழ நிருத்தமாராயன் முதலான ஐவர் இருந்தனர். உடுக்கை, மத்தளம், சங்கு முதலியன இயக்கவும் வேண்டியவர் அமர்த்தப்பட்டனர். இசையில் அருண்மொழி கொண்ட காதல், திருப்பதியம் ஓத ஐம்பது ஓதுவார்களை இக்கோயிலில் அமர்த்திய அவனுடைய செயலால் புலனாகிறது. கொட்டாட்டுப் பாட்டுக்கென பஞ்சவன் மாதேவி நாடகமய்யன், திருவெள்ளறை சாக்கை முதலியோர் இருந்தனர். சுப்பிரமணியக்கூத்தனான செம்பியன்ஆதித்தன் அரையன் சதாசிவன் ஆகியோர் வீணை வாசித்து இறைக்கோயிலில் இசை வளர்த்தனர்.

பல்வேறு துறை சார்ந்தவர்களும் அருண்மொழியின் காலத்தில் கலையறிவு பெற்றிருந்தமை பெருங்கோயில் கல்வெட்டுக்களால் பெறப்படும் பெருமைக்குரிய செய்தியாகும். இசைக்கருவிகள் பலவற்றை இசைக்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள் அருண்மொழியின் படையிலேயே மிகுந்திருந்ததைநோக்கும்போது வியப்பால் நெஞ்சு விரிகிறது. குழலூதுபவன் குதிரைப்படையில் இருந்தும், பக்கவாத்தியம் வாசிப்போர் பலர், யானைப்பாகராகவும், வேளைக்காரராகவும் இருந்தமையையும் அருண்மொழியின் கல்வெட்டுக்கள் அறிவிக்கும்போது, வீரமும், நளினமும் அருண்மொழியிடம் மட்டுமல்லாது அத்தனைபேரிடமும்எப்படி ஒருங்கே குடிகொண்டு ஒல்காப் புகழ்பெற்றன என்பது வியப்பாகவே இருக்கிறது.

வார்ப்புக்கலையில் அருண்மொழி தன் பாட்டி செம்பியன்மாதேவி போலவே ஆர்வம் காட்டினார். இவ்விருவராலும் செய்தளிக்கப் பெற்ற செப்புத்திருமேனிகள் கணக்கற்றவை. கண்ணைப்பறிக்கும் எழில்கொழிப்பவை.

தஞ்சை ஆடவல்லான் திருமேனிகளும், பிற கோயில்களில் காணப்படும் செப்புத்திருமேனிகளும் சோழர் காலத்து வார்ப்புக்கலை வளர்ச்சியின் உச்சங்கள் எனலாம். பொள்ளலாகவும் கனப்பொள்ளலாகவும் திருமேனிகளைச் செய்தளித்து, சோழநாட்டுக் கலைவல்லார் திறமைகளை வெளிச்சமிட்டுக் காட்டியவன் அருண்மொழி.

பெருங்கோயில் சிற்பங்களும், அவன்தேவி உலகமாதேவி எழுப்பிய வடகயிலாயம் திருவலஞ்சுழியிலுள்ள சேத்திரபாலர் கோயில், உலகபுரம் திருக்கோயில் முதலியவற்றிலுள்ள சிற்பங்களும் சிற்பக்கலையின் சிகரங்களாகும். கோயில் புறச்சுவர் முழுவதும் பிச்சையுகக்கும் பெம்மான், அரிஹரன், அம்மையப்பர், லிங்கோத்பவர், கங்காதரர், பாசுபதர், சந்திரசேகரர், கங்காளர் என்று சிற்பநூல்கள் காட்டும் இறைவன் திருக்கோல வடிவங்களையெல்லாம் கல்லில் காவியமாக்கி வைத்தவன் அருண்மொழி. மூன்றிமையக் கோயிலின் வாயில்கள் மூன்றிலும் காணப்படும் வாயிற்காப்போர் சிலைகள் ஒவ்வொன்றும் 19 அடி உயரமுடையவை. ஒரே கல்லில் பொறிக்கப்பட்டவை. அற்புதமான அழகுடையவை.

கலைவளர்த்துக் களித்த அருண்மொழியிடம் வேறு மன்னர்களிடம் பார்க்கமுடியாத சில அருங்குணங்கள் இருந்தன. இன்றைய நாகரிகச் சமுதாயத்தில் எல்லோரும் சமம் என்று பேசுகிறோம் அல்லவா? அதைப் பத்து நூற்றாண்டுகளுக்கு முன்பே செய்துகாட்டிய செம்மலாய் அருண்மொழி காட்சியளிக்கிறான். கோயிலில் பணியாற்றிய தொழிலாளர்க்கெல்லாம் பெரும் சிறப்புகள் செய்து, தொழிலாளர் நல அரசாகத் தன் அரசு இருந்தமையைக் கல்வெட்டுக்களால் மெய்ப்பிக்கிறான். பள்ளித் தொங்கல் பிடிப்பவனுக்குத் தொங்கல் பேரரையன் என்றும், இசைக்கருவி வாசிப்பவனுக்கு நித்தவினோதவாய்தமராயன் என்றும், நிருத்தம் பார்த்தவனுக்கு மும்முடிசே நிருத்தமாராயன் என்றும் பலபலப்பட்ட களை வழங்கித் தொழில் செய்பவர்கள ஒரு அரசன் எவ்வளவு உயர்ந்த நிலை இருத்தி மகிழ்விக்க முடியுமோ அத்தன உயர்ந்த நிலைக்குக் கொண்டுபோய்ச் சி பித்தவன் அருண்மொழி.

அறக்கொடைகளை அள்ளித்தரும்போ கூட, தானும் வீரர்களும் கலந்துகொடுப் போல் சில கொடைகளை அமைத்தான் அரு மொழி. அதன்மூலம் ஒரு கொடையின் பா பொருளைத் தான்கொடுத்து மறுபாதி தன் படைவீரனைத் தரச்செய்து ஒ கொடைக்கான கல்வெட்டில் தன்பெயரை படைவீரன் பெயரையும் ஒருங்கேபொறித் மன்னன் மக்கள் நடுவில் எந்த பேதமுமில் என்று காட்டியதுடன், கொடையால் விளை புண்ணியத்தையும் பங்கிட்டுக்கொண் மகிழ்ந்த பேராளனாய் அருண்மொழி காண்கிறோம்.

அலெக்சாந்தர், அசோகர், அக்பர், போலியன் என்று மாபெரும் பேரரசர்க வீரர்களாக மட்டுமே இந்த உலகம் சந்தித் ளது. அருண்மொழி அவர்களிலும் மே வனாய் வீரம் மட்டுமே அரசனின் தனிச்சொ என்றில்லாது, கலை பல வளர்த்து, மக்க சியே மன்னனாட்சி என்பதுபோல சீ தொரு அரசாட்சி முறையை அமைத்து, தமிழகத்தின் பெருமையை தரணிக்கு உ தினான். தட்சிணமேரு என்றும், தேவா களின் சக்கரவர்த்தி என்றும் கலையறி ளால் போற்றப்படும் தஞ்சைப்பெரியகோயி எடுப்பித்து, அதைக் கலைவளர்க்கும் க லாக்கி மகிழ்ந்தான். ஒப்பாரும் மிக்கா இன்றி வாழ்வியலிலும், உலகியலிலும் மாந்து விளங்கிய அருண்மொழியின் நினை தஞ்சைப் பெரியகோயில் உள்ளளவும் இ தமிழ் மண்ணிலிருந்து மறையாது மேரு விளங்கும் என்பது திண்ணம்.

---

# இன்சொற்களில் கைலாயம்

புண்ணிய பாவங்கள் நம் விருப்பம் காணீர்!
'ஐயா' எனில் சுவர்க்கம்
'ஏலே' எனில் நரகம்
'தேவனே' 'திருவே' 'அடியவர்பேறே' எனும் சொற்களில்
கைலாயம் அமைந்ததே கூடல சங்கம தேவா!

''எங்கிருந்து வந்தீர்கள்? நலமா?'' என்று கேட்டால்
உங்கள் செல்வம் சிதறி விடுமா?
''அமருங்கள்'' என்றால் நிலம் பாழாகுமா?
வந்தவரோடு உடன்பேசினால் தலையும் வயிறும் வெடிக்குமோ?
ஏதும் தாராவிடினும் குணமில்லா திருப்பின்
அவர் மூக்கை அறுத்தெரியா திருப்பனோ கூடலசங்கம தேவன்.

—மகான்

திருக்கோயில் ஆசிரியர்

"சித்தாந்தப் புலவர்மணி" **ந. ரா. முருகவேள்**

# மறைவுக்கு அஞ்சலி

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'' (236)

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு எடுத்துக் காட்டாய் விளங்கிய சான்றோர் பெருந்தகை நம் திருக்கோயில் ஆசிரியர் ந. ரா. முருகவேள் அவர்கள் 7.4.85 அன்று இரவு இறைவனடி சேர்ந்துவிட்டார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

சைவ சமய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு அவருடைய மறைவு என்பது அனைவரும் ஒத்துக்கொள்ளக் கூடிய உள்ளங்கை நெல்லிக்கனி உண்மையாகும். இதனைத்தான் நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர் பெருந்தகை மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் அவர்களும் 25.6.85 அன்று மயிலை கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற சேக்கிழார் விழாவின் முதல் நாள் மாலை நிகழ்ச்சியில் ''புலவர் ஏறு'' ந. ரா, முருகவேள் அவர்களின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து பாராட்டியபோதும் குறிப்பிட்டார்கள்.

"செந்தமிழ் வேந்தர்'' ந. ரா. முருகவேள் அவர்கள் சென்னை தாம்பரம் அருகில் உள்ள [illegible]புரம் கிராமத்தில் 17.11.1924-இல் திரு [illegible]சாமி, திருமதி சிவகாமி அம்மாள் பெற்றோர்க்கு ஆகச்செங்குந்தர் குலத்தில் பிறந்தார். அவருடைய இயற்பெயர் சுந்தரராசன் என்பதாகும். "முருகவேள்'' என்ற திருப்பெயர்-தமிழ்ப் பெயர் அவருக்கு மறைமலை அடிகளார் இட்டதாகும்.

"திருவாசகச் செல்வர்'' ந. ரா. முருகவேள் அவர்கள் தம்முடைய வாழ்நாளில் தமிழ்ப் பெருஞ்சான்றோர்களாகிய அருட்டிரு மறைமலையடிகளார், திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகள், செந்தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனார், சைவப்பெரியார் சச்சிதானந்தம் பிள்ளை, நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் போன்றவர்களுடன் பழகி அவர்களிடம் தம் அறிவை வளர்த்துக் கொண்டார்கள். நன்றி மறவாப் பண்பிற்கு எடுத்துக்காட்டாய் நாம் ந.ரா. முருகவேள் அவர்களைத்தான் கூறவேண்டும். அவரிடம் சிறிது நேரமே உரையாடிக் கொண்டிருந்தாலும் மேற்குறித்த சான்றோர்கள் தமக்களித்த தமிழறிவை எடுத்துக்கூறி மகிழாமல் இருக்க மாட்டார் நம் திருக்கோயில் ஆசிரியர்.

''மறைமலை யடிகள் நாவலர் நாட்டார்
வண்புகழ்ப் பண்டித மணியார்

துறைகலை போய சுப்பிர மணியத்
தோன்றலார் ஞானியார் அடிகள்

முறைதிகழ் சான்றோர் சச்சிதா னந்தர்
மூதறி ஞர் திரு வி.க.

பிறபிற பெரியோர் புலமையும் தொண்டும்
பெரிதுணர்ந்த அவர் அடி பணிவாம்''

என்ற கவிதையும் தம் ஆசிரியப்பெருமக்களின் அறிவுத்திறத்தைப் பெரிதும் போற்றி ''சித்தாந்த வித்தகர்'' ந.ரா. முருகவேள் புனைந்ததாகும்.

கரந்தைப் புலவர் கல்லூரியில் தமிழ் வித்துவான் பட்டத்திற்காகப் படித்துக் கொண்டிருந்த இளம் வயதிலேயே மிகச்சிறந்த கவிதைகள் புனைவதில் வல்லவராகத் திகழ்ந்தவர், நம் ஆசிரியர். ''சிறந்த வாழ்க்கை'' என்ற அவருடைய இருபத்திரெண்டாவது வயதில் எழுதப்பட்ட கவிதையில்தாம் எப்படி வாழவிரும்புகிறார் என்பதைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார். 32 விருத்தங்களால் ஆன அம்மிகப் பெரிய கவிதையிலிருந்து ஒரு இரண்டு விருத்தங்களை மட்டும் படித்துப் பாருங்கள்.

''உள்ளம் உருகித் திருமுறைகள்
உள்ள படியே பொருளுணர்ந்து

கள்ள நெஞ்சிற் கடையேனும்
கசிந்து நெகிழ்ந்து கண்ணீரும்

வெள்ளம் போல மிகப்பெருக,
விரும்பி நானும் தவறாமல்
கொள்ளும் அன்போ டோதும் நலம்
கூடும் வண்ணம் எனக்கருளே''

பத்து பாட்டும் தொகையெட்டும்
பழகிப் பயின்று தெளிந்துணர்த்து
மற்றும் உள்ள சங்கஞ்சார்
மாண்பின் மிக்க காப்பியங்கள்

பிற்றை நாளின் இலக்கியங்கள்
பெரிதும் சிறந்த இலக்கணங்கள்
கற்றே யுணர்ந்திப் பிறவியின் யான்
களித்து வாழ்வான் அளித்தருளே''

தமிழகத்தின் தலைசிறந்த ஆதினங்கள் எல்லாவற்றாலும் பட்டம் தரப்பட்டுப் பாராட்டப்பெற்றிருக்கும் ''ஞானத்தமிழாகரர்'' ந.ரா. முருகவேள் அவர்கள் எம். ஏ., எம். ஓ. எல்., பட்டங்களையும் வென்று சிந்தாதரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளியிலும் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியிலும் தமிழாசிரியராகப்பணியாற்றிப்பின் தாம்பரம் கிருத்துவக் கல்லூரியிலும் பணியாற்றியிருக்கிறார். அவருடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் தகுந்த இடம் ''திருக்கோயில்'' தான் என்பதால் ஆண்டவன்

அவரை நம் ''திருக்கோயிலுக்கு'' ஆசிரிய
1962செப்டம்பரில்அருள்பாலித்திருக்கின்ற
அன்றிலிருந்து அவர் இறைவனடி சேரும்வ
22½ ஆண்டுகள் ''திருக்கோயில்'' இத
சிறப்புமிகு ஆசிரியராகப் பணியாற்றிய
கிறார். 40க்கும்மேற்பட்ட நூல்கள் 400க்
மேற்பட்ட சமயக் கட்டுரைகள் காலத்
அழியாதவை- அவரால் தமிழ்த் தாய்க்
காணிக்கையாக்கப்பட்டிருக்கின்றன.

அரசுப்பணியில் 58 வயது நிறைவு பெ
வர் ஓய்வுபெறவேண்டும் என விதி உ
போதும், நம் திருக்கோயில் ஆசிரிய
புலமைப்பெருஞ்சிறப்பை அரசே பாரா
அவருக்கு மேலும் மேலும் பணி நீட்
வழங்கியுள்ள பெருமையை நாம் குறிப்பிட்
வேண்டும். இன்னும் அவர் நூறாண்டுக்க
வாழ்ந்திருந்தாலும் அவரே ''திருக்கோ
இதழின் நிரந்தர ஆசிரியராக இருக்க
ஆணை பிறப்பித்திருக்கக்கூடும். ஆ
இறைவன் தம் உலகின் கண்ணும் த
சான்றோர் வேண்டும் என்பதற்காகத் தான்
தன்னேரிலாத் தமிழ்ப்பெருந்தகையை
லகத்திற்கு அழைத்துக்கொண்டானோ
எண்ணி ஆறுதல் அடையவேண்டி இருக்கி

—டாக்டர் த. அமிர்தலி

* *

தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் திங்கள் வெளியீடான ''திருக்கோயில்'' தமிழ் இதழின் ஆசிரியர் ''சித்தாந்த வித்தகர்'' புலவர் திரு **ந. ரா. முருகவேள்,** எம்.ஏ., எம்.ஓ.எல்., அவர்கள் 7.4.85 அன்று இரவு இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரின் மறைவுக்காக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பாகவும், ஆன்மிக அன்பர்கள் சார்பாகவும் எமது ஆழ்ந்த வருத்தத்தினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது பிரிவினால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கும் இதன் மூலம் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆன்மா அமைதி பெற எல்லாம் வல்ல திருவருளை இறைஞ்சுகிறோம்.

*ஆணையர் மற்றும் இந்துசமய*
*அறநிலைய ஆட்சித்துறைப் பணியாளர்கள்*

# தமிழகத்தில் திருத்தலங்கள்*

ந. ரா. முருகவேள், M.A.,M.O.L.,

முன்னுரை :

நமது தமிழகம், பலவகைச் சிறப்புகளை உடையது. நமது தமிழகத்திற்போல எண்ணில்லா திருத்தலங்கள் அமைந்திருக்கும் நாடு, வேறு பிறிதொன்றும் இல்லை எனலாம். ஆழ்வார்களும் நாயன்மார்களும் போன்ற அருட்பெருஞ் சான்றோர்கள் முறையாய்த் தோன்றி, தத்தம் பாடல்களில் போற்றிப் புகழ்ந்து துதித்து மகிழ்ந்த பழம்பெரும் தலங்கள் நூற்றுக் கணக்கில் அமைந்து, நம் தமிழகத்தை ஒப்புயர்வற்ற புண்ணிய பூமியாகச் செய்து புனிதப் படுத்தி வருகின்றன.

இப்புண்ணிய பூமியில் வந்து பிறப்பதற்குத் தேவர்களும்கூட, மிகவும் விரும்புகின்றனராம். "நாம் மண்ணுலகில்-பாரத தேசத்தில்-தெய்வத் தமிழ்நாட்டில் சென்று பிறக்கும்பேறு பெறவில்லையே! இங்கே விண்ணுலகில் இருந்துகொண்டு வாளா நம் வாணாளை வீணாக்கிக் கொண்டிருக்கின்றோமே? சிவபெருமானால் ஆட்கொள்ளப் படும் சிறப்பு, நிலவுலகில் சென்று பிறப்பவர்களுக் கன்றோ உரியதாக இருக்கின்றது'' என்று எண்ணி, திருமால் முதலிய தேவர்களெல்லாம் ஏக்கமுற்று நிற்கின்றனராம்.

இச்செய்தியை மாணிக்கவாசகர் தம்முடைய திருவாசகத்தில், திருப்பள்ளியெழுச்சி என்னும் திருப்பதிகத்தின் இறுதிப்பாடலில், அறுதியிட்டு, உறுதியாகச் சொல்லுகின்றார்.

புவனியிற் போய்ப்பிற வாமையில், நாள்நாம்
போக்குகின்றோம் அவமே; இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறு என்றுநோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்! திரு மாலாம்
அவன் விருப்பு எய்தவும், மலரவன் ஆசைப்படவும்,
நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள வல்லாய்!
ஆரமுதே! பள்ளி எழுந்தருளாயே!

மாணிக்கவாசகர் கூற்றின்படி, தேவர்களும் புண்ணிய பூமியாகிய இம் மண்ணுலகில் மனிதராய்ப் பிறந்தால்தான், இறைவனை வழிபடும் பேறும் வாய்ப்பு இனிது கைகூடுகின்றது. ஆகவே தேவர்களும் இப்புண்ணிய பூமியில் வந்து இறைவனை வழிபடுகின்றனர். அங்ஙனம் விண்ணுலகத் தேவர்களும் மண்ணுலகில் போந்து வழிபட்ட தலங்கள், எண்ணில்லாதன பல, நம் பாரத நாட்டிலும், தமிழ்நாட்டிலும் ஏராளமாக உள்ளன. அத் தெய்வத் திருத்தலங்களின் பெருமையை உணர்ந்து கொள்ளவும், அங்கெல்லாம் சென்று கண்டு தரிசித்து இறைவனை வழிபட்டு உய்யவும், மக்கள் முயல்கின்றனர் இல்லையே என்று, தாம் இயற்றிய சிவஞான சித்தியார் நூலில், சிந்தை நொந்து வருந்துகின்றார், அருள்நந்தி சிவாசாரியார்.

மானிடப் பிறவி தானும்
  வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும்
  அரன்பணிக் காக அன்றோ?
வானிடத் தவரும் மண்மேல்
  வந்தரன் தனைஅர்ச் சிப்பர்!
ஊனெடுத் துழலும் ஊமர்
  ஒன்றையும் உணரார் அந்தோ!

## திருத்தலங்கள் :

இவ்வாற்றால் தெய்வத் திருத்தலங்களின் சிறப்பும், தலவழிபாட்டின் மேன்மையும் இத்தகையன என்று யாவரும் உணரலாம். அருளாளர்கள் வாழ்கின்ற இடங்கள் புனிதம் அடைகின்றன; அவ்விடங்களில் அருளாற்றல் பதிகின்றது, அவ்விடங்களிலிருந்து அருள் அலைகளும், அருட் கதிர்களும் வீசுகின்றன. அவைகளின் மூலம் அவ்விடங்களில் அமைதி தரும் சூழ்நிலை ஏற்படுகின்றது. அது மட்டுமன்றி அவ்விடங்களுக்கு மேலுலகில் வாழும் அருளாளர்கள் வந்து செல்கின்றனர். அதனால் அவ்விடங்களில் அவர்களின் தெய்வீக நலங்களும் ஆற்றல்களும் பதிந்து பரவிப் பெருகுகின்றன. இவற்றால் அவ்விடங்கள் புனிதம் மிக்க புண்ணியத் தலங்களாக மாறுகின்றன.

நாம் நம் வாழ்க்கையில் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து நினைந்து காண்போமாயின், ஒருசில இடங்கள், வேறு பிறசில இடங்களைவிட மனத்திற்கு அமைதியையும், மகிழ்ச்சியையும் விளைவிப்பதைக் காணலாம். சில இடங்கள் மனம் குவிந்து தியானம் செய்வதற்கு ஏற்றதாகஇருக்கும். அவ்விடங்களில் தெய்வச் சிந்தனைகளும், நல்ல சமய உணர்வுகளும், பக்திநெறிப்பாவனைகளும் இயல்பாக உண்டாகும். ஆனால் வெறும் உலகியற் சிந்தனைகளும் செயல்களுமே நிகழ்கின்ற இடங்களிலும், வீண்பேச்சுக்கள், பயனற்ற பொழுது போக்குச் செயல்கள், வறுமொழியாளர் வம்பப் பரத்தர் போன்ற வீதியவர்கள் நடமாட்டம் ஆகியன நிகழும் இடங்களில், மேற்குறித்தவற்றிற்கு, நேர்மாறான இயல்புகளும் செயல்களும் அநுபவங்களுமே, நம்மிடம் நிகழ்தலை நாம் நம் வாழ்க்கையில் கண்டுணரலாம்.

இத்தகைய தீய இடங்களின் வேறாக, அருள் நிறைந்து விளங்கும் அருமை பெருமைமிக்க தூய

* மறைந்த ஆசிரியர் நினைவாக அவருடைய இக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

கர், குக்குட நடனம். திருக்கோளிலியில் அவனி விடங்கர், பிருங்க நடனம்; திருவாய்மூரில் நீல விடங்கர், கமல நடனம், திருமறைக்காட்டில் புவனி விடங்கர், அம்சபாத நடனம் என்று, தனித்தனிப் பெயர்களும், நடன வகைகளும் சிறப் பியல்பாக அமைந்துள்ளன. 'வகைப்பாடு வாழ்க் கையின் வளம்'(Variety is the Spice of Life) என்னும் அடிப்படையில், இறைவன் ஒருவனுக்கே இவ் வாறு வெவ்வேறு தலங்களில், வெவ்வேறு பெயர் களை வழங்கி, வெவ்வேறு நடனத்திறங்களையும் உரிமைப்படுத்தித் தொன்றுதொட்டுப் போற்றி மகிழ்ந்து ஈடுபட்டு வரும் தமிழ் மக்களின் தலை திறந்த கடவுள் உணர்வும், கலைத் திறனும், பொருந்தழும் பயப் சிறந்த கடவுள் உணர்வு; பெருமிதமும் நினைத்தொறும் இன்பமும் பெருமிதமும் பனவாகும். இந்தச் சப்த விடங்கத் தலங்களுள் ளைக்குறுவகை நடனங்களும் நேராகவே கண்டு

**முருகன் தலங்கள் :**

தமிழகத்தில் எத்தனையோ பல முருகனின் திருத்தலங்கள், மிகவும் புகழ் பெற்றனவாக விளங்குகின்றன. அருணகிரிநாதர் அருளிய திருப் புகழ்ப் பாடல்களைப் பெற்றுள்ள 'திருத்தலங்கள் அனைத்தும், முருகனின் தலங்களாகப் புகழ்மிக்கு விளங்கி வருகின்றன. எனினும், திருப்பரங்குன் றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவா வாவிநன்குடி (பழநி), திருவேரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல் (திருத்தணிகை), பழமுதிர் சோலை (அழகர்கோயில்) என்னும் ஆறு திருத் தலங்களும், திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் காலத்திலிருந்தே சுமார் 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக, முருகனின் புகழ் மிக்க தலங்களாகப் போற்றப் பெற்று விளங்கி வருகின்றன.

**அம்பிகையின் தலங்கள் :**

இவ்வாறே திருவொற்றியூரிலே வடிவுடை யம்மை, திருமயிலையில் கற்பகாம்பாள், காஞ்சி புரத்தில் காமாட்சியம்மை, திருவண்ணாமலையில் உண்ணாமுலையம்மை, சிதம்பரத்தில் சிவகாமி யம்மை, திருவானைக்காவில் அகிலாண்டேசுவரி, திருக்கழுக்குன்றத்தில் திரிபுரசுந்தரி, திருக்காளத்தி யில் ஞானப்பூங்கோதை, திருவையாற்றில் அறப் பெருஞ் செல்வியம்மை, திருவாரூரில் கமலாம் பிகை, கும்பகோணத்தில் மங்களநாயகி, நாகை யில் நீலாயதாட்சியம்மை, திருக்குற்றாலத்தில் குழல்வாய்மொழியம்மை, திருநள்ளாற்றில் போக மார்த்த பூண்முலையம்மை, திருநெல்வேலியில் காந்திமதியம்மை, வைத்தீசுவரன்கோயிலில்தையல் நாயகி, திருக்கடவூரில் அபிராமியம்மை, மதுரை யில் மீனாட்சியம்மை, இராமேசுவரத்தில் பர்வத வர்த்தினி, கன்னியாகுமரியில் பகவதியம்மை, திரு வேற்காட்டில் தேவிகருமாரியம்மை ஆகியஅம்பாள் திருக்கோயில்களாகிய சக்திபீடங்கள் பெரும் புகழ் வாய்ந்து திகழ்ந்து வருகின்றன. இவற்றின்அருமை பெருமைகளும் தனித்தனியான சிறப்பியல்புகளும் நேரில் சென்று கண்டுணர இயலுமேயன்றி, வெறும் சொற்களால் விவரித்துரைக்க இயலாதன வாகும்.

**சித்தர்கள் வாழும் தலங்கள் :**

தமிழகத்தில் உள்ள தலங்கள் பலவற்றில், சித்தர்கள் பற்பலர், பண்டும் இன்றும் என்றும் வாழ்ந்து வருகின்றனர் எனப் பெரியோர்கள் கூறுவர். பல தலங்கள் தெய்விகச் சிறப்பும் ஆற்ற லும் பெற்றுத் திகழ்ந்தோங்கி விளங்குதற்குக் காரணம், அவ்விடங்களில், சித்தர்கள் பலர்சமாதி கூடித் தவம் புரிந்து வருகின்றனர் என்பர். அதன் படி திருமூலர் சிதம்பரத்திலும், திருநந்தி சீர்காழியிலும், தன்வந்திரி வைத்தீசுவரன்கோ லும், கமலமுனி திருவாரூரிலும், சட்டைமுனி வரங்கத்திலும், கருவூர்த்தேவர் கருவூ போகர் பழநியிலும், சுந்தரானந்தர் மதுரை மச்சமுனி திருப்பரங்குன்றத்திலும், கும் திருவனந்தபுரத்திலும், கோரக்கர் திருப்பரு திலும், குதம்பைச் சித்தர் திருக்கழுக்குன் லும், அகப்பேய்ச்சித்தர் திருமுதுகுன்றத் பாம்பாட்டிச் சித்தர் திருக்கடவூரிலும், கவ முனிவர் திருக்காளத்தியிலும் பதஞ்சலிமு இராமேசுவரத்திலும், இடைக்காட்டுச் சித்த வண்ணாமலையிலும், இராமதேவர் அழகர் யிலும், வால்மீகி முனிவர் எட்டிகுடியிலும் வாழ்ந்து வருகின்றனர் என்று, கொண்டு வாழ்நது தலங்களின் பெருமையைப் பெரியோர்கள் பு கூறுவர்.

**முடிவுரை :**


''கடல்கண்டோம் என்பார் யாவரே வுறக் கண்டார்'' என்று. கவிச்சக்கரவர்த்தி பாடுதல்போல எல்லையற்ற பெருமைமிக்க கத்துத் திருத்தலங்களின் பெருமைகளை லாம், முற்றமுடிவுற எடுத்துச்சொல்லுவது. கும் இயல்வது ஒன்றன்று. எனவே, நாம் வரும் நம்முடைய குறுகிய சிறிய வாழ் பொன்னும் பொருளும் போகமும் பிறவுமே அலைந்துழலாமல், அவற்றிற்கு இடை யிலேனும் இயன்ற பொழுதெல்லாம் தலயாத் யும் வழிபாடும் செய்வதற்குரிய வாய்ப்பு களை, எவ்வாற்றானும் தேடி முயன்று துக்கொண்டு இறைவனை வழிபடல் வே

''மூர்த்தி தலம் தீர்த்தம்
முறையாய்த் தொடங்கினர்க்குஓ
வார்த்தை சொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே''


எனத் தாயுமான சுவாமிகள் அருளிச் ருத்தலால், தலயாத்திரையின் பயனும் யமையாமையும் இனையவென உணரலா னும் ''தவமும் தவமுடையார்க்கு ஆகும்'' திருவள்ளுவர் குறிப்பிடுவதற்கு ஏற்ப, இத் ஒரு சிறந்த நல்ல பேறும் வாய்ப்பும் வ செல்வவளம் பெற்றிருப்பினும் எல்லோ கிடைப்பதில்லை. எத்தனையோ பல பெருஞ் செல்வர்களாக இருப்பினும் தக்க வாய்ப்பும் பண்பட்ட நல்ல மனப்ப அமையப் பெறாமையால், தலயாத்திரை பாடும் செய்ய முடியாமல், உலகியற் லேயே வறிதே கிடந்து உழன்று அலைந்து இறந்து போகின்றனர். அவர்களின் நி பெரிதும் இரங்கத்தக்கது.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரான்அடி பேணா
பெறுதற் கரிய பிராணிகள் எல்லா
பெறுதற் கரியதோர் பேறுஇழந்தோ


எனத் திருமூலர் பாடுதல்போல, நா தற்கரிய பிறவியைப் பெற்றும், அதன் இழந்து போகாதபடி 'காலம் உண்டாக செய்து உய்மின்,என்று மணிவாசகர் பண தற்கு ஏற்ப, நம் தமிழகத்தில் உள் வைணவத் திருத்தலங்களையேனும் கண்டு வணங்கி, இறையருள் பெற்று வாழ முயலுவோமாக!



மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமித் திருக்கோயிலில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் 2-6-85 அன்று திருப்பணி துவக்க விழா செய்த நிகழ்ச்சி. மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களும், அறநிலையத்துறை ஆணையர் திரு. கு. ஆளுடையப் பிள்ளை, ஐ.ஏ.எஸ்., அவர்களும் உடன் இருக்கின்றனர்.



மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமித் திருக்கோயிலில் 2-6-85 அன்று நடைபெற்ற மலைப்பாதை மின்விளக்கு ஏற்று விழாவின்போது மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களும், அறநிலையத்துறை ஆணையர் திரு. கு. ஆளுடைய பிள்ளை, ஐ.ஏ.எஸ்., அவர்களும் மற்றும் தக்காரும் கலந்து கொண்ட காட்சி.



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தின் எழிலார்ந்த தோற்றம்

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

பதிவு எண். எம் 7